# நால்வர் நெறி




250.G
சைவ
SL/PR.

கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கம், கொழும்பு.

# TAILORS OF DISTINCTION!

COME TO

# SWANK

**FOR THE SWANKIEST**

OF

## SUITS SLACKS & SHIRTS

BE SWANKEY IN CLOTHES BY SWANK.

**SWANK**

**191, GALLE ROAD — COLOMBO 3.**



# நால்வர் நெறி

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
இல. 7. 57 ஆம் ஒழுங்கை,
கொழும்பு 6

சிறப்பு மலர் 2

ஆசிரியர்:

சைவ இளவல் சி. திருநாவுக்கரசு

துணை ஆசிரியர்கள்:

க. பாலசுப்பிரமணியம்

வ. இ. இராமநாதன்

பதின்நான்காவது ஆண்டு
நிறைவு விழா.

# NAALVAR NERI

1967

கொம்பனித் தெரு
சைவ முன்னேற்றச் சங்கம்
*131, ஸ்லேவ் ஐலண்ட் — கொழும்பு 2.*

நால்வர் நெறி
நலமுடன் மணக்க
நம் இதயம் கனிந்த
நல் வாழ்த்துக்கள்

# என். பி. அப்துல் கபூர்

கொழும்பு-13.

தொலைபேசி: 6080　　　　தந்தி: "கபூர் பிடி"

கொம்பனித் தெரு
சைவ முன்னேற்றச் சங்கத்தின்
"நால்வர் நெறியை"

வாழ்த்துகிறோம்!
பாராட்டுகிறோம்.

★

NEELMBIKAS
456, DEANS ROAD,
COLOMBO-10.

With best
Compliments
from

*Gnanam Traders*
No. 8, ADAMALI BLDS,
Kaymans Gate,
COLOMBO-11.

PUNCTUALITY IS THE KEY

NOTE

IN

**PRINTING**

CONTACT

*Colombo Printers*

85, Jayantha Weerasekera Mawatha,

COLOMBO-10.

Phone: 7334 Grams: "MERMAID"

With the best Compliments

of

**LOTUS STORE**

TEXTILE

MERCHANTS

157, Second Cross Street,

COLOMBO-11.

With best Compliments of

**H. A. AHMED & CO.,**

*IMPORTERS & WHOLESALE*

*DEALERS IN TEXTILES.*

38, Sea Street, — COLOMBO-11.

T'Grams: "Fast Colour" T'Phone: 79330

Head Office:

**BOMBAY STORES**

DICKOYA.

With best

Compliments

of

**OPATHA & CO.,**

13 & 15, ST. JOHNS ROAD,

COLOMBO.

With best Compliments from

# INDIRANI JEWELLERY

**THE RENOWNED HOUSE FOR DESIGN JEWELLERIES**

*Indirani Jewellery*

**151, Church Street, COLOMBO-2.**

வருக! வருக!

அறுசுவை உணவுக்கு அனைவரும் நாடுவது

# ராதா லாட்ஜ்

சுவையான உணவை சுகாதார முறைப்படி தயாரிப்பவர்கள்

# ராதா லாட்ஜ்

116, கியூ வீதி, — கொழும்பு-2.

கிளை: 342, பேஸ்லைன் ரோட், தெமட்டகொடை.

With best
Compliments
from

N. Ramanathan
KEGALLE.

With best
Compliments
from

ROHINI
TRADING CO.,
36, QUARRY ROAD,
COLOMBO-12.

T'Phone: 78426

*Please Patronize*
*Our Advertisers*
*They Help Us*
*Please Help Them*

உங்கள் கட்டிடம், வீட்டுத் தளபாடங்கள்,
மற்றும் எல்லாவித தேவைகளுக்கும் ஏற்ற
தேக்க மரங்களுக்கு

# மொறட்டுவ டீக் றேடர்ஸ் லிமிட்டெட்

ஸ்தாபனத்தாருடன் தொடர்பு கொள்ளுங்கள்

# மொறட்டுவ டீக் றேடர்ஸ் லிமிட்டெட்

319, காலி வீதி, — பம்பலப்பிட்டி.

தொலைபேசி: 7518

நவநாகரீக நங்கையர்களுக்கு ஓர் நற்செய்தி!

## உங்கள் மனம் போலவே
## நீங்கள் தோற்றம் அளிக்க

இன்றே எமது ஸ்தாபனத்தை நாடுங்கள்.

எம்மிடம்:- பிறிநைலோன், ஸ்பார்க்கிளிங்நைலோன், டெரிலின், பிரின்டட் நைலெக்ஸ் பிளேன் நைலெக்ஸ், ஹேன்ட் லூம்ஸ் சாரிகளுடன், சாதா & அச்சடி வொயில் சாரிகளும், இன்னும் எல்லாவித ஜவுளி வகைகளும் சகாயவிலையில் கிடைக்கும்.

ஜவுளி வகைகளில் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய வல்லது எமது ஸ்தாபனம் ஒன்றே.

# 'சாரதாஸ்'

96, & 98, யோர்க் வீதி, கோட்டை, கொழும்பு-1.

எங்கள் மனமுவந்த
அன்பளிப்பு

# சிவபாலன் பீடிக் கர்பேனி.

83, மெசஞ்சர் வீதி, கொழும்பு-12.

தொலைபேசி: தலைமைக்காரியாலயம்: 4929
இல்லம்: 83783

With best Compliments

from

# SIVAPALAN BEEDI CO.,

83, Messenger Street, COLOMBO-12.

T'Phone: Head Office: 4929
Residence: 83783

# நால்வர் நெறி

''மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலக மெல்லாம்''


## உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| வாழ்த்துப் பாமாலை | — | பொன். சதாசிவம் | |
| அன்புக் காணிக்கை | — | ஆசிரியர்கள் | |
| ஆசிச் செய்தி | — | ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமி அடிகள் | |
| ஆதரவாளர் ஆசிச் செய்தி | — | பேராசிரியர் அ. சின்னத்தம்பி | |
| நாம் போற்றும் நால்வர் நெறி | — | வே. பெ. சாமி | |
| ஆசிரியர் குரல் | — | | |
| தோத்திரப் பாமாலை | — | அருட்கவி சீ. விநாசித்தம்பி | 1 |
| சமயம் | — | பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை | 4 |
| ஆடல் வல்லோன் | — | வித்துவான் திருமதி. வசந்தா வயித்தியநாதன் | 5 |
| மாணிக்க வாசக சுவாமிகள் கண்ட தெய்வம் | — | சைவ இளவல் சி. திருநாவுக்கரசு | 8 |
| திருவாசகத்தில் மூன்று கனிகள் | — | புலவர் ம. பார்வதிநாதசிவம் | 10 |
| தம்பிரான் தோழன் | — | கி. வா. ஜகந்நாதன் | 12 |
| திருவள்ளுவரின் சமயக் கொள்கைகள் | — | செந்தமிழ் மாமணி—சித்தாந்த வித்தகர் மு. வயிரவப்பிள்ளை | 14 |
| பக்திக் கண்கள் | — | ஆ. கந்தையா M. A. | 18 |
| ஏன் பிறந்தார்? | — | சற்சொருபவதி நாதன் B. Sc., | 22 |
| இதுதான் வாழ்வு | — | இ. மகேஸ்வரன் B. Sc., | 24 |
| இவ்வாறு இறைவனை இறைஞ்சுவாம் | — | ம. சி. சிதம்பரப்பிள்ளை | 26 |
| திருவருளால் திக்குலா | — | கோவை — மணி | 27 |
| ''நால்வர் சமயப் பாடசாலை'' ''நால்வர் நூலகம்'' | — | | 34 |



### மாணவர் பகுதி


| | | | |
|---|---|---|---|
| முருகன் என் இறைவன் | — | செல்வி. சிவசாந்தி சிவலிங்கம் | 35 |
| அறிவுடையார் எல்லாம் உடையார் | — | செல்வன். பாலேந்திரன் கண்ணலிங்கம் | 36 |
| அறநெறி | — | செல்வி. சுலோச்சனு சுப்பிரமணியம் | 38 |

| | | | |
|---|---|---|---|
| கடவுள் | — | செல்வன். இரா. மனோரஞ்சன் | 39 |
| தட்சிணாமூர்த்தியின் சின் முத்திரை | — | செல்வன். சதாசிவம் ஆனந்ததியாகர் | 40 |
| ஆன்ம பாசத்தை நீக்கும் வழிகள் | — | செல்வி. பாலரஞ்சனி தம்பித்துரை | 41 |
| இறை வழிபாடு | — | ச. மு. விவேகானந்தன் | 42 |
| முருகன் பெருமை | — | செல்வி. சகுந்தலா பரஞ்சோதிநாதன் | 43 |
| தாளம் சப்ததாளம் | — | செல்வன். திருக்காமணி செல்லத்துரை | 45 |
| திருமுறை-நாவன்மை-கட்டுரைப் போட்டி முடிவுகள் | — | (1967) | 46 |
| கொழும்பு விவேகானந்த சபை சைவ சமயப் பரீட்சை பெறுபேறுகள் | — | (1966) | 48 |
| சம்பந்தர் இல்லம் – அப்பர் இல்லம் | — | | 50 |
| சுந்தரர் இல்லம் – மாணிக்கவாசகர் இல்லம் | — | | 51 |
| மாணவர் மன்ற அறிக்கை | — | (1966—1967) | 52 |
| பதினான்காவது ஆண்டறிக்கை | — | (1966—1967) | 53 |

# "நால்வர்"



கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தாரால்

கொம்பனித்தெரு

## ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில்

21 – 7 – 67ல் பிரதிட்டை செய்யப்பட்ட

நால்வர் விக்கிரகங்கள்

# அன்புக் காணிக்கை

வணக்கம்,

முன்னூற்றி அறுபத்தைந்து நாட்களை கடந்துவிட்டு அதற்கடுத்த நாளில் நாம் நின்றுகொண்டிருக்கின்றோம். ஆம்! ''நால்வர் நெறி'' முதலாண்டை கடந்து இரண்டாவது ஆண்டில் இன்று தான் தன் தளிர்க் கால்களை எடுத்து வைக்கின்றது. அதே நேரத்தில்! கடந்த பதின்மூன்று ஆண்டுகளாக உயிரோட்டத்துடன் வளர்ந்து வரும் கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தின் பதின்நான்காவது ஆண்டு நிறைவு விழாவின் சிறப்பு மலராகவும் இம்மலர் அணி செய்கின்றது

எமது சங்கத்தின் பதின்நான்காவது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடும் போது, வளர்ச்சியால் எழும் மகிழ்ச்சியும், பணியை போற்றும் உணர்ச்சியும் எம்மிடம் கிளர்ந்தெழுகின்றன. எமது மகிழ்ச்சியின் மலர்ச்சியே மங்களகரமான இம் மலராகும். ''நாலு பேர் சொற் கேட்டு நட'' என்ற நயவுரைக்கு அமைய சமய குரவர் நால்வர் வழியை பின்பற்றிப் பணியாற்றி, நால்வருக்கென தனி பொற்கோவில் அமைத்து, ''நால்வர் சமயப் பாடசாலை,'' ''நால்வர் நூலகம்'' என்ற நாமத்துடன் முறையே பாடசாலையொன்றினையும், நூலகமொன்றினையும் சிறப்புற நடாத்திவரும் எமது சங்கத்தினர் தம் சிறப்பு மலருக்கு ''நால்வர் நெறி'' என பெயரிட்டமை சிறப்புடமைக்கழகன்றோ!

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத் குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமி அடிகள், எமது சங்கக் காப்பாளராகிய பேராசிரியர் உயர்திரு. அ. சின்னத்தம்பி அவர்கள் ஆகியோரின் ஆசிச் செய்திகள் இம்மலரை அணி செய்கின்றன. இப்பெருந்தகையாளருக்கு என்றும் மறவா நன்றியைத்தெரிவித்துக்கொள்கின்றோம்.

இம் மலரில், ஈழத்து அறிஞர் பெருமக்கள் பலரின் அறிவுக் கருவூலங்களும், அளவையூர் அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்களது தித்திக்கும் தோத்திரப் பாமாலையும், திரு. பொன். சதாசிவம், திரு. வே. பெ. சாமி ஆகியோர்களின் அழகுமிகு வாழ்த்துப் பாக்களும், எம் சங்கத்து ''நால்வர் சமயப் பாடசாலை'' மாணவ மாணவிகளின் நற்பயன் விளைக்கத்தக்க கட்டுரை கவிதைகளும் இடம் பெறுகின்றன.

இவற்றுக்கெல்லாம் சிகரமாய் ஈழத்தின் ஈடு இணையிலாப் புகழ்பெற்ற பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களதும், தாய் நாட்டின் அறிவுக் கடலும், கலைமகள் ஆசிரியருமான உயர்திரு. கி. வ. ஜகந்நாதன் அவர்களதும் ஆக்கமிகு அறிவுக் கட்டுரைகள் இம் மலரை மேலும் பொலிவுடனும், புதுமையுடனும் மிளிரச் செய்கின்றன.

இவ்விதம் எமது மலருக்கு அழகு மணமும், அறிவூட்டும் ஞானத்தையும் தந்த ஈழத்து பெரியார்கட்கும், கடல் கடந்த பெரியோர்களுக்கும் நாம் பெரிதும் கடமைப் பாடுடையோம்.

இத்துடன் இம் மலருக்கு மனமுவந்து விளம்பரங்கள் தந்துதவிய வணிகப் பெருமக்களுக்கும், விளம்பரங்கள் சேகரிப்பதற்கு உற்ற துணை புரிந்த அன்பர்களுக்கும், இம் மலரை சிறந்த முறையில்—குறைந்த செலவில் உரிய காலத்தில் அழகுடன் அச்சிட்டு உதவிய இராஜேஸ்வரி அச்சகத்தாருக்கும் எமது சங்கத்தின் சார்பில் நன்றியறிதலைக் கூறி கொம்பனித் தெருவில் குடிகொண்டிருக்கும் ''ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமியின்'' திருவடிகளில் இம்மலரை எம் அன்புக் காணிக்கையாக அர்ப்பணிக்கின்றோம்.

— ஆசிரியர்கள்.

# நால்வர் நெறி

''சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்''


| பிலவங்க வருடம் | ஆவணித் திங்கள் | பத்தாம் நாள் | மலர் 2 |
|---|---|---|---|


கடவுள் ஒருவர் இருக்கிறாரா? அவரை எப்படி அடைவது? என்று ஒவ்வோர் உள்ளமும் துடிக்கிறது. அந்த ஆண்டவனை தம் அனுபவத்தில் காணாத வரை அவரை தூற்றுகிறார்கள். அதுவும் ஆண்டவனை அடையவேண்டும் என்ற துடிப்பினால் வரும் அன்புணர்ச்சிதான். ஆன்மாக்கள் தன்னை அடைந்து இன்பமாக வாழ்வதற்காக தனது லட்சணங்களை வேத ஆகமங்களுக்கூடாக முதல் முதலில் கல்லால மர நிழலில் இருந்து குருமூர்த்தியாக நால்வர்க்கு உபதேசம் செய்தார். அந்த உபதேசங்களை வெளிப்படுத்த தேமதுர தமிழ்மொழியை இலக்கண இலக்கியவிதிகளுடன் அகத்திய முனிவருக்கு உபதேசித்தார். அந்த தெய்வத்தமிழ் இன்றுவரை இறைவனை இலக்கியங்களால் புகழ்ந்து பாடுகிறது. தமிழ் இலக்கியங்களின் சிகரமாக விளங்குபவை தேவார திருவாசகங்கள்.

தேவார திருவாசகங்களைச் சிறப்பாக கொண்ட பன்னிரு திருமுறைகளையும், நாம் மெய்மறந்து பண்ணோடு பாடும்பொழுது, இறைவன் திருஉருவும், இறைவன் அடியார்களுடன் அன்பால் கலந்து நின்ற நிலையையும், அனுபவத்தில் உணர முடிகின்றது. இறை அன்பினால் அடியார்கள், தம்மை மறந்த நிலையில் இறைவனைப் புகழ்ந்து பாடிய பாடல்கள் ஆகையால் அவை படிப்போர் உள்ளத்தில் அன்பை வளர்த்து, சிவனை அனுபவத்தில் உணர உதவுகின்றன.

''ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்கு சோதிக்கவேண்டாம்'' இறைவன் ஒருவன் இருக்கிறான். அவன் அன்பே உருவானவன், அவனை அடைவதற்கு அன்பு வழியில் செல்லுங்கள், என்று நாயன்மார்கள் நால்வரும் எமக்கு வழிகாட்டுகின்றனர். இறைவனையும் நாம் உறவாடும் உறவினர்களில் ஒருவராக்கி அவருடன் நேருக்கு நேராக அன்பு செலுத்தி உள்ளம் அன்பால் உருகி ஒவ்வோர் தேவார திருவாசகங்களையும் பாடி இருப்பதால், அப்பாடல்களை நாம் மீண்டும் மீண்டும் பாடுவதனால், தெய்வீக உணர்ச்சி தோன்றும். அவ்வுணர்ச்சி எமக்கு இறை அன்பை தேடித்தரும். மெய்மறந்து அப்பாடல்களை பாடும்பொழுது, உள்ளம் நெகிழும். கண்ணீர் வடியும். அகம் குழையும். உள்ளம் இறைவனுடன் ஐக்கியப்படும். அம்மா என்று கன்று அழ தாய்ப்பசு உடனே கருதிவந்து அணைப்பதுபோல ''தாயினும் நல்ல தலைவனுன'' அன்பால் அழைக்க முன்னரே வந்து உயிரை அணைப்பதால் நாமும் ''நால்வர் நெறி'' சென்று இறைவன் திருவருளைப் பெறுவோமாக.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த குடியாக வாழ்ந்த தமிழனிடம் தனக்கு என ஓர் திடமான சமயக் கொள்கையும், வழிபாட்டு முறையும், வாழ்க்கை விதியும் இருந்தது. பரம்பரை பரம்பரையாக சைவநீதி இன்றுவரை

தொடர்ந்து வந்திருக்கிறது. அதை மாற்றாது எமது சந்ததியினர்க்கு அளிப்பது எமது தலையாய கடனாகும். எமது வாழ்க்கையும் சமய வாழ்க்கையாக அமைய வேண்டும். எதையெல்லாம் ''சைவ நீதி,'' இழுக்கு என்று இயம்பியதோ அதையெல்லாம் நாம் தவிர்த்து வாழவேண்டும்; எப்படி எமது வாழ்க்கை அமையவேண்டும் என்று அன்பு நெறி வகுத்திருக்கிறதோ அப்படியே வாழ வேண்டும். இளம் சமுதாயம் எமது வாழ்க்கை முறையைப் பார்த்து பழகுவதால், அந்த சமுதாயத்திற்கு நாம் சமய வாழ்க்கையை வாழ்ந்து காட்டி அவர்களை சமயவாழ்க்கையில் வழிநடத்த வேண்டும்.

தெய்வச் சேக்கிழார், திருத்தொண்டர் புராணத்திலே சைவநீதி வாழ்க்கை முறையை மிகவும் தெளிவாக விளக்குகிறார், சிவபெருமான் பேரன்பை பெற்ற நாயன்மார்களையும், அவர்களுடன் தொடர்பு கொண்ட சமூகத்தையும் படம் பிடித்துக் காட்டி, ஆலயம், சிவசின்னங்கள், சிவ அடியார்கள் சிவனெனப் போற்றப்பட்டவிதத்தையும் விளக்கி, சிவ அன்பை வேண்டி நின்ற அடியார்கள் உள்ளங்களை தன்னால் இயன்றவரை எமக்கு உணர்த்துகின்றார்; சைவநீதி வாழ்க்கை முறையை திருத்தொண்டர் புராணத்தில் இருந்து அறிந்து கொள்வோமாக.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் ஆகிய நாயன்மார்கள் நால்வரும் காட்டும் நெறிகளையே பொதுவில் ''நால்வர் நெறி'' என அழைக்கின்றோம். ''நால்வர் நெறியை'' கடைப்பிடித்து, வாழ்வதற்கு எமது வாழ்க்கை சைவ வாழ்க்கையாக அமையவேண்டும். தனிமனிதன் வாழ்கையில் உணவு, உடை, ஒழுக்கம், உபசாரம் சைவ முறையில்அமையவேண்டும். சமுதாய அமைப்பு சைவ கலாச்சார பண்பாட்டில் அமையவேண்டும். இந் நிலையில் தேவார திருவாசகங்களை படிக்கும் போது உள்ளம் அன்பில் உருகும். உணர்ச்சிகள் பக்தியை வளர்க்கும். கண்கள் திருவருளை வேண்டி அழும். ''அம்மை அப்பனான சிவனின்'' காட்சி கிடைக்கும்.

வாழ்க நால்வர் நெறி! வளர்க அன்பு வழி!!

''மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்''

★

கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்க

# நிர்வாகசபை உறுப்பினர்

# [1966 – 1967]

| | | |
|---|---|---|
| காப்பாளர்கள் | : | பேராசிரியர் அ. சின்னத்தம்பி |
| | | திரு. த சிவலிங்கம் J. P. |
| | | திரு. ச. ஆறுமுகம் M. I. C. E. |
| | | திரு அ. நவரத்தினம் |
| | | திரு. த. நீதிராசா J. P., M. M. C. |
| தலைவர் | : | திரு. வ சி. செல்லையா |
| உப-தலைவர்கள் | : | திரு. வை. நா. சோமசுந்தரம் |
| | | திரு. வ. செல்வரத்தினம் |
| கௌரவ செயலாளர் | : | திரு. க. பாலசுப்பிரமணியம் |
| துணைச் செயலாளர் | : | திரு. இ. பத்மநாதன் |
| கௌரவ பொருளாளர் | : | திரு. வ. இ. இராமநாதன் |
| துணைப் பொருளாளர் | : | திரு. ச. சாம்பசிவம் |
| செயற்குழு | : | திரு. தி. பாலசுந்தரம் |
| | | திரு. வ. செல்வத்துரை |
| | | திரு. மு. கனகசபாபதிப்பிள்ளை |
| | | திரு. ந. பெ. சதாசிவம் |
| | | திரு. க. கனகராசா |
| | | திரு. இ. கணேசன் |
| | | திரு. சு. லிங்கேஸ்வரன் |



# ஸ்ரீ மகா சன்னிதானர்
# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
# ஜகத்குரு
# ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமி அடிகள்
# அருளிய ஆசிச் செய்தி

நாம் அனைவரும் இன்பமாய் வாழ ஆசைப்படுகிறோம்; அந்த இன்பம் என்பது சிற்றின்பம், பேரின்பம் என இரண்டுவகை. இப்போது நாம் சாதாரணமாய் அனுபவிக்கும் இன்பம் சிற்றின்பம். இந்த இன்பம் சிறியபொருள்களின்மூலம் ஏற்படுவதினாலும் சிறிது காலமே இருப்பதினாலும்; சிற்றறிவுக்கு எட்டக்கூடியதாய் இருப்பதினாலும், இந்த இன்பத்திற்கு சிற்றின்பம் எனப் பெயர். இந்த இன்பத்தை நாம் நமது வாழ்க்கையில் பூரணமாக அனுபவிக்க முடியவில்லை. இந்த இன்பம் அழிவை உடையதாய் இருப்பதினால், இந்த இன்பத்தை நாம் எப்போதும் அனுபவிக்க முடியவில்லை. அப்போது நாம் எப்படி இருக்கிறோம்? துக்கித்துக்கொண்டு இருக்கிறோம். துக்கம் வருவதற்கு காரணம் என்ன? நாம் சிறிதுகாலம் இன்பமாய் இருந்தது தான். துக்கத்துக்கு காரணம் சிற்றின்பமே. மாடமாளிகையிலேயே இருந்து வருபவனுக்குத் தான் வெய்யிலில் கொஞ்சம் நடந்தாலும் அதிக துக்கமாக இருக்கும். சாமான்ய மனிதர்களுக்கு வெய்யிலில் அவ்வளவு தாபம் ஏற்படாது. ஆகையால் சிற்றின்பம் எவ்வளவுக்கெவ்வளவு அனுபவிக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு, துக்கம் பின்னால் அனுபவித்தே தீரவேண்டும்.


ஆனால் பேரின்பத்தைப் பெற்றுவிட்டால், நாம் சிறிதுகூட துக்கத்தை அடைய மாட்டோம். அந்தப் பேரின்பம் அழியாத இன்பம். அந்த இன்பத்தை நாம் அடைய வழியை வகுத்துக் கொடுப்பதுதான் மதம். பலபேர் பல ரூபமாக அந்தப் பேரின்பத்தை அடைந்தார்கள். அவரவர்கள் அனுபவித்த வழியையும்; அவர்களால் எழுதப்பட்ட நூல்களும் அம்மதத்திற்குப் பிரமாணம். இம்மதங்களுள் மிகப் பழமையான மதம் ஹிந்துமதம்தான். ஒவ்வொரு மதத்தை ஒவ்வொரு அனுபூதிமான்கள் ஸ்தாபித்தார்கள்.

நமது இந்து மதத்தையோ ஒருவரும் ஸ்தாபித்ததாகக் கூறமுடியாது. நமது மதம் உலகம் என்று தோன்றிற்றோ அன்று முதல் விளங்கிவருகிறது. உலகம் அழியும் வரையிலும் விளங்கிவரப்போவது நமது மதமான ஹிந்துமதம் தான்.

ஹிந்துமதத்திற்கு எதனால் இவ்வளவு கௌரவம் என்றால், அது ஒருவரால் ஸ்தாபிக்கப்படாமல் வேதத்தையே முக்கியப் பிரமாணமாகவும்; முகற் பிரமாணமாக உடையதாய் இருப்பதினால்தான். வேதம் ஒருவராலும் எழுதப்படாமல் ஈஸ்வரனின் மூச்சுக் காற்றாக எக்காலத்திலும் இருக்கிறது. வேதம் அழிந்துவிட்டது என்றால், கடவுள் அழிந்துவிட்டார் என்றே கூறவேண்டும். கடவுள் அழிவுள்ளவர் என்பது இந்துமதத்தின் கொள்கையல்ல. கடவுள் அழிவில்லாதவராக இருப்பதனால் வேதமும் அழிவில்லாததாக இருக்கிறது. அந்த வேதத்தின் மூலமாக அடையக்கூடிய இன்பமும் அழிவில்லாத இன்பமே. மற்ற மதத்தில் முக்கியமாகச் சொல்லக்கூடிய கொள்கைகளும் நமது மதத்திலும் முக்கியமாகவே சொல்லப்பட்டு இருக்கின்றன. அவைகள் சொல்லும் கொள்கைகளையும் ஏற்றுக்கொண்டு, அதற்குமேலும் உள்ளதான பேரின்பத்தை அடைய வழியை சொல்லுகிறது, நமது மதமான ஹிந்துமதம்.

ஆகையால், அழியா மதமான ஹிந்து மதத்தில் சொல்லக்கூடிய தர்மங்களை நாம் செய்முறையில் கொண்டுவந்து அழிவிலாப் பேரின்பத்தை அடைய எல்லாம் வல்ல கைலயம்பதியான ஈசன் அருள்பாலிக்கட்டும்.

# ஆதரவாளர் ஆசிச் செய்தி



கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்கம் இந்த ஆண்டும் பயன்படும்விதமாக ஒரு செவ்விய மலரை வெளியிடுகின்றார்கள். சைவ சமயத்தவர்களாகிய நாம் கடவுள் இருக்கிறாரா? இல்லையா? என்ற சொல் வாதங்களில் ஈடுபடாமல், அன்பை வளர்க்கும் நெறியை கடைப்பிடிக்கவேண்டும். அன்பின் மலர்வே அருள். அருளின் மலர்வே உண்மை. அந்த உண்மை நிலைமையே சைவம். அந்த நிலையில் சிவத்தைக் காணலாம். அச் சிவத்தைக் கண்ட அனுபூதிமான்கள் இந்த விதமான வாதங்களில் ஈடுபடவேண்டாம், சிவத்தை காணும் நெறியில் ஒழுகுமாறு கூறியுள்ளார்கள்.

இந்த நெறியில் ஒழுகுவதற்கு உதவியாக பல ஒழுக்க நூல்களும் அறிவு நூல்களும் உவ. எங்கள் போன்றவர்கள் இந்த உலக வாழ்க்கை நடாத்துவதற்கு இலகுவில் படித்து அறிவதற்கும், ஒழுகுவதற்கும் உதவியாக உள்ள நூல்கள் தேவார திருவாசகம், திருக்குறள், திருவருட்பயன் முதலிய நூல்களாம்.

இந் நூல்களிலிருந்து மக்கள் கவனத்திற்கு உரிய அறிவுக் கனிகளை எடுத்து இம் மலர் மூலம் அளிப்பதே இச் சங்கத்தின் நோக்கங்களில் ஒன்றாகும்.

நாயன்மார்கள், அடியார்கள் இறைவன் திருவருளை, தம் வாழ்வில் கண்டு, நெஞ்சம் குழைந்து, பக்தி பரவசமான நிலையிலிருந்து, பாடிய பாடல்களே, தேவார திருவாசகங்கள் ஆகும். நாயன்மார்கள் நால்வரும் இறைவனை அடைந்த வழியையும் அவர்கள் இறைவனை நேரில் கண்டு, சிவனை குறிகிப் பணிந்து நின்ற நிலையையும் விளக்குவதற்காக ''நால்வர் நெறி'' என்னும் இம்மலர் தீவிர முயற்சி எடுப்பதை சைவ அன்பர்கள் அனைவரும் ஆதரிக்க வேண்டும்.

இச் சங்கம் நால்வர் நெறி நின்று சைவ மக்களுடைய அன்பையும் ஆதரவையும் பெற்று, இத்தூய சேவையில் ஓங்கி வளருமாறு கொம்பனித் தெரு வதியும் முருகப்பெருமான் திருவடி இறைஞ்சுகின்றேன்.

**அ. சின்னத்தம்பி**
(ஆதரவாளர்)

# நாம் போற்றும் நால்வர் நெறி!

(வி. பி. சாமி)

'பிள்ளைநெறி' நின்று
சிவபெருமான் அருள் பெற்று
தெள்ளமுதத் தமிழீந்தார்,
திருஞான சம்பந்தர்!

எந்தையாம் ஈசனடி
இறைஞ்சி புகழ் பாடி,
சுந்தரர் தாம் சென்றவழி
தூய்மைமிகு தோழ நெறி!

தொண்டருக்குத் தொண்டு செய்யும்
உமைபாகன் பாதத்தை
தண்மைமிகு தாச நெறி
சென்றுய்த்தார் வாக்கீசர்!

மெய்யான இறைவனிடம்
உய்யவென அன்பு வைத்து
தெய்வீகச் சன்மார்க்க நெறி
திருவாதவூரர் நெறி!

ஞாலம் சிறக்க வென்று
ஞான மழைபொழிந்து
நாலுபேர் சென்ற வழி
நாம் போற்றும் ''நால்வர் நெறி''!

உ
''ஓம் குமராயநம''



# கொம்பனித் தெரு, ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி

# தோத்திரப்பாமாலை

அருட்கவி சி. விநாசித்தம்பி

## *காப்பு - வெண்பா*

தும்பி முகத்தானே தூயமறை நாயகனே
அம்பலத்தான் பெற்ற அருமகனே - கொம்பனிமா
வீதிக்குமரனருள் மேவுகவி பாடநின
தாதரவு தந்தாள் அமர்ந்து

## *நூல்*

பேர்பூத்த வேலவனே போற்றி போற்றி
பிறைபூத்த வேணியனின் மகனே ,,
ஏர்பூத்த கணநாதற் கிளையோய் ,,
எண்ணரிய புவிக்கெல்லாம் இறைவா ,,
பார்பூத்த கலைஞானப் பழமே ,,
பத்திரச முத்திரசப் பாகே ,,
சீர்பூத்த கொம்பனிமா வீதி மேவும்
சிவசுப்ர மண்யரே போற்றி போற்றி

உத்தமரின் மனக்கோயில் உடையாய் போற்றி
ஒப்பரிய ஓராறு படையாய் ,,
முத்தமிழை எமக்களித்த முதல்வா ,,
மூவருமே யறியாத மூர்த்தி ,,
முத்தி நெறி யறிவிக்கும் குருவே ,,
சித்திமிகும் கொம்பனிமா வீதி மேவும்
சிவசுப்ர மண்யரே போற்றி போற்றி

| | | | |
|---|---|---|---|
| சுந்தரகுஞ் | சரிவள்ளி | துணைவா | போற்றி |
| தோகைமயில் | ஏறிவரும் | துரையே | ,, |
| அந்தரரும் | அறிவரிய | அரசே | ,, |
| அகத்தியருக் | குபதேசம் | அளித்தாய் | ,, |
| மந்திரநான் | மறைபோற்றும் | மன்னு | ,, |
| மருவுமடி | யவர்கண்ணின் | மணியே | ,, |
| செந்தமிழ்வாழ் | கொம்பனிமா | வீதி | மேவும் |
| சிவசுப்ர | மண்யரே | போற்றி | போற்றி |

| | | | |
|---|---|---|---|
| பருவதத்தில் | உதித்தவளின் | பாலா | போற்றி |
| பங்கயனைச் | சிறையிலிடும் | பரமா | ,, |
| இருவினையின் | மயல்தீர்க்கும் | எந்தாய் | ,, |
| ஏந்திழையார் | பால்குடித்த | அழகா | ,, |
| பெருமகரர் | குலமறுத்த | பெரியோய் | ,, |
| பிதாவுக்கோர் | குருவான | பிரானே | ,, |
| திருமலியும் | கொம்பனிமா | வீதி | மேவும் |
| சிவசுப்ர | மண்யரே | போற்றி | போற்றி |

| | | | |
|---|---|---|---|
| நாவலிலே | சுட்டகனி | நயந்தாய் | போற்றி |
| நாமமது | முட்டையெனச் | சொன்னாய் | ,, |
| சேவலணி | கொடியுடைய | தேவா | ,, |
| இந்திரவேல் | கைப்பிடித்த | செல்வா | ,, |
| மாவடியில் | வைகுமெழில் | மயிலோய் | ,, |
| மாமாயன் | மகிழ்ந்தணைக்கும் | மருகா | ,, |
| தேவர்புகழ் | கொம்பனிமா | வீதி | மேவும் |
| சிவசுப்ர | மண்யரே | போற்றி | போற்றி |

| | | | |
|---|---|---|---|
| பொங்கார | வேலையில்வேல் | விட்டாய் | போற்றி |
| பொலிசட்டி | மாவறுத்த | புனிதா | ,, |
| சங்கீத | முச்சங்கப் | புலவா | ,, |
| தங்குதிருப் | புகழ்கேட்ட | தலைவா | ,, |
| சங்கார | வீரப்ர | தாபா | ,, |
| சசிதேவி | மங்கல்யம் | காத்தாய் | ,, |
| சிங்காரக் | கொம்பனிமா | வீதி | மேவும் |
| சிவசுப்ர | மண்யரே | போற்றி | போற்றி |

| | | | |
|---|---|---|---|
| ஓங்குமலர்ச் | சரவணத்தில் | உதித்தாய் | போற்றி |
| உண்மையறி | வானந்த | உருவே | ,, |
| காங்கேயா | புகழ்பூத்த | கடம்பா | ,, |
| கற்கிமுகி | தனைமடித்த | கந்தா | ,, |
| வேங்கைமர | மாய்நின்ற | விமலா | ,, |
| மெய்ஞ்ஞான | மணம்பூண்ட | விகிர்தா | ,, |
| தேங்குகலைக் | கொம்பனிமா | வீதி | மேவும் |
| சிவசுப்ர | மண்யரே | போற்றி | போற்றி |

வாகுடர் துயர் தீர்த்த வள்ளால் போற்றி
மாலாறு முகமுடைய மணியே ,,
ஊனேறு மெய்முயிருக் குயிரே ,,
ஓங்கார நிலைகாட்டும் ஒளியே ,,
கோனென மதுரைச்செங் கோலா ,,
குறைபொறுக்கும் முருகையா குமரா ,,
தேனூறும் கொம்பனிமா வீதி மேவும்
சிவசுப்ர மண்யரே போற்றி போற்றி

நம்புமடி யார்க்கருளும் நாதா போற்றி
ஞானம்பாள் அணைத்துவக்கும் கந்தா ,,
பைம்புனத்தில் சிலையேந்தும் குகனே ,,
பரிந்தளித்த செந்திணைமாத் தின்றாய் ,,
வம்புலவு பழனிமலை வாழ்வாய் ,,
மருவுசிவ நெறிவகுத்த மகிபா ,,
செம்பழனக் கொம்பனிமா வீதி மேவும்
சிவசுப்ர மண்யரே போற்றி போற்றி

தவம்பூத்த பரமசுகம் தருவாய் போற்றி
தனம்பூத்த மனமுதவும் தலைவா ,,
அவம்பூத்த மருணீக்கும் அப்பா ,,
அருணகிரிக் கருள்புரிந்த ஐயா ,,
பவம்பூத்த விதியழிக்க வல்லாய் ,,
பதம்பூத்த பணிபரவப் பணிப்பாய் ,,
சிவம்பூத்த கொம்பனிமா வீதி மேவும்
சிவசுப்ர மண்யரே போற்றி போற்றி

## பயன்

ஆகும் சுகங்கள் அனைத்தும் தரும்நல் அருளினுயர்
போகந் தரும்கலை ஞானந் தரும்வான் புகழுதவுந்
தேகந் தரும்சிவ யோகந் தரும்பொன் திகழிலங்கை
மாகும் பனித்தெரு வாழ்சண் முகனுர் மலரடியே.

# சமயம்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

நினைப்பு, மறப்பு, விழிப்பு, நித்திரை, பிறப்பு, இறப்பு முதலிய காரியங்கள் நமது வல்லமையைக் கடந்து நடக்கின்றன.

அக்காரியங்களை நடத்தி வைக்கும் பொருள் எது? அப்பொருள் நமது வல்லமையைக் கடந்த பொருள்; கடவுள்.

கடவுளுக்கு வடிவம் உண்டா? உண்டு. அது இந்த கண்ணாற் காணமுடியாதது; சுத்த அறிவினாற் காணத்தக்கது. அதற்கு நீதி என்று பெயர்.

நீதி வெகு ஆழமானது; மிகமிக நீளமானது. "பங்கயத் தயனு மா லறியா நீதி" என்பது மணிவாசகம். நீதியின் ஆழத்தையும், நீளத்தையும் காணுதற்குப் பிரம விஷ்ணுக்களுக்குக்கூடச் சுதத அறிவு போதிய அளவுக்கு உண்டாகவில்லை.

நீதியை மறைக்குங் குற்றங்கள் இரண்டு. ஒன்று அறியாமை; மற்றது வஞ்சகம்.

அறியாமை பாவமன்று; முயற்சிக்குப் பயன் தராது; அதனாற் குற்றம் எனப்படுகிறது.

வஞ்சகம் படு குற்றம்; மகா குற்றம்; நரகத்துக்கு வித்து. அது அறிவு முனையை அழித்து, அந்தகாரம் செய்துகொண்டிருப்பது.

வழியில் ஒரு பொருளைக் கண்டு எடுக்கின்றோம். பொருளுக்குரியவர் இன்னாரென்றுந் தெரிகிறது. விசாரித்து நிச்சயஞ் செய்யப் போதிய வழிதுறைகளும் இருக்கின்றன. பொருளை அதற்கு உரியவரிடம் ஒப்பிப்பதே நீதி என்று அறிவு சொல்லுகின்றது. வஞ்சகம் அந்த அருமந்த அறிவை மழுக்கி மாயஞ் செய்துவிடுகின்றது.

இந்த கள்ள வஞ்சகந்தான் நமது பரம சத்துரு. அதனோடு சதா போர்தொடுத்துக்கொண்டே நாம் சாவதானமாயிருக்க வேண்டும். வஞ்சகம் மனத்தை ஒரு கணத்திலே தன் வசப்படுத்திவிடும். நாம் அதனைச் சிறைமீட்டு அறிவு வசப்படுத்தவேண்டும். "நீதி எது! எது!! எது!!!" என்ற விசாரந்தான் வஞ்சகத்தைக் கொல்லும் படை. அப்படையினாலே இச்சையை நேர் செய்துகொண்டால் அறியாமை மெல்ல மெல்ல நீங்கும். அறியாமை நீங்கச் சுத்த அறிவு உதயமாகும். அந்தச் சூரியோதயத்திலே நீதியின் பிழம்பு ஒரு சாயலாகத் தோன்றத் தொடங்கும். அறிவுச் சூரியன் மேல் எழ எழ நீதியின் உண்மைத் தோற்றம்—கை, கால் முதலிய அவயவங்கள்—காட்சியளிக்கும், அடிமுடி தோன்றும்.

நீதியை விசாரிப்பதிலே—விசாரித்து, அந்த நீதியிலே எவ்வித வஞ்சகத் தடையுமின்றி நிலை நிற்பதிலே—எவனுக்குச் சதா பரிசுத்த விருப்பம் உண்டோ அவன் சமயி.

அந்த விருப்பத்தை நூறுயிரம் கள்ளக் காரணங்கள் கற்பித்து எவன் வஞ்சிக்கின்றானோ, அவன் சமயி அல்லாதவன்.

முந்தியவன் அகச் சமயி; மற்றவன்; புறச் சமயி சமயத்துக்குப் புறம்பானவன்.

நீதியை வஞ்சகமின்றி விசாரித்து விரும்புவது அகம். அதற்குச் சமயம் என்று பெயர்.

நீதிதான் கடவுளின் வடிவம்; அதற்கு மற்றொரு பெயர் சிவம். சிவம் என்றால் நன்மை, மங்களம், நீதி என்று பொருள்.

எவன் நீதியோடு சம்பந்தப்படுகின்றானோ, அவன் சிவத்தோடு சம்பந்தப்படுகின்றான்;

சிவத்தோடு சம்பந்தப்படுகிறவனுக்குச் சைவன் என்று பெயர்.

சிவத்தோடு சம்பந்தப்பட்ட சமயம் சைவ சமயம்.

"மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்"

# "ஆடல் வல்லோன்"

வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன்

## ஆடும் அழகன்

''நெஞ்சினைத் தூய்மை செய்து
நினைக்குமா நினைப்பியாதே
வஞ்சமே செய்தியாலோ வானவர்
தலைவனே நீ
மஞ்சடை சோலைத்தில்லை மல்குசிற்
றம்பலத்தே
அஞ்சொலாள் காணநின்று அழக நீ
யாடுமாறே''

(திருமுறை—4-237)

இறைவன் ஆடிக்கொண்டே இருக்கின்றான். அவனது ஆட்டத்தின் சுழற்சியிலே ஒவ்வோர் உயிரின் இயக்கமும் நடைபெறுகின்றது. நமது இதயத்தின் துடிப்பு அவனது ஆட்டத்தின் துடிப்பு. நம் உடலின் அசைவு அவன் ஆடலின் விளைவு. அணு இயல் வல்லுநர்கள் அணுக்களெல்லாம் ஏக தாளத்தில் ஆடிக்கொண்டிருப்பதைக் கண்டனர். ஆனால் அந்த ஆட்டத்தின் இரகசியத்தை அணுக்களை ஆட்டிப் படைக்கும் அவர்களாலும் கண்டறிந்து கூற இயலவில்லை. நமது முன்னோர்கள், இவ்விஞ்ஞான யுகத்தின் நிழல்கூடப் படியாதவர்கள், அறிவியலின் எல்லைக்கே சென்று அணிவிற்கும் அணுவாகி, அண்டங்களைப் படைத்துக், காத்துக், கரக்கின்ற பரம்பொருளையே ''ஆடல் வல்லோனாக'' ஆக்கியிருப்பது இன்று அறிவியல் வல்லுநர்களுக்கு ஓர் அறைகூவலாக இருக்கின்றது. மேனாட்டார் பலரும் இவ்வற்புதக் கோல எழிலிலே தங்கள் சிந்தைதனைப் பறிகொடுத்து செயலிழந்து நிற்கின்றனர்.

மேனாட்டார் புற அழகிலே சொக்கி நின்றால், நமது சமயக்குரவர்களோ ஐயனின் அக அழகிலே ஒன்றி நின்றனர். முற்றா 'வெண்திங்கள் முதல்வன் பாதத்தைப் பற்றுமாறு' மக்களை அழைக்கின்றார் ஆளுடைப்பிள்ளையார். கார்மேகச் சோலை சூழ்ந்த தில்லை மரங்கள் அடர்ந்த சிற்றம்பலத்தே அஞ்சொலாள் காண ஆடும் அழகனைத் தூயநெஞ்சுடன் துதிக்கச் சொல்லுகின்றார் ஆளுடை அடிகள். ஆளுடை நம்பியோ, 'புலியூர்ச் சிற்றம்பலத்து எம்பெருமானைப் பெற்றால், இகவாழ்வில் நம்மைத் தடுத்தாண்டு முன் செய் தீவினையால் கூற்றுவனின் ஆட்கள் நம்மைச் செக்கிவிட்டு ஒறுக்கும் பொழுது, அப்பொழுதும், நம்மைத் தடுத்து ஆட்கொள்வான்' என்று கூறுகின்றார்.

## ஐந்தொழில்

படைத்துக், காத்துக், கரந்து, அருளி அழிக்கும் ஐந்தொழிலும் ஆடல்வல்லோனின் திருவுருவத்தில் அழகுபெற அமைந்துள்ளன. வலது கையினில் உடுக்கு. இவ்வுடுக்கின் ஒலியிலே மலர்கின்றது உலகம். இது படைத்தலைக் (சிருஷ்டி) குறிக்கும். ''உலகம் சப்தத்திலே பிறந்து அதிலேயே நிலை பெற்றிருப்பது'' என்று வேதம் உரைக்கின்றது.

அடுத்து என்று வந்தாய், என்று உவந்தாய் என வினவும் எடுத்த பொற்கை. இது. 'எனது திருவடிகளை நம்பி வந்தவர்களுக்கு அடைக்கலம் அளிப்பேன். அளிப்பேன்' என்று கூறுவதைப் போன்று இலங்குகின்றது. இது காத்தலைக் (ஸ்திதி) குறிக்கும்.

இடக்கையில் தாங்கியிருக்கும் தீ. இது முடி மன்னரும், முடிவில் பிடி சாம்ப ராகும் நிலையற்ற இவ்வுலக வாழ்வை நமக்கு நினைவுறுத்தும் முகமாக அமைந் துள்ளது. இது அழித்தலைக் (சம்ஹாரம்) குறிக்கும்.

ஊன்றிய வலக்கால் உயிர்ப்படைப் பின் இரகசியத்தை யாவர்க்கும் விளங்க வொட்டாமல் மறைக்கும் மாய சக்தியை உணர்த்தி, தீவினைப் பயன்களை அவரவர் செய்த நல்வினை, தீவினைப் பயன்களை அவ ரவர் துய்க்கும்படியான மறைத்தலை (திரோபவம்) விளக்குகின்றது.

தூக்கிய திருவடியோ மாசில் வீணை யும், மாலை மதியமும், வீசுதென்றலும், வீங்கிளவேனிலும், மூசு வண்டறை பொய் கையுமாகி உயிர்களுக்குப் பேரின்பத்தை விளைக்கின்றது.

''தனக்குவமை இல்லாதான் தாள்
சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.''
(குறள்—எ)

வினை கெடுத்தாளும் வேதியனின் திருவடி யல்லாது உயிர்களுக்கு உய்தியில்லை என் பதுபோன்று கூத்தப்பிரானின் இடக்கை, ''எனது திருவடி சேரவம்மின்! வம்மின்!'' எனச் சுட்டி அழைக்கின்றது. எனவே குனித்த பொற்பாதம் அருளலை (அனுக் ரஹம்) உணர்த்துகின்றது.

''தோற்றம் துடியதனில் தோயும்திதி
அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்
—ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே
உற்றதிரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.''

என்ற பாடல் மேற்கூறிய தத்துவங்களுக்கு அரண் செய்கின்றது.

## ஆக்கையின் பயன்

நேற்று இருக்கின்றவரை இன்று காண வில்லை.

''நெருநல் உளனொருவன் இன்றில்லை
என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு''
(குறள்—339)

என்று உலகின் பெருமையை விரிக்கப் பேசுகின்றது தமிழ் மறை. கழிகின்ற ஒவ்வொரு வினாடியும் இறப்பெனும் கால எல்லைக்கு விரைந்து நம்மை ஈர்த்துச் செல் லும் ஊர்தியாகின்றது. நிலையாமை குறித் துக் குண்டலகேசி கூறும் அரிய பாடல் ஒன்று நினைவினுள் சுழல்கின்றது.

'பாளையாம் தன்மை செத்தும் பாலனும்
தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும் காமுறும்
இளமைசெத்தும்
மீளுமிவ் வியல்பு மின்னே மேல்வரு
மூப்புமாகி
நாளும்நாம் சாகின் றேமால் நமக்குநாம்
அழாத தென்னோ''

எத்தகைய அரிய உண்மை. கழிகின்ற பரு வங்கள் இறப்பின் கூறுபாடு தானே! தோற்றமுண்டேல் மரணம் உண்டு. காலன் கழுத்துப் பிடியிலேயே இருக்கின் றான். பிறந்ததும் பிரிவுமுண்டு. வளர்ந்த தும் மறைவதுண்டு. கருவியினுள் அழிவதும் உண்டு. காலத்தால் கழிவதும் உண்டு. இதனை அருள் நந்தி தேவ நாயனார்

''கருவினுள் அழிவதாயும், கழிந்திடா
தழிவதாயும்
பரிணமித் தழிவதாயும் பாலனாய்
அழிவதாயும்
தருணனாய் அழிவதாயும் தான்நரைத்
தழிவதாயும்
உருவமே அழிவே ஆனால் உள்ளபோதே
பார்உய்ய.''

என்று அருளுகின்றார். ஆக்கையின் பயன் அரன் அஞ்செழுத்து ஓதுதல்; அவன் திருக் கோயில் வலம்வருதல். அவன் திருத் தொண்டுத் தலைப்படுதல். இதனைத் தாண் டகச் சதுரர் தனது திருவங்க மாலையில்,

''ஆக்கையாற் பயனென்—அரன்
கோயில் வலம் வந்து
பூக்கையா லட்டிப் போற்றியென் னுதை இவ்
ஆக்கையாற் பயனென்''

என்று வினவுகின்றார். உடையானிடத்து நிலவாத நெஞ்சாற் பயனில்லை. காக்கைக்கே இரையாகிக் கழியும் இவ் யாக்கைக்கு இரை தேடுவதில் காலத்தைக் கடத்துகின்றோம். ஆக்கை பெற்றது மீட்டும் யாக்கை வாராமல் ஒழித்தற்கே. இதனை காரைக்காலம்மையார் இறைவனிடம்

இறவாதஇன்ப அன்பு வேண்டிப் பின்
வேண்டுகின்றார்

''பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்
புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போதுன் அடியின்
கீழ் இருக்க''

என்றார். பிறவா நெறி அருளுமாறும் மீட்டும் பிறந்தால் இறைவனை மறவாத நெறி அருளுமாறும் வேண்டியதாக சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகின்றார்.

''நல்வாயில் செய்தார் நடந்தார்
உடுத்தார்
நரைத்தார் இறந்தார் என்று
நானிலத்தில்
சொல்லாய்க் கழிகின்ற தறிந்தடியேன்
தொடர்ந்தேன் உய்யப் போவதோர்
சூழல் சொல்லே''

என்பதும்

''செடிகொள் ஆக்கை சென்று சென்று
தேய்ந்தொல்லை வீழா முன்
வடிகொள் கண்ணார் வஞ்சனையுட் பட்டு
மயங்காதே
கொடி கொள் ஏற்றர் வெள்ளை நீற்றர்
கோவண ஆடையுடை
அடிகள் கோயில் எதிர்கொள்பாடி யென்ப
தடைவோமே''

என்பதும் நம்பியாரூரரின் அருள்வாக்கு.

இவ் அருள் வாக்கினைத் தலைக்கொண்டு ''ஆடல் வல்லோனின்'' அறப் பெருங் கருணைக்கு நம்மையும் ஆட்படுத்திக்கொண்டு மங்கை பங்கனின் மலர்க் கழல்களை சிந்தை செய்வோம்!

வணக்கம்!

★

## நல்வழி

ஆழ்ந்த சிந்தனை செய். ஆராய்ச்சி செய். அடிக்கடி அறவோர் திருக்குழுவைச் சார்ந்திரு. நிஷ்காமிய பக்ஞமாகிய சேவை செய். எவரையும் கேலி செய்யாதே. யாரிடமும் சீறி விழாதே. உன் புலன்களை அடக்கு. எப்பொழுதும் முகம் மலர்ந்திரு. ஆசை கோபம் இரண்டினின்றும் விடுபடு. மமதையைத் தூர எறி. உன்னுள்ளே பார். சிந்தி. உண்மையானந்தம் எய்துவாய்.

—சுவாமி சிவானந்தர்.

# "மாணிக்கவாசக சுவாமிகள் கண்ட தெய்வம்"

சைவ இளவல். சி. திருநாவுக்கரசு.

சைவ சமய சாத்திரம் பதி, பசு, பாசம் என்று முப்பொருள் உண்மையை விளக்கும் அறிவாகும். பதி, பசு பாசம்என்ற முப்பொருள் அநாதியானவை என்றும், பசுவாகிய ஆன்மா பாசம் என்ற மும்மலத்துடன் சேர்ந்திருப்பதால், ஆணவ இருளில் பஞ்ச அவஸ்தைப்பட்டு கன்மத்தால் பல பிறவிகளை எடுத்து, இன்பதுன்ப இரட்டைகளில் கலந்து, பின் மாயையின் ஆற்றலால் தன்னைத்தான் உணர்ந்து, சிவன் அருளை வேண்டி அழ, சிவபெருமான் மூன்று மலங்களையும் தன் திருவருளால் கழுவி இருவினைப் பயன்களையும் அழித்து, சத்தினிபாதம் காட்டி ஒவ்வொரு ஆன்மாக்களையும் பிறவித் துன்பத்திலிருந்து ஈடேற்றி தனது மலரடிக் கீழ் வைப்பார் என்பதுதான், சைவ சமய சாத்திரத்தின் சுருக்கமான விளக்கம்.

சைவ சமயம் ஏனைய சமயக் கொள்கைகளையும் விட சிறந்து இருப்பதற்கு முதற்காரணம் அதனிடத்தில் உள்ள கொள்கைகளாகும். நாம் இல்லறத்தில் இருந்து கொண்டே சிவபெருமானை அடைந்து வாழுதற்குரிய வழிகளைக் காட்டுவதுமல்லாமல், இல்லறம் வெறுத்தவர்களும் துறவற நிலையில் இனசனத்தினரையும், உற்றார் உறவினர்களையும் பேணி வாழ்ந்து "இல்லறம் துறவறம் இரண்டும் மேன்மையே" என்ற சைவ சமயத்தின் சிறப்புக் கொள்கை எம் மனதைக் கவர்கின்றன.

சைவ சமயக் கொள்கைப்படி வாழ்ந்து, சிவபெருமான் திருவருளைப் பெற்று சிவனருட் செல்வர்களான நாயன்மார்களும் மற்றைய அடியார்கள் தமது அருட்பாடல்களாகிய தேவார திருவாசகங்களுக்கூடாக சமய நெறியினை நமக்குத் தருகின்றனர். சிவபெருமான் அருவ, அருஉருவ, உருவ திருமேனிகளைத் தாங்கி காட்சி கொடுத்து தன்னை ஆட்கொண்ட தன்மையை நாயன்மார்கள் நாலவருள் ஒருவரும், திருவாசகம் பாடியவருமான மாணிக்கவாசக சுவாமிகள் வர்ணிப்பதைக் கவனிப்போம்.

"வானாகி மண்ணாகி, வளியாகி, ஒளியாகி
ஊனாகி, உயிராகி, உண்மையுமாய்
—இன்மையுமாய்
கோனாகி யான் எனது என்(று) அவர்
அவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றானை என்சொல்லி
வாழ்த்துவனே"

அருவத் திருமேனியால் எங்கும் நீக்கமற நிறைவாகி வியாபித்து, எல்லா உலகங்களையும் பொருள்களையும் சகல உயிர்களையும் சிவம்தாங்கி நிற்பதால், சிவபெருமானை என்சொல்லி வாழ்த்துவேன் என்று அதிசயித்து நிற்கிறார்.

சிவபெருமான் அருஉருவத் திருமேனி தாங்கி தன்னை ஆட்கொண்ட தன்மையை "ஊறிநின்று என்னுள் எழுபரம் சோதி உள்ளவா! மாறிநின்று என்னை மயக்கிடும் வஞ்சப் புலன் ஐந்தின் வழி அடைந்த அமுதே! தேறலின் தெளிவே! ஈறில்லாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே! என்னுடைய அன்பே! திருப்பெருந்துறையுறை சிவனே, சிவபெருமானே காரண வந்தருள்வாய்" என்னும் திருவாசகத்

தில் மிகவும் தெளிவாக விளக்குகிறார். மாணிக்கவாசக சுவாமிகள் சிவபெருமானை உருவத் திருமேனியில் கண்டு விபரிப்பதைக் கவனிப்போம்.

பாலினைக் குழந்தைக்கு பசிக்கும் காலத்தே, அது அழுகின்ற முன்னரே, அறிந்து ஊட்டுகின்ற நல்ல தாயிலும் சாலப் பரிந்து, அடியேனுடைய ஊனினை உருக்கி உள் ஒளி பெருக்கி, வற்றுதல் இல்லாத பேரின்பமாகி தேனைப் பொழிந்து, புறம்புறம் திரிந்த செல்வமே சிவபெருமானே! உன்னை நான் இடைவிடாது உறுதியாக பற்றினேன்; என்னைவிட்டு நீங்கள் எங்கு எழுந்தருளிச் செல்வது?

சிவபெருமான் பூசுவது வெண்ணீறு ஆகும். அணிவது பாம்பு ஆகும். அவர் வாயில் இருந்து வருகின்ற நாத ஒலி வேத ஆகம மந்திரங்களாகும், தோழி! எல்லா உயிர்களும் சிவபெருமானை அவர் அவர் வாழ்க்கையில் புரிந்து கொள்வதற்காக. குணம், குறி இல்லாத சிவபெருமான் உருவத்திருமேனியைத் தாங்குகிறார்.

திருப்பெருந் துறையில் உள்ள சிவபெருமானே! எனக்கு அருள் புரிந்து அஞ்ஞானமாகிய மாயா இருளை நீக்கி உள்ளத்தில் ஞான சூரியன் போல பிரகாசிக்கும் உமது இயல்பை நினையாமல் நினைந்தேன். நான் புலன்கள் தொட்டு உணரக்கூடிய உருவத்திருமேனியைக் காட்டியும், உள்ளத்தால் உணர உணர அமுது ஊற்றாக இனிக்கும் அருஉருவத் திருமேனியால் இரண்டறக் கலந்த நிலையில் பேரின்பம் காட்டியும் சோதியுள் சோதியாக இருந்து, அணுவானது தேய்ந்து தேய்ந்து, ஓர் உருவம் இலலாத நிலையைக் குறிக்கும் அருவத் திருமேனி தாங்கி சக்தியாகி, நாத விந்தாகி ஒளியும், ஒலியும் தந்து மண்ணாகி தீயாகி நீராகி, காற்றாகி, வானாகி, எனது மேனியைத் தீண்டுகிறாய். என்னை அணைக்கிறாய் உன்னை உள்ளபடி யார்தான் அறிய வல்லார்.

''இன்று எனக்கு அருளி இருள் கடிந்து
உள்ளத்து எழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின் தன்மை நினைப்பத நினைந்தேன்
நீயலால் பிறிது மற்று இன்மை
சென்று சென்று அணுவாய் தேய்ந்து தேய்ந்து
ஒன்றாய் திருப்பெரும் துறையுறை சிவனே
ஒன்றும் நீ அல்லை அன்றி ஒன்று இல்லை யார்'
உன்னை அறியகிற்பாரே'

நான் என்ன தவம் செய்தேன். தேவரும் முனிவரும் தேடியும் காணாத பாதத்தை பெற்றுத்தந்த ''சிவாயநம'' என்னும் பஞ்சாட்சர மந்திரம் உச்சரிக்க உச்சரிக்க தேனாய் இன்னமுதமுமாய் தித்திக்குதே.

''நானேயோ தவம் செய்தேன் சிவாயநாம
எனப் பெற்றேன்
தேனாய் இன் அமுதமுமாய் தித்திக்கும்
சிவபெருமான்
தானே வந்து எனது உள்ளம் புகுந்து
அடியேற்கு அருள் செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்து அன்றே
வெறுத்திடவே''

நாயன்மார்கள் நால்வரில் ஒருவரான மாணிக்கவாசக சுவாமிகள் காட்டிய தெய்வத்தை சைவ சமய முறைப்படி வாழ்ந்து எமது வாழ்வைக் காண்போமாக.

# திருவாசகத்தில் மூன்று கனிகள்

புலவர் ம. பார்வதிநாதசிவம்.

சைவ சித்தாந்தம் பதி, பசு, பாசம், என்னும் மூன்று பொருள்களை விளக்குகிறது. பதி என்ற சொல் இறைவனைக் குறிக்கிறது. பசு என்ற சொல் ஆன்மாவைக் குறிக்கிறது. பாசம் என்ற சொல் ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று பொருள்களையும் குறிக்கின்றது.

பதி, பசு, பாசம், என்னும் மூன்று பொருள்களின் இயல்புகளையும் இயன்றவரை தெரிந்துகொள்வது ஆன்ம ஈடேற்றத்துக்கு வேண்டிய ஒன்றாகும்.

சாத்திர நூல்கள் பதினான்கும் திருமுறைகள் பன்னிரண்டும் சைவ சித்தாந்தத்தை விளக்குவனவாய் உள்ளன, திருமுறைகள் பன்னிரண்டுள் திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாந் திருமுறை ஆகும்.

திருவாசகத்தில் இருந்து மூன்று அருட்கனிகளை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

''தொல்லை இரும்பிறவி சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கிய''

திருவாசகத்தில் நீத்தல் விண்ணப்பம் என்னும் பகுதியில் உள்ளன, இக்கட்டுரையில் ஆராயப்படும் மூன்று கனிகளும். அந்த மூன்று கனிகளும் ஆன்மாவின் மூன்று நிலைகளை விளக்குவன.

ஒன்று தன் விருப்பம்போல் பிழைகளையே செய்யும் நிலை. மற்றது பிழைகள் செய்யுமாறு தூண்டும் புலன்கள் ஒருபுறமும் பிழை செய்யின் இறைவன் யாதுசெய்வானோ என்னும் அச்சம் ஒருபுறமும் இழுப்ப இடையே நிற்கும் நிலை. அடுத்தது இறைவனின் குறிப்பறிந்து நடந்துகொள்ளும் நிலை.

பெற்றது கொண்டு பிழையே
பெருக்கிச் சுருக்கும் அன்பின்
வெற்றடியேனை கண்டாய்
விடிலோ கெடுவேன்
மற்றடியேன் தன்னைத் தாங்குநர்
இல்லை என் வாழ்முதலே
உற்றடியேன் மிகத்தேறி நின்றேன்
எனக்குள்ளவனே.

இந்த மூன்று நிலைகளும் பெரும்பாலும் உயிர்கள் அடையும் நிலைகளே. எத்தகைய பெரும் பிழைகளைச் செய்யும் உயிர்களுக்கும் எத்தகைய கடைப்பட்ட நிலையில் நிற்கும் உயிர்களுக்கும் கருணை மழை பொழிந்து ஈடேற்றும் இயல்பினை உடையவன் இறைவன்

''நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவன தத்துவன்''

என்று உயிர்கள் நிற்கும் கடைப்பட்ட நிலையையும் இறைவனது மேம்பட்ட கருணையையும் விளக்குகிறார் மாணிக்கவாசகர்.

எனவே பிழைகளை மிகுதியாகச் செய்த உயிர்கள்கூட தமக்கு இனி உய்வு இல்லை என்று தளர்ச்சி அடையவேண்டியதில்லை. இறைவன் எக்காலத்தும் எல்லா உயிர்க்கும் அருள் செய்து கொண்டே இருக்கிறார். இறைவனே வெறுத்தால் உயிர்களுக்குப் புகலிடம்தான் யாது?

எனவே கடைப்பட்ட நிலேயில் உள்ள உயிர்கள் திடீரென்று இறைவனது திருக் குறிப்பை நிறைவேற்றும் உயர் நிலேக்கு வராவிட்டாலும் புலன்கள் நம்மைப் பிழை செய்யத் தூண்டுகின்றனவே. நாம் இறைவனது திருக்குறிப்பை நிறைவேற்ரு விட்டால் நமக்கு உய்வில்லேயே நம்மை இறைவன் என் செய்வானே என்று புலன் களோடும் அறிவோடும் போராடும் நிலேயை அடையலாம்.

போராடும் நிலேயில் உள்ள உயிர்கள் விரைவில் அவன் அருளாலே அவன் குறிப் பறிந்து ஒழுகல் இயலும்.

உயிர்கள் பிழைகளேயே செய்யும் நிலேயை

''பெற்றது கொண்டு பிழையே பெருக்கி''

என்னும் தொடரினுலும் பிழைகளேச் செய்யுமாறு தூண்டும் புலன்கள் ஒருபுற மும் இறைவன் என் செய்வானே என்னும் அச்சம் ஒருபுறமும் இழுப்ப இடையே உயிர் நிற்கும் நிலேயை

''ஈர்க்கின்ற அஞ்சொடு அச்சம்
வினேயேனே இருதலேயே''

என்னும் அடியினுலும், அந்த நிலேயையும் கடந்து இறைவனது திருக்குறிப்பறிந்து நடக்கும் மூன்ருவது நிலேயை

''நின் விது விதுப்பேனே''

என்னும் தொடரினுலும் மாணிக்கவாசகர் விளக்குகிருர்.

❋

தீர்க்கின்ற வாறுஎன் பிழையைநின்
சீரருள் என்கொல் என்று
வேர்க்கின்ற என்னே விடுதி
கண்டாய் விரவார் வெருவ
ஆர்க்கின்ற தார்விடை உத்தர
கோசமங் கைக் கரசே
ஈர்க்கின்ற அஞ்சொடு அச்சம்
வினேயேனே இருதலேயே

❋

குதுகுதுப்பு இன்றி நின்று என்குறிப்பே
செய்து நின்குறிப்பில்
விதுவிதுப்பேனே விடுதிகண்டாய்
விரையார்ந்து இனிய
மதுமதுப் போன்று என்னே வாழைப்
பழத்தின் மனங்கனிவித்து
எதிர்வது எப்போது பயில்விக்
கயிலேப் பரம் பரனே.

❋

## நேர்மை உன்னுள்ளே

எப்பொழுதும் நேர்மையாகவே இரு. அப்பாதையிலிருந்து ஒரு போதும் வழுவாதே—நிமிர்ந்து நில். மனேதிடத்துடனிரு. எதற்கும் அஞ்சாதே! உண்மையைக் கைக்கொள். எங்கும் எப்புறமும் அதைப் பரப்பு, பறைசாற்று. மனதை இறைவனிடம் செலுத்து. அகங்காரம், மமதை, செருக்கு இவற்றை ஒழி. எல்லோரிடமும் சகோதர அன்பை வளர். புலன்களே அடக்கு. அதிக நம்பிக்கையுடனும் உண்மையுடனும் மனமுருகிப் பிரார்த்தனே செய். எளிமை, அடக்கம் இரண்டையும் கைக்கொள்.

— சுவாமி சிவானந்தர்.

# "தம்பிரான் தோழன்"

கி. வா. ஜகந்நாதன்

சைவத்திரு முறைகளில் ஏழாவது சுந்தரமூர்த்தி நாயனர் திருவாய் மலர்ந்தருளியது. இந்த ஏழு திருமுறைகளும் சேர்ந்து தேவாரம் என்றும், அடங்கன் முறை என்றும் வழங்கும். சுந்தரர் பாடிய ஏழாந்திருமுறையில் நூறு பதிகங்கள் உள்ளன. அவர் பாடியவை முப்பத்தெண்ணுயிரம் பதிகங்கள் என்றும் அவற்றில் செல்லால் அழிந்தவை போக எஞ்சியவையே இந்த நூறு என்றும் திருமுறை கண்ட புராணத்தால் அறிகிறேம்.

சுந்தரமூர்த்தி நாயனர் திருக்கைலாயத்தில் சிவபெருமானுடைய பிரதிபிம்பத்தினின்று தோன்றி அப்பெருமானுடைய திருத்தொண்டைப் புரிந்துவரும் ஆலால சுந்தரரின் அவதாரம் என்று பெரிய புராணம் சொல்கிறது. சுந்தரர் என்ற திருநாமம் இந்தப் பழைய நிலையைக் கருதியே வழங்குவது. அவருக்குத் தாய் தந்தையர் வைத்த திருநாமம் ஆரூரன் என்பது அந்தப் பெயரையே அவர் பெரும்பாலும் தம்முடைய பதிகங்களின் இறுதிப் பாடல்களில் அமைத்திருக்கிறர்.

"ஆரூர னெம்பெரு மாற்காள்
அல்லேன் எனலாமே"

அதுவே ஊரன் என்றும் உறிதி வழங்கும்.

"ஊரன் உரைத்தசொல்
மாலைகள் பத்திவை"

இறைவன் முதியவர் வேடம் பூண்டு வந்தபோது வன்மை போதியமையால் அவனே வன்றெண்டன் என்ற திருப்பெயரை வழங்கினுர்.

"வன்றெண்டனூரன்
உரைத்ததமிழ்"

இறைவனிடம் அன்பு செய்யும் முறைகள் பல. சுந்தரர் சிவபெருமானுடைய தோழராக அன்பு செய்தார். இந்தத் தோழமை நெறியைச் சகமார்க்கம் என்று சொல்லுவர். இதனுல் சுந்தரமூர்த்தி நாயனுருக்குத் தம்பிரான் தோழர் என்ற திருப்பெயர் அமைந்தது. எம்பெருமானுக்கும் தமக்கும் உள்ள தோழமை உறவைச் சில இடங்களில் சுந்தரரே சொல்கிறுர்.

"தோழமை அருளித்
தொண்டனேன் செய்த
துரிசுகள் பொறுக்கும் நாதனே"

"என்னுடைய தோழனுமாய்
யான் செய்யும் துரிசுகளுக் குடனுகி"

"நாதனை என்றனை ஆள் தோழனை"

ஆதி சைவகுலத்தில் பிறந்தமையால் நம்பி என்ற பெயர் இவருக்கு உரியதாயிற்று.

இதனுல் பிற்காலத்தவர்கள் இவரை ஆளுடைய நம்பி என்று வழங்கலாயினர்.

"நாவலர்கோன் நம்பி
யூரன் சொன்ன
சந்தம்மிகு தண்டமிழ்மாலை"

இதனுல் பிற்காலத்தவர்கள் இவரை ஆளுடைய நம்பி என்று வழங்கலாயினர்.

இறைவனுடைய தோழமை பெற்றதனுல் இவர் பாடல்களில், ஏழை நண்பன் ஒருவன் செல்வனுகிய தன் நண்பனேடு பேசும் வகையில் பல இடங்கள் அமைந்

திருக்கும். சில சமயங்களில் மிடுக்குடன் இன்னது வேண்டும் என்று கேட்பார்; இன்னும் சில சமயங்களில் மிக பணிவுடன் இருப்பார். இறைவனுக்கும் தமக்கும் உள்ள தொடர்பைக் கூறிப் பெருமிதம் கொள்வார். சில இடங்களில் இறைவனைப் பரிகாசம் செய்வார். இறைவனுடைய பராமுகம் கண்டு சினம் மூண்டு பாடிய பாடல்களும் உண்டு. இவர் பாடல்களில் இவருடைய உணர்ச்சிகளோடும் வாழ்க்கையோடும் ஒட்டிய பாடல்களே மிகுதி. சுந்தரர் தேவாரத்தில் திருத்தொண்டத் தொகை என்ற பதிகம் இருக்கிறது. சிவனடியார்களாகிய நாயன்மார்களின் பெருமையை இன்று நாம் எல்லாம் உணர்ந்து பாராட்டி உய்வதற்குரிய வழியைக் காட்டியது அத்திருப்பதிகமே. அது இல்லாவிட்டால் அறுபத்து மூவர் என்றவரையறை இராது. நம்பியாண்டார் நம்பி அதனை விரித்துத் திருத்தொண்டர் திருவந்தாதி பாடினார். அதனைப் பின்னும் விரித்துச் சேக்கிழார் பெரிய புராணத்தை அருளினார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் நடுநாட்டில் உள்ள திருநாவலூரில் பிறந்தவர். திருவெண்ணெய் நல்லூரில் இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றவர். சிவபெருமான் இவருக்குத் திருமணம் நிகழவிருந்த சமயத்தில் தடுத்தாட்கொண்டான். பதினெட்டு ஆண்டுகள் இவர் நிலவுலகில் வாழ்ந்தார் என்று ஒரு பழம் பாடல் தெரிவிக்கின்றது. இறுதியில் இறைவன் அனுப்பிய வெள்ளை யானையின் மேல் ஊர்ந்து திருக்கைலாயம் சென்றார். ஆடி மாதம் சுவாதித் திருநாளில் இவர் கைலாயம் சேர்ந்தார் என்பர். சுந்தரமூர்த்தியார் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவரென்று ஆராய்ச்சியினால் தெரியவருகிறது.

❋

## சிந்தனைக்கு

ஒரு முதலை, நரியின் காலென்று நம்பிப் புங்கம் வேரைக் கவ்வியது — இறுகக் கவ்வியதினால், முதலையின் உள் முரசில் இரத்தம் பெருகினது. முதலை அந்த இரத்தத்தை நரியின் காலிற் பெருகிய இரத்தமென்று சொல்லிச் சுவைத்தது. இந்தக் கதை பாலர்களின் பாலபாடத்தில் வருகின்றது. வளர்ந்த மனிதன் பாலபாடக் கதையை மறந்து, சேற்றிலே கிடக்கிற முதலையைப் போலப் புங்கம் வேர் போன்ற இந்த உலக சுகங்களையே கட்டிச் சுவைக்கின்றான். அதனாலே கவலைகளைப் பெருக்குகின்றான். உலக சுகங்களைத் தந்த, உலகத்தின் மூலகாரணமான திருவருளை சிந்திக்கின்றானில்லை.

— பண்டிதமணி.

# திருவள்ளுவரின் சமயக் கொள்கைகள்

செந்தமிழ்மாமணி—சித்தாந்த வித்தகர் மு. வயிரவப்பிள்ளை

தொன்மையும் புதுமையும் அமையப் பெற்றது எம் செந்தமிழ். அது என்று முளது என்று போற்றப்பட்டிருக்கிறது. அதற்கு வான்புகழ் தேடித்தந்தவர் திருவள்ளுவப்பெருந்தகை. உலகினுக்கே உயர்ந்த ஒழுக்கநெறி தந்த பெரியார். அவர் வாழ்ந்து சென்று ஏறக்குறைய 2000 ஆண்டுகளாகியும் அவரை நினைப்பதற்குக் காரணமாயிருப்பது அவர் அருளிய ஒப்பற்ற திருக்குறளே. அவருடைய வாழ்க்கை வரலாறுகள் எல்லாம் பிற்காலத்தில் ஊகித்தெழுதப்பட்டவையாகும். அவரது சமயக்கொள்கைகளை அவர் எம் நல்வாழ்வுக்குத் தந்தருளிய ஒழுக்க நூலிற் கிடைக்கும் கருத்துக்களைக் கொண்டே பெரும்பாலும் அறியலாம்.

காலத்துக்குக் காலம் உலகத்திலே ஒவ்வோர் பகுதியில் பேரறிஞர்கள் தோன்றி அவ்வப்பகுதிகளில் வாழும் மக்கள் நல்வாழ்வு வாழவேண்டுமென வழிகள் வகுத்துள்ளார்கள். அவர்கள் பெயரால் சமயங்களும் பல உண்டாயின. சமயக்கருத்துக்களும் ஒரேவழி ஒன்றோடொன்று முரண்படுவதாயிருக்கின்றன. ஆயினும் தத்தம் மதங்களே அமைவதாக அரற்றி மலைக்கின்றனர். எல்லாச்சமயத்தவரும் ஏற்றுப் போற்றும் ஒழுக்க நூல் செய்தபெருமை எம் திருவள்ளுவனுருக்கே உண்டு. இதனையே கல்லாடனும்,

''நன்றென எம்பாலரும் இயைபவே
வள்ளுவனுர்
முப்பால் மொழிந்த மொழி'' என்றார்.

திருக்குறளிற் கூறப்பட்டவை எந்நாட்டவர்களுக்கும், எச்சமயத்தவருக்கும், எக்காலத்துக்கும் பொதுவானவை. அது ஒரு சமயப்பொது நூல், சமயங்கடந்த நூல் என்றும் சொல்லலாம். திருக்குறளைப் பாயிரத்தினோடு பகிர்ந்ததற் பின் போயொருத்தர் வாய்க்கேட்க நூலுளவோ! என்று ஒரு புலவர் கூறினர். அதனல் அது ஒரு தன்னேரில்லாத நூல். அதனலேயே ஆங்கிலம், இத்தாலி, பிரெஞ்சு, ஜெர்மன், ருஷியா முதலிய பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. அண்மையில் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இத்தகைய நூலைச் செய்த திருவள்ளுவருடைய சமயம் எதுவென்று அளந்து சொல்ல முடியாதிருக்கின்றது. கடவுளின் தன்மையை அளக்க முடியாததுபோல அவருடைய சமயமும் கடந்து நிற்கின்றது. சைவரும் சைனரும், வைணவரும், பௌத்தரும் மகமதியரும், கிறீஸ்தவரும் அவரை தத்தம் சமயத்தவராயிருந்திருக்கலாமென்றும் அல்லது தம் கொள்கைகளைக் கைக்கொண்டவரென்றும் குறளில் கிடைக்கும் சிலபல கருத்துக்களைக்கொண்டு சொல்லிக் கொள்கின்றனர். வள்ளுவரை இன்ன சமயத்தவர்தான் என்று அறுதியிட்டுக் கூறமுடியாத முறையில் அவருடைய நூல் அமைந்திருக்கிறது. ஆயினும் அவர் தந்த தனிசிறந்த ஒழுக்க நூலிற் கூறப்பட்டவைகளிலிருந்து எச்சமயக்கொள்கைகளை பெரும்பாலும் அடிப்படையாகக்கொண்டு திருக்குறள் அமைந்திருக்கிறது என்று ஆராய்தல்கூடும்.

எல்லாச் சமயங்களும் நல்லவற்றைச் செய்ய வேண்டுமென்றும், தீயவற்றை விலக்கவேண்டுமென்றும் கற்பிக்கின்றன.

பொய் பேசப்படாது; களவெடுக்கப் படாது; கள்ளுண்ணப்படாது; பிறர்மனை விழையப்படாது என்பன எல்லாச்சமயத் தவர்களும் போதிக்கும் பொதுவான நெறிமுறைகள். அவற்றைப்போல் செய் நன்றி மறவாதிரு; விருந்தோம்பு; இன்னா சொல்லாதே; புறங்கூறாதே; அழுக்காறு படாதே என்பனவையும் பொதுவான வையே. இவற்றையெல்லாம் கருத்துட் கொண்டு திருக்குறள் யேசுநாதர் மலை யின்மேல் நிகழ்த்திய உபதேசத்தின் எதி ரொலியே என்பர் கிறிஸ்தவர், எல்லா நூல்களிலும் நல்லன எடுத்து 'எல்லார்க் கும் பொதுப்படக் கூறுதல் திருவள்ளுவர்க் கியல்பு' என்று பரிமேலழகர் கூறியிருப் பதை இதற்கு மேற்கோள் காட்டி வாதிப் பார், அதுவுமன்றி

''கழா அக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதைபுகல்''

என்ற குறளில் வரும் ''பள்ளி'' என்னும் சொல் தாங்கள் தொழும் இடத்தைக் குறிக்குமென கிறீஸ்தவரும், இஸ்லாமி யரும் சொல்வர். ஆயினும் ''உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு'' என்ற குறளாலும், ''ஒருமைக் கட்டான் கற்றகல்வி ஒரு வர்க்கு எழுமையும் ஏமாப்புடைத்து'' என்னும் குறளாலும் பெறப்படும் மறு பிறப்பை அவர்கள் உடன்படாதவர் என்பது காணக்கிடக்கிறது.

பௌத்தர்களும் ''மலர்மிசை ஏகி னான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடு வாழ்வார்'' என்ற குறளில் மலர்மிசை ஏகினான் என்பது புத்தபகவானையே குறிப்பிடுகிறது என்றும், புத்தருக்கு பூமிசை நடந்தோன், போதன் என்ற பெயர் நிகண்டில் குறிப்பிடப்பட்டுள்ள தென்றுங் கூறுவர். அத்துடன் ''தலைப் பட்டார் தீரத்துறந்தார் மயங்கி வலைப் பட்டார் மற்றையவர்'' என்ற கருத்தை பெரிதும் வலியுறுத்துவது பௌத்தமதம் என்பர். ஆயினும் அவர்கள் ஞானமே கடவுள் என்றும் ஞானமே ஆன்மா என்றும் கருதுபவர் ஆதலின் வள்ளுவர் முழுமுதற் கடவுள் ஒன்று உண்டு என் றும் உயிர்கள் பல என்றும் வினையின் வழி பிறந்து இறந்து இறைவன் அருள் பெறும்வரை உழலும் என்றும் கூறுவத னால் அவர் பௌத்த கொள்கையினர் என்பது பொருந்தாததாகும்.

சமணசமயத்தவரும் மலர்மிசை ஏகி னான்; பொறிவாயில் ஐந்தவித்தான்; அறவாழி அந்தணர் எனக் குறளில் கூறப்பட்டவை தம் அருகக்கடவுளையே குறிக்கும் என்றும் கொல்லாமை, புலால் உண்ணாமை முதலிய கருத்துக்கள் தங் கள் கொள்கைகளைத் தழுவியவை என்றும் அவர் சமணசமயத்தைச் சேர்ந்தவர் என் பர். அவர்கள் ஆகாயம் நீங்கிய ஏனைய நான்கு பூதங்களின் சேர்க்கையால் தோன்றும் உயிர் அணு, வினைக்குக் காரணமான உடலை எடுக்கிறது. என்பர் ஆனால் உயிர்கள் வினைக்கீடான உடலைத் தாம் எடுப்பதில்லை, வினைகள் அறிவற்ற னவாதலின் அவைகள் உயிர்களைத் தாமே சென்று அடைவதில்லை. ஆதலால் ''வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது'' எனக் குறளில் கூறியிருப்பதுபோல வகுத் தானாகிய இறைவன் வினையை அளந்து தர உயிர்கள் பிறந்து அனுபவிக்கின்றன என்பது வள்ளுவர் கொள்கை, ஆதலின் அவரைச் சமணசமயக் கொள்கையினர் எனக் கூறுவதும் பொருந்தாது.

வைணவரும் ஆதிபகவன்; வால் அறி வன்; மலர்மிசை ஏகினான்; தாமரைக் கண்ணன் என்று வள்ளுவர் கூறியது மகாவிட்டுணுவையே குறிக்கும் என்றும்; ஆகவே திருவள்ளுவர் வைணவக் கொள் கையுடையவர் என்பர். அவர்கள் சடமும் சித்துமாகிய எல்லா உலகமும் வாசுதே வனின் பரிணாமம் என்பர். ஆனால் வள் ளுவர் அகர எழுத்துப்போல் இறைவன் உலகுக்கு முதல் என்பதனால் அகரம் வேறு; மற்றைய எழுத்துக்கள் வேறு; அவற் றைக் கலந்து இயக்குவது அகரம் என்பது தெரிகிறது. அதேபோல இறைவன் ஒன்று உயிர்கள் பல, இறைவன் அவற்றோடு

கலந்து அவற்றை இயக்குகிறது என்பது முதற்குறளால் பெறப்படுகிறது.

திருவள்ளுவர் கூறிய பாயிரத்தையும், துறவியலில் கூறிய நிலையாமை முதலிய நான்கு அதிகாரங்களையும் ஆராய்ந்தால் அவர் கூறியிருப்பவை சைவசிந்தாந்த சாஸ்திரங்களில் கூறப்பட்ட உண்மைகளுடன் ஒத்திருப்பதைக் காணலாம். ''அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு'' என்ற முதற் குறளிலேயே பதியுண்மையை விளக்குகின்றார். உயிர் எழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் எப்படி அகர எழுத்தை முதலாகக் கொண்டு அதன் உதவியால் அவை உச்சரிக்கப்படுகின்றனவோ அதேபோல் உயிர்ப்பொருளையும் உயிரில் பொருளையும் இயக்கி ஆள்பவர் கடவுள் ஆகும். அக்கடவுளும் அக்கினியிற் சூடுபோல இறையினின்றும் பிரிக்கப்படாத அவனுடைய அருட் சத்தியாகும் என்பது போதர ஆதிபகவன் என்றார். ஆதி என்பது அருள். பகவன் என்பது பிரிப்பவன் எனப் பொருள்படும். அதாவது உயிர்களை மலத்தினின்றும் பிரிப்பவன். ஆதிபகவன் என்பது ஆதியாகிய அருட்சக்தியை பாகமாயுடையவன் என்றும் கொண்டு மாதொரு பாகன் என்ற பொருளும் கொள்ளலும் கூடும். இக்குறளினால் உலகிற்கு ஒரு முழுமுதலுண்டு என்பது பெறப்படுகின்றது. உமாபதி சிவாச்சாரியாரும் இதனையே ''அகரவுயிர் போல் அறிவாகி யெங்கும் நிகரில் இறைநிற்கும் நிறைந்து'' என்று கூறியிருக்கின்றார்.

உலகிற்கு முழுமுதலுண்டு என்று கூறிய பெரியார் அதைக் கற்றுக்கொண்டதாலுள்ள பயன் அவருடைய நல்ல திருவடியைத் தொழுதலேயாமென ''கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்'' என்று கூறினார். அப்படியான முழுமுதலை தொழுமிடம் உள்ளத் தாமரையென்பதைக் காட்ட ''மலர்மிசையேகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ்வார்'' என்று பாடியருளினார். அப்படித் தொழுவார் எல்லாவுலகிற்கும் மேலாய வீட்டுலகின்கண் அழிவின்றி வாழ அருள்வாரென்று கூறியவர். அப்படியருளினும் இறைவன் விருப்பு வெறுப்பில்லாதவர் எனக் கடவுளின் தன்மையைக் கூறுகின்றார். கடவுள் உள்ளன்போடு தொழுவார்க்கு அருள் செய்யுங்கால் விருப்புடையரெனவும் அங்ஙனம் தொழாார்க்கு அருள் செய்யாவிடத்து வெறுப்புடையரெனவும் கூறப்பட்டுக் கடவுட்தன்மையில் மாறுபடுவரோ என்று ஐயம் எழுதல் கூடும். அவர் நோய்க்கு மருந்து போலிருக்கின்றார் என்பதனை உணரவேண்டும். மருந்துண்டார் நோய்நீங்கி இன்பம் எய்துவர். மருந்துண்ணாதார் நோய்வாய்ப்பட்டு துன்பம் எய்துவர். அம்மருந்து ஒருவரிடத்தில் விருப்பும் ஒருவரிடத்தில் வெறுப்பும் கொள்வதில்லை. அங்ஙனமே கடவுளும் என்க.

நாம் ஒருவரை வணங்குங்காலத்து அவருடைய சிறப்பு முதலியவற்றைக் கூறுவதுபோல இறைவனைத் தொழுங்காலத்துக் கூறவேண்டிய சிறப்பு முதலிய புகழ்கள் எண்ணிறந்தன. அப்புகழ்களைச் சொல்லி வழிபடுக என்பார்,

> ''இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
> பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு''

என்றார். இறைவன் அடியவர்களுக்கு அருள் செய்யும் பொருட்டுக் கொள்ளும் திருவுருவில் ஐம்பொறியும் காணப்பட்டாலும்; அவை அடியவர்தம் நன்னிலை வாய்ந்த பொருள்களேபோல் அவ்விறைவன் வயப்பட்டு நமக்கு இன்பம் செய்யாநிற்கும் என்பதை வலியுறுத்துவார். ''பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க நெறி நின்றார் நீடுவாழ்வார்'' என அருளினார்.

இவ்வகைக் கடவுள் இரண்டல்ல ஒன்றே எனத் ''தனக்குவமையில்லாதான் தாள்சேர்ந்தார்க்கல்லால் மனக்கவலை மாற்றலரிது'' என மொழிந்தார். நம்முடைய மலநீக்கமும், இருவினை நுகர்வும் நிகழ்த்தற்பொருட்டு அருளால் நமக்குண்டாகிய உருவம்போலக் கடவுளுடைய திருவுருவம் மாயாகாரியமோ என்று

ஐயுறுவார்க்கு தோன்றி மறைதலன்றி என்றும் ஒரு படித்தாயிருக்கின்ற அறமாகிய அருளே ஆண்டவன் திருவுருவமென விளக்கற்பொருட்டு "அறவாழி யந்தணன் தாள்சேர்ந்தார்க்கல்லாற் பிறவாயி நீத்தலரிது" எனக் கூறினர். அவருக்கு இதற்கு முன் குறித்த எட்டுத் திருக்குறள்களிலுமுள்ள முதன்மை; மெய்யுணர்வு; அளவிலின்பம்; பிணிப்பிலாத்தன்மை; பேரருள்; முற்றுணர்ச்சி; முடிவிலாற்றல்; அருளுரு என்ற பண்புகள் எட்டுண்டென்று கூறுவார்.

"கோளிற் பொறியின் குணமிலவே
எண்குணத்தான்
தாளேவணங்காத் தலை"

எனப்பாடியருளினர். இறைவன் திருவடிகளே இடைவிடாது சிந்திப்பவர் ஈற்றில் பெறும் பயனைக் கூறுவார். பிறவிப்பெருங் கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதாரென்று அருளிச் செய்தார்.

முதற்குறளாற் பெறப்பட்ட இறைவனே இரண்டு முதல் ஒன்பது முடியத் தொழற்காம் முறை முதலியவை கூறி பத்தாங்குறளில் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து இறைவனடி தொழல் பிறவிப் பயனே என்று காட்டி நாம் உய்யவழியினைக் கூறியுள்ளனர். கடவுள் வாழ்த்துப் பத்துப் பாட்டுக்களில் ஏழு பாக்களிலும் இறைவன் திருவடியைத் தொழுதல் கூறு முகத்தால் நாம் நமது வினைக்கீடாக மாறி மாறிப் பிறக்கும் பிறப்புவகை ஏழு என்பதும் எல்லாப் பிறப்புகளிலும் அவருக்கு நாம் அடிமை என்பதும் முடிவில் வீடு அடைதலென்பது, அவருடைய திருவடியின்பம் என்பது காணக் கிடக்கின்றது. இறைவன் இத்தன்மையன் என முதற் குறளாலும், அவருடைய குணங்கள் இன்ன என்று மற்றைய குறள்களாலும், தொழார்; சேர்ந்தார்; புரிந்தார்; நின்றார் என்ற பதங்களை கொண்ட குறள்களால் உயிர்கள் பல என்றும், எத்தன்மைய என்றும் இருள்சேர் இருவினை; உலகு என்றவற்றால் ஆணவம், கன்மம், மாயையால் ஆன்மா பந்திக்கப்பட்டிருக்கிறதென்றும் இறைவனைத் தொழுது அருள் பெற்று பிறவிப் பெருங்கடல் நீந்தவேண்டுமென்றும் சுருக்கமாய் முப்பொருளுண்மையை சைவசித்தாந்தத்தில் கூறியவண்ணம் விளக்கியுள்ளது உணர்ந்து இன்புறவேண்டியதே.

கடவுள் வாழ்த்தின் பின்னர் கடவுளின் அருள்வெளிப் பாடாகிய வான் சிறப்பையும் அவ்வருள் விளக்கம் பெற்ற பெரியார்களே மக்களுக்கே அறிவித்தாலன்றி அறியமாட்டார்களாதலால் அதன் பின் நீத்தார் பெருமையையும் அவர்கள் வகுத்த அறத்தின் வழியொழுகினலன்றி பயனடையமாட்டார்களென அறன்வலியுறுத்தலையும்; பாயிரத்தில் தம்நூலில் கூறும் பொருளை பருப்பொருளாகக் கூறித் துறவறத்தில் உலகத்தின் நிலையாமையைக் காட்டி துறவு பூண்டு மெய்யுணர் வெய்தி அவாவறுத்து பற்றற்றான் பற்றினைப் பற்றி ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே பேரா இயற்கைதரும் என வீட்டையும் முறையும் கூறியுள்ளார். திருவள்ளுவருக்கு நாயனர் என்றும் ஒரு பெயர். சைவர்கள் அவரைத் திருவள்ளுவ நாயனரென வணங்குவர். அவர் செய்த குறளும் நான்கு வேதங்களின் முடிவாகிய உபநிடதங்களும், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர், திருநாவுக்கரசு நாயனர், சுந்தரமூர்த்திநாயனர் ஆகிய மூவரும் அருளிச் செய்த தேவாரமும்; மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருக்கோவையார், திருவாசகங்களும், திருமூலர் அருளிச்செய்த திருமந்திரமும் ஒரு பொருளையே குறிப்பனவென்று நல்வழி தந்த ஔவைப்பிராட்டியார் கூறியுள்ளார். அதுதான்,

"தேவர் குறளும் திருநான் மறை முடிவும்
மூவர்தமிழும் முனிமொழியும் — கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசக மென்றுணர்" என்பதாகும்.

திருநான் மறைமுடிபு என்பவற்றிற்கு உரையெழுதியவர்கள் நான்கு வேதங்களின் முடிவாகிய உபநிடதங்களும் என்று பொருள் கூறியுள்ளாராயினும் மற்றைய நூல்கள் எல்லாம் தமிழ் நூல்களாயிருப்பதால் நான்மறை முடிபு என்பது தமிழில் உள்ள சந்தனசிரியர்கள் இயற்றிய சைவசித்தாந்த சாஸ்திரங்கள் பதினன்கையும் குறிக்கலாமெனவுங் கொள்ளலாம்.

ஆகவே இதுகாறும் கூறியவாற்றால் திருவள்ளுவரின் சமயக் கொள்கைகள் பெரும்பாலும் சைவசமயத்தைச் சார்ந்தவை எனத் துணியப்பெறும்.

# பக்திக் கண்கள்

ஆ. கந்தையா, M. A.

தமிழகத்திற் புலவர்கள் பலர் வாழ்ந்தனர். அவர்களுள் இருவர்க்கு மாத்திரம் 'தெய்வ' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டுள்ளது. ஒருவர் தெய்வச் சேக்கிழார், மற்றொருவர் தெய்வத் திருவள்ளுவர். அவ்விருவர் நூல்களிலும் தெய்வ மணங் கமழ்வதைக் காண்கின்றோம். சேக்கிழார் பெருமான் செய்த பெரிய புராணம் சிவமணம் நிறைந்து மிளிர்தலை, அதில் ஈடுபாடு கொள்வோர் இனிது காண்பர். சேக்கிழாரின் இயற்பெயர் ''அருண் மொழித் தேவர்'' என்பதாகும். அருண் மொழி என்பது இறைவனது திருப்பெயர்களுள் ஒன்று. அருண்மொழித்தேவர் பெரிய புராணத்தைப் ''பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப்'' பாடியுள்ளார். சொல்லழகும், பொருட்செறிவும், கற்பனைவளனுமுடைய சேக்கிழார் பெருமானின் செய்யுட்களிற் சிவமணங் கமழ்கின்றது, பக்திச் சுவை ஊற்றெடுத்துப் பாய்கின்றது. பக்திக் கண்களாலே தாம் கண்டவைகளுக்குச் சிவமணம் கூட்டிச் செய்யுள்களிலே தீட்டிய சேக்கிழார் பெருமானின் பெரிய புராணத்தில் ஈடுபாடு கொள்வோர் ''காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி'' நிற்பர்.

எப்போதும் சிவமே காணும் சேக்கிழார் பெருமானின் பக்திக்கண்களுக்குக் காவிரி நாட்டு நெல் விளைவு முழுவதும் சிவ விளைவாகத் தோற்றமளித்தது,. வயல்களிலே நெற்பயிர்கள் ஓங்கி வளர்ந்து, தூய வெள்ளிய உண்மைக் கருவின் வளத்தையுடையனவாகச் சூல் முதிர்ந்து, பசலையடைந்து, சுருளை விரித்துக் கொண்டு நின்றதைச் சேக்கிழார் கண்டார். அவ்வாறு கதிர்கள் அலர்ந்து நின்ற காட்சி, இறைவன் மேல் அன்பு கொண்ட அடியார்களின் விதிர்ப்புறு சிந்தை போன்று சேக்கிழார் பெருமானின் பக்திக் கண்களுக்குத் தோன்றிற்று. எனவே, நெற்பயிர் விளைவை அரன் அன்பர் சிந்தைக்கு ஒப்பிட்டு,

''.............. .............அரனுக்கு அன்பர்
ஆலின சிந்தை போல அலர்ந்தன கதிர்கள் எல்லாம்''

—பெரிய புராணம், திருநாமச்சிறப்பு,
செய் 21.

என்று செய்யுளைக் கவின்பெற அமைத்துள்ளார். நெல்லின் தூய வெள்ளிய உண்மைக் கருவை அரன் அடியார்களின் தூய உண்மையான உள்ளத்திற்கும், கதிர் சூல் முதிர்ந்து அலர்வதை, அடியார்கள் அரன் மேல் அன்பு மிக்குச் சிந்தை அலர்வதற்கும் உவகை கண்ட சேக்கிழார் பெருமானின் பக்திப் பண்பு தான் என்னே!

மேலும், வயல்களிலே உள்ள நெற்கள் சூல்முதிர்ந்து முற்றித் தலைவணங்கி நின்றதைச் சேக்கிழார் நோக்கினர். கூட்டமாக தலை வணங்கி நின்ற அக்கதிர்கள் அன்பின் வயப்பட்டவர்களாகி இறைவனுக்கு ஆட்செய்யும் அடியார்கள் கூடிய போது, ஒருவருக்கு ஒருவர் தலைவணங்கி இறைஞ்சி நிற்பதை நினைவுறுத்தின. பக்திக் கண்களாற் கண்ட அக்காட்சியைச் செய்யுளாகச் செய்துள்ளார் சேக்கிழார்,

''பக்தியின் பால ராகிப் பரமனுக்கு ஆளாம் அன்பர்
தத்தமிற் கூடி னார்கள் தலையினால் வணங்கு மாபோல்
........ ..........................................
வித்தகர் தன்மை போல விளைந்தன சாலி யெல்லாம்''

—பெரிய புராணம், திருநாட்டுச் சிறப்பு: செய் 22.

என்று நெற்கதிர்கள் தலை வணங்கி நிற்பதையும், அது போலப் பரமனுக்காளாம் அன்பர் ஒருவருக்கு ஒருவர் தலை வணங்கி இறைஞ்சுவதையும் சொற்களாலே தீட்டிக் காட்டுகின்றார். அல்லாமலும், அன்பர்களுக்குச் சிவபோகம் விளைவது போன்று நெல் முதிர்ந்து போகம் விளைந்தது என்றும் இறுதியடியின் புலப்படுத்தியுள்ளார். பக்திக் கண் கொண்டு நெல் விளைவைச் சிவவிளைவாகக் காணும் சேக்கிழார் பெருமானின் பக்திப் பரவசத்தை அவர் தம் பாடல் இனிது புலப்படுத்துகின்றது.

சேக்கிழார் பெருமான், பெரிய புராணத்திலே பல விடங்களிற் புள்ளினங்களையும், சுரும்பினங்களையும் புகுத்தித் தம் பாடல்களைப் பக்திப் பெருக்கமையப் பாடிப்போந்தார். பாடல்களைப்படிக்கின்ற பொழுது பறவைகள் பாடுவதையும், வண்டுகள் இசைப்பதையும் நாம் கேட்டு களிக்கலாம். திருவாரூர்ச் சிறப்பை கூறவந்த சேக்கிழார் பெருமான் அவ்வூர்த் தெருப்பக்கங்களிலே, காண்போர் கசிந்துருகி நிற்கக் கூடிய நிகழ்ச்சி ஒன்றினைக் கவின்பெறப் பாடல் ஒன்றிலே படம் பிடித்துள்ளார். செய்யுளைச் செய்த சேக்கிழார் பெருமானே, ''உள்ளம் ஆர் உருகாதவர்!'' என்று வியக்கக் காண்கிறோம்.

திருவாரூரில் சைவமணம் கமழும். அங்கே வாழ்வோர் திருப்பதிகங்களை இசையுடன் பாடிப்பாடிக் கசிந்துருகி நிற்பர் வேத ஓசையும், வீணையின் ஓசையும், தோத்திர ஓசையும், கீத ஓசையும் அங்கே கேட்கும். அவ்வோசைகளைத் திருவாரூர் மக்களின் இல்லங்களில் வளரும் கிளிகள் கேட்டுக் கேட்டு இன்பமடைகின்றன. சொன்னதைச் சொல்லுமல்லவா கிளி? எனவே, திருப்பதிகங்களை கேட்டிருந்த கிளிகள், அப்பாடல்களை வாய்திறந்து பாடிப்பரவசமடைகின்றன.

கிளிகள் திருப்பதிகங்களைப் பாடும் போது நாகணவாய்கள் கேட்டு மகிழ்கின்றன; பரவசமடைகின்றன. இக் காட்சிகளைச் சேக்கிழார் பெருமான்:

''தெள்ளும் ஓசைத் திருப்பதி கங்கள்பைங் கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள்''

-பெரிய புராணம்: திருநகரச் சிறப்பு, செய் 8

என்று எடுத்துரைத்து, ''உள்ளம் ஆர் உருகாதவர்'' என்று வியந்து நிற்கக் காண்கின்றோம். ஆனால், இன்று வானொலிப் பெட்டியைத் திறந்தால் சினிமாப் பாட்டு, வாயைத் திறந்தால் சினிமா மெட்டு என்ற நிலையில் நாம் இன்று வாழ்கின்றோம். திருவாரூர்க் கிளிகள் திருப்பதிகங்கள் பாடின. அதுவும், தெள்ளும் ஓசைத் திருப்பதிகங்களைப் பாடின என்றால் மக்கள் வாயினின்றும் எத்தகைய பாடல்கள் வந்திருக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. மேலும், கிளிகள் திருப்பதிகங்களைப் பாடப், பூவைகள் (நாகணவாய்கள்) கேட்டு இன்புற்றன. அவ்வாறாயின், ஆறறிவு படைத்த நாம் அப்பாடல்களைக் கேட்டிருந்தால் கசிந்துருகிக் கண்ணீர் மல்க நின்றிருப்போமல்லவா?

சேக்கிழார் பாடல் ஒன்றிலே, பறவைகள் பதிகம் பாடக் கேட்டோம். இன்னொரு பாடலில் வண்டுகளைச் சிவனடியார்கள் போலச் சேக்கிழார் பெருமான் காட்டுவதைக் காண்போம். நம்பியாரூரர் தில்லையைச் சென்றடைந்தார். அங்கே கண்ட காட்சிகள் அவரைப் பக்திப் பரவசத்துக்குள்ளாக்கின. தில்லையிலே அவர் கண்டதெல்லாம் இறைவனின் தோற்ற

கமாவே தெரிந்தது. தாமரைப் பூவிலே கிடந்து தேனையுண்ட வண்டுகள், தாழம் பூக்களிலே சென்று உறைந்து வாழ்வதை நம்பியாரூரர் கண்டார். அவ்வண்டுகள் தாழம் பூவை விட்டு வெளியே வந்த போது உடல் எல்லாம் மகரந்தப் பொடியாலே தோய்ந்த அந்த வண்டுகளின் தோற்றம், நம்பியாரூரராக நின்ற சேக்கிழார் பெருமானின் பக்திக் கண்களுக்கு உடல் முழுவதும் திருநீறு அணிந்த சிவனடியார்கள் போலத் தோன்றிற்று. பக்திக் கண்களாற் கண்ட அக் காட்சியைப் பாடலாக அமைக்கின்றார்:

''குன்று போலுமணி மாமதில் சூழும்
குன்று அகழ்க் கமல வண்டலர் கைதைத்
துன்று நீறுபுனை மேனிய வாகித்
தூய நீறுபுனை தொண்டர்கள் என்னச்
...................................................''

பெரிய புராணம்: தடுத்தாட் கொண்ட புராணம், செய். 96

என்பது சேக்கிழார் பெருமான் தீட்டிய சொல்லோவியம். இவ்வாறு பெரிய புராணத்திற் பலவிடங்களிற் பறவைகளையும் வண்டுகளையும் பாடல்களிலே புகுத்திப் பாடல்களை அழகு செய்கின்றார்.

கவிஞனின் உள்ள நிலைக்கு ஏற்பவே அவன் எடுத்தாளும் உவமைகளும் இருக்கும். இராமனின் அழகுக்கு மையையும் மரகதத்தையும், மறிகடலையும், மழை முகிலையும் உவமையாக எடுத்துரைக்கின்றான், கம்பன் இங்கே இயற்கைப் பொருட்களின் வண்ணத்தைக் கம்பன் இராமனின் வண்ணத்திற்கு உவமையாகக் கூறியுள்ளான். ஆனால் பரவையாராக நின்று நம்பியாரூரரின் அழகிய தோற்றத்தை அகக்கண்ணிலே கண்ட சேக்கிழார் பெருமானுக்கு நம்பியாரூரரின் வடிவம் கடவுள் தோற்றமாகவே காட்சி தந்தது, முருகனாகவும், மாரனாகவும், விஞ்சையனாகவும், செஞ்சடையண்ணல் மெய்யருள் பெற்றுடையவனாகவும், நம்பியாரூரர் பரவையார் கண்களுக்குத் தோற்றமளிக்கின்றார்:-

முன்னேவந்து எதிர்தோன்றும் முருகனோ?
பெருகொளியாற்
றன்னேரில் மாரனோ? தார்மார்பின்
விஞ்சையனோ?
பின்னேர் செஞ் சடையண்ணல் மெய்யருள்-
பெற் றுடையவனோ?
என்னே! என் மனந்திரித்த இவன் யாரோ?

பெரிய புராணம், தடுத்தாட் கொண்ட புராணம், செய். 44.

கம்பன் இராமனுடைய அழகுக்கு இயற்கையான மையையும், மரகதத்தையும், மறிகடலையும், மழைமுகிலையும் உவமை கூறினான். ஆனாலோ, தெய்வச்சேக்கிழார் கடவுள்களாக நம்பியாரூரரைக் கற்பனைக் கண்களாற் கண்டு வியந்து நிற்கின்றார். சேக்கிழார் பெருமானின் செய்யுளைப் படிக்கின்ற போதே முருகனும், மாரனும், விஞ்சையனும், நம் அகக்கண் முன்னே மாறி மாறி வந்து செல்லக் காண்கின்றோமல்லவா?

காவிரியின் சீரையும் சிறப்பையும், பண்பையும் பயனையும் போற்றிப் பேசுகின்றார், சேக்கிழார் பெருமான். காவிரியைப் பிரமாவுக்கு ஒப்பிட்டுப் புகழ்கின்றார். கங்கையாகக் கண்டு களிப்படைகின்றார். உமை அம்மையின் கருணைக்கு ஒப்பிட்டுக் காவிரியின் அழகை

அண்ணல் பாகத்தை யாளுடை நாயகி
உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது

திருநாட்டுச் சிறப்பு செய். 6.

என்று சொற்களாலே தீட்டி அழகு செய்கின்றார். இவ்வாறு காவிரியைப் பிரமாவாகவும், கங்கையாகவும் உமை யம்மையின் கருணையாகவும் பக்திக் கண்களாற் கண்டு பரவசமடைகின்றார்.

சிவனடியார்களின் சின்னங்களில் ஒன்றான திருநீற்றைச் சேக்கிழார் பெருமான் போற்றிப் பேசுவதைப் பெரிய புராணத்திற் காணலாம். திருக்கூடற் சிறப்பில் இறைவன் அடியார்களின் உடற்றோற்றத்தையும், உள்ளத் தூய்மையையும் சொற்களாலே தீட்டுகின்றார். அருண் மொழித்

தேவர் திருத்தொண்டர்களின் உள்ளத் தூய்மையை உள்ளவாறு எடுத்துரைக்கச் சேக்கிழார் பெருமானின் சிவவடிவான உள்ளம் விழைந்தது. அப்போது சிவனடியார்களின் உடலிலே விளங்கும் மாசில்லாத திருநீற்றின் தூய்மை, சேக்கிழாரின் பக்திக் கண்களைப் பறித்தது. எனவே, தூய்மையும், வெண்மையும் உள்ள திருநீற்றைத் திருத்தொண்டர்களின் உள்ளத்திற்கு உவமையாக எடுத்துரைத்து அழகு செய்கின்றார்.

மாசிலாத மணிதிகழ் மேனிமேல்

பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்

என்று திருத் தொண்டர்களின் உள்ளத்தின் புனிதத்தைத் திருநீற்றின் புனிதத்திற்கு ஒப்பிட்டுப் பேசுகின்றார் தெய்வச் சேக்கிழார்.

நீள் நிலாவின் தோற்றம் சேக்கிழார் பெருமானுக்குத் திருநீற்றினை நினைவிற்கு கொண்டு வந்தது. சந்திரன் தூய்மையானவன்; பேரொளியுடையவன்; உலகத்தவர்க்கு தன் ஒளியையும், இன்பத்தையும் தருபவன். அதேபோல் வெண்ணீறு தூய்மையானது; பேரொளியுடையது; அணிபவர்க்கு இன்பத்தை அளிக்க வல்லது. எனவே; நெடுவானத்தில் வெண்ணிலாவைக் கண்டபோது அதன் தோற்றமும், செயலும் தெய்வச் சேக்கிழாருக்கு வெண்ணீற்றை நினைவுக்கு கொண்டு வந்ததில் வியப்பில்லையே? பக்திக் கண்களாற் கண்ட அந்தக் காட்சியைச் சேக்கிழார் செய்யுளாகத் தந்துள்ளார்.

''தோற்றம் மன்னுயிர் கட்கெல்லாந் தூய்மையே

சாற்றும் இன்பமும் தன்மையும் தந்துபோய்

ஆற்ற ஆண்டமெ லாம்ப ரந்தண்ணல்

வெண்ணீற்றின் பேரொளி போன்றது நீள் நிலா''

திருநீற்றிற்கும் நீள் நிலாவிற்கும் சேக்கிழார் கண்ட ஒன்றுமை மிகவும் பொருத்தமானதல்லவா?

பிறவிப் பிணியை வேரறுக்க வல்ல சிவனை உணர்த்தும் திருவைந்தெழுத்தின் மகிமையைச் சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்திற் புகழ்ந்து போற்றியுள்ளார். திருவைந்தெழுத்தை உணராத அறிவில்லாதவர்களுடைய நெஞ்சம் இருள் நிறைந்ததாக இருக்கும். இவ்வுண்மையினைச் சேக்கிழார் இனிது தெளிவுபடுத்துகின்றார். கதிரவன் மேற்குத் திசையில் மறைந்த போது, நீண்ட வானம் இருள் சூழ்ந்ததைச் சேக்கிழார் கண்டார். ஒளி மறைந்து இருள் சூழ்ந்தமை திருவைந்தெழுத்தை உணராத அறிவில்லாதவர்களுடைய இருண்ட நெஞ்சம் போலச் சேக்கிழாருக்கு தோன்றிற்று. எனவே, இருண்ட வானத்தை, ஐந்தெழுத்தை உணராத அறிவில்லாதவர்களுடைய இருண்ட நெஞ்சத்திற்கு உவமை கூறிச் செய்யுளாகப் புனைந்துள்ளார்:

''.........................................அரன்

அஞ்செ ழுத்தும் உணரா அறிவிலோர்

நெஞ்சும் என்ன இருண்டது நீண்டவான்''

இங்கு வானம் இருண்டதை எடுத்துரைக்க வந்த சேக்கிழார், பக்தியுணர்வினால் உந்தப் பெற்று, திருவைந்தெழுத்தை உணராதார் நெஞ்சம், தூய்மையில்லாமல் இருண்டு இருக்கும் என்று கூறி, ஐந்தெழுத்தின் மகிமையைப் போற்றிப்பாடுவதைக் காண்கின்றோம்.

இவ்வாறு சேக்கிழார் பெருமானின் பாடல்கள் தெய்வ மணங் கமழ்ந்து கற்போரைப் பக்திப் பரவசத்துக்குள்ளாக்க வல்ல பெற்றி நிறைந்தனவாக இருக்கின்றன. இவ்வகைச் சிறப்பையும், பண்பையும் சேக்கிழார் பெருமானின் செய்யுள்கள் சிலவற்றிலே கண்டோம். பெரிய புராணத்தின் சொல்லழகையும், பொருட் செறிவையும், கற்பனை வளத்தையும் கண்டு களிப்பதோடு பக்திப்பண்பையும் அனுபவித்து இன்பங் காணபோமாக!

மாக்கள் சிந்தையுட் சார்ந்து நின்ற பொங்கிய இருளை,

ஏனைப்புற இருள் போக்குகின்ற செங்கதிரவன் போல''

நீக்க வல்லது திருத்தொண்டர் புராணம்.

# ஏன் பிறந்தார்?

சற்சொரூபவதி நாதன், B. Sc.

நன்னெறி காட்டிய நாயன்மார் நால்வர். அவர்களில் மூவர் தேவாரம் பாடியே அந்தச் சொற் பொருளுக்கு ஏற்ப தெய்வ பக்தியை வளர்த்தவர்கள் (தே-தெய்வம்—வாரம்-அன்பு). அந்த மூவருள்ளும் சின்னஞ்சிறு பிராயத்திலேயே மூன்று வயதுப் பாலகனாகவிருந்த போதே முக்தி நெறி கண்டவர் பேரின்று முக்கண்ணனைப் பாடித்துதித்த பெருமை திருஞானசம்பந்தருக்குரியது. சமயத் தொண்டாற்ற உதித்த சமயக் குரவர் இவர். இவர் பிறந்த காரணம் என்ன என்றொரு கேள்வியை எழுப்பி அதற்குப் பதில் காணவிளைந்தவர் பல ஞானமார்க்கத்தில் நின்று நற்பேறு பெற்றவர்கள். அவர்களுள் சேக்கிழார் பெருமான் கண்ட பதில் பெரிய புராணச் செய்யுளொன்றாகியது.

> தொண்டர் மனம் களி சிறப்பத்
> தூய திருநீற்றின் நெறி
> எண்திசையும் தனிநடப்ப
> ஏழ் உலகும் களி தூங்க
> அண்டர் குலம் அதிசயிப்ப,
> அந்தணர் ஆகுதி பெருக,
> வண்தமிழ் செய்தவம் திரும்ப
> மாதவத்தோர் செயல் வாய்ப்ப—

சிவனடியார் உள்ளம் களிகூர, தூய திருநீறு அணியும் சைவ நெறியானது எண்திசையும் பரவ, ஏழுலகும் மகிழ்ச்சியுற அந்தணர் செய்யும் வேத வேள்விகள் சிறப்புற, தமிழ்த்தாய் செய்த தவம் பயன்பெற, தபசிகளும் தவத்தின் பயன் பெற ஞானசம்பந்தர் அவதரித்தார்.

இவர் ஏன் பிறந்தார் என்ற கேள்வி சங்கராச்சாரியரின் உள்ளத்தெழுந்த போது,

> தருணமங்கலையுனது சிந்தை தழைந்த
> பாலமுதூறிஞல்
> அருண கொங்கையிலது பெருங்கவியலை
> நெடுங்கடலாகுமே
> வருண நன்குறு கவுணியன் சிறு மதலையம்
> புயல் பெருகியே
> பொருணயம் பெரு கவிதையென்றொரு
> புனிதமாரி பொழிந்ததே!

என்று பதில் கிடைத்தது. ஞானமுதிர்ச்சி அடையப்பெறாத நாம் ஞானசம்பந்தர் ஏன் பிறந்தார் என்ற கேள்வியைக் கேட்க முட்பட்டால், நமது அறிவு நமக்குப் பதில் தராவிட்டாலும், அவர் பாடிச்சென்றாரே அந்தப் பண்ணுடன் கலந்த பழந்தமிழ்ப் பாடல்கள் அவை எமக்குத் தகுந்த பதில் தரும் என்பதில் எள்ளத்தனையும் சந்தேகம் இல்லை.

திருப்பிரம்மபுரப்பதிகம் சம்பந்தர் பாடிய முதற்பதிகம். அப்பதிகத்தின் முதற்பாட்டு அதிசயிக்கத்தக்க அகப் பொருட்சுவை மிகுந்தது. காதணியைப் பூண்டு, காளையின்மேல் ஏறி, தூய்மையான வெண்ணீறணிந்து, பிறையைச் சூடி, சுடுகாட்டுச் சாம்பலையும் அள்ளிப் பூசிக்கொண்டு, ஒருவன் வந்தான் அவனே என் உள்ளம் கவர்ந்தவன். அவன் எந்த ஊர், அவனுக்கு என்ன பெயர் என்று கேட்கிறீர்களா, பிரம்மபுரம் என்னும் சீர்காழியில் அமர்ந்திருக்கிறானே ஒரு பெருமான் அவன்தான் என் உள்ளம் கவர் கள்வன் என்று மிக அருமையாக ஞானசம்பந்தர், முதலில் சிவபெருமானை அஞ்ஞான இருளில் அகப்பட்டிருக்கும் எமக்கு அறிமுகம் செய்து வைக்கப் பிறந்தார்.

'வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்க அவதரித்தவர்' சம்பந்தர் என்பதும் பெரியபுராணக் கூற்று. பரசமயங்கள் எதற்கும் சைவசமய நெறி தாழ்ந்ததல்ல என்பதனை எடுத்தியம்ப சம்பந்தர் சமணர்களையும், புத்த சமயத்தவரையும் வாதில் வென்றார். பிற சமயங்களை அவர் தூற்றினார். அதனால் குறுகிய மனப்பான்மை கொண்ட ஒரு சமயத் தொண்டராகத்தான் அவர் வாழ்ந்தார் என்று நம்மிற் சிலர் தப்பபிப்பிராயப் படுகின்றனர். அவர் வாழ்ந்த காலத்தில் தமிழ் நாட்டில் வாழ்ந்திருந்த சமணர்களும் பௌத்தர்களும் தாம் போதித்த அறநெறிகளுக்கு மாறுபட்ட ஒழுக்கங்களைக் கடைப்பிடித்திருத்தல் வேண்டும். அதனால்தான் தீ நெறியில் செல்லும் அவர்களைப் பின்பற்றும் மற்றவர்களை, மாற்றி நன்னெறிக்கு இட்டுச் செல்ல ஞானசம்பந்தர் சமணர்களையும், பௌத்தர்களையும் வைதார் என்று கருதுதலே சாலப் பொருத்தமானது.

உதவிசெய்யும் குணமும் முயற்சியும் உடைய மக்களே சிறந்தவர்கள் என்பது ஞானசம்பந்தர் கருத்து. வேளாளர் என்ற சொல் ஒரு சாதிப்பெயராக வழங்கி வருகிறது. வேள் என்பது முயற்சி என்னும் பொருளுடைய சொல், உதவி செய்தல் என்பதும் இதன் பொருளாகும் என்று அறிஞர்கள் கூறியுள்ளார்கள். இந்தக் கருத்தில் ஞானசம்பந்தர் ஆக்கூர் தேவாரப் பதிக்கத்தில்,

'வாள் ஆர்கண் செந்துவர்வாய்
மாமலையான் தன் மடந்தை
தோள் ஆகம் பாகமாப் புல்கினான்
தொல்கோயில்
வேளாளர் என்றவர்கள் வள்ளன்மையான்
மிக்கு இருக்கும்
தாளாளர் ஆக்கூறில் தான் தோன்றி
மாடமே

பார்வதியோடு பரமசிவன் பன்னெடுங் காலமாக உறையும் பதி தான் தோன்றி மாடம். ஆக்கூரில் உள்ளது அது. அந்த ஆக்கூரிலே சிறந்த வேளாளர்கள் வசிக்கிறார்கள் அவர்கள் வள்ளற்தன்மையில் சிறந்தவர்கள். இடையறு முயற்சி உடையவர்கள். என்று உதவிசெய்யும் குணமும் முயற்சியும் உடையோரே சிறந்தவர்கள் என்று உணர்த்தப் பிறந்தார் ஞானசம்பந்தர்.

இனி மக்களாகப் பிறந்தவர்கள் தேடிக்கடைப்பிடிக்கவேண்டிய நல்லநெறி என்ன என்று கூறும் ஞானசம்பந்தர் அல்லல் மிக்க வாழ்க்கையை ஆதரித்திராது நீர் நல்லதோர் நெறியினை நாடுமின்! நடமினோ! விலலை அன்னவாள் நுதல் வெள்வலை ஓர் பாகமாம் கொல்லை வெள்ளை ஏற்றினர் கோடிகாவு சேர்மினே என்றார்.

இதில்—''மக்களே நீங்கள் துன்ப வாழ்க்கையை விரும்பவேண்டாம், துன்பம் இன்றி இன்பம் அடைந்து வாழக்கூடிய நெறியைக் கடைப்பிடியுங்கள், மக்கள் எல்லோரும் இன்புற்று வாழவேண்டும் என்ற தமது விருப்பத்தை முதலில் தெரிவித்துப் பின் இரண்டு வரிகளிலும் கடவுளை நம்பி அவரைச் சரணாகதியடைவதுதான் இன்பம் துய்க்கும் வழி என்று கேட்பார் மனதில் பதியும்படியாக எடுத்துரைத்து பக்திமார்க்கம் காட்ட அவர் பிறந்தார். ஞானசம்பந்தர் காட்டும் இந்த நன்னெறி பொதிந்து மக்கள் துன்பவாழ்வு வாழாது இன்ப வாழ்வு வாழ வேண்டும், அதற்கு இறைவன் பாதம் போற்ற வேண்டும் என்று அறிவுறுத்தும் மற்றுமொரு திருக்கோடிக்காப் பதிகப் பாடல்—

''துக்கமிக்க வாழ்க்கையின் கோர்வினைத்
துறந்துநீர்
தக்கது ஓர் நெறியினைச் சார்தல் செய்யப்
போதுமின்,
அக்கணிந்து அரைமிசை ஆறு அணிந்த
சென்னிமேல்
கொக்கு இறகு அணிந்தவன் கோடிகாவு
சேர்மினே!''

ஒருவர் காட்டும் நெறி நமது விருப்பத்திற்கு உகந்ததாக இருக்கலாம், அற்றதாக இருக்கலாம். ஆனால் பரந்த மனப்பான்மைகொண்டு பக்தி செய்தோர் காட்டிய நெறிகள் எம்மைத் துன்பத்துள் ஆழ்த்த மாட்டா, இன்பத்தை ஈற்றில் பெறவே அவை வழிவகுக்கும் என்ற நம்பிக்கை எம் மனத்திற் பிறக்குமாயின், அவ்வாறான நம்பிக்கை ஏற்படுத்த, ஞானசம்பந்தரின் பைந்தமிழ்ப் பாடல்களைப் பொருளுணர்ந்து பாட முற்பட்டு விடுவோமாயின், ஞானசம்பந்தர் ஏன் பிறந்தார் என்ற கேள்விக்குமாத்திரம் அல்ல நாம் ஏன் பிறந்தோம் என்ற கேள்விக்கும் விடை கிடைத்துவிடும்.

★

# இதுதான் வாழ்வு

இ. மகேஸ்வரன் B. Sc.

இந்த உலகத்தை அறிவாளிகள் பல கண்கொண்டு பார்க்கின்றனர். சிலர் போர்க்களம் போல் இருக்கிறது இந்த உலகம் என்பர். சிலர் இது ஓர் திக்குத்திசை தெரியாத ஆழம் அறியமுடியாத கடல் போல் அல்லவா இருக்கிறது என்பர். இன்னும் சிலர் அப்பப்பா இது ஓர் நெருப்பு சூழ் போல இருக்கிறது என்பர். எவ்வளவு எதிர்ப்பு இருந்தாலும் நல்ல காரியங்களை செய்து முடிக்கவேண்டி இருக்கிறது. அன்றேல் தர்மம் அழிந்து அதர்மம் தலைதூக்கும். எடுத்த காரியத்தை திறம்பட நிறைவேற்றும்போது இந்த உலகம் ஓர் போர்க்களமாக காட்சிதரும். எவ்வளவு அலை அடித்தாலும் கப்பல் கடலை கடக்கத்தான் வேண்டும். நாமும் அலைகளுக்கு பயந்து பிறநாட்டுப் பயணத்தை நிறுத்தி விடமுடியாது. தீ சுடும். அதே தீயைகொண்டு எமக்கு வேண்டிய உணவை சமைக்க வேண்டி இருக்கிறது.

எமக்கு துன்பம் தருகின்ற இந்த உலகில் வாழ்ந்து கொண்டே எமது ஆன்ம ஈடேற்றத்தை கவனிக்கவேண்டி இருக்கிறது. எம்மிடத்தில் உள்ள மனம் புத்தி முதலிய கரணங்களைக் கொண்டும், மரண பயத்தை தருகின்ற இவ்வுடலை சுமந்து கொண்டு வாழும் போது எவ்வளவோ வேதனை அனுபவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இதனை திருநாவுக்கரசு சுவாமிகள் சிவபெருமானிடம் முறையிடுகிறார். சிவனே! ஒற்றியூர் உடையகோவே! இந்த மாய உலகமாகிய துன்பக் கடலைக் கடந்து உன் திருவடி சேர வேண்டுமே, எப்படிக் கடப்பேன்? என்னிடத்தில் பெரியகப்பல் இல்லை. ஆனால் மனம் என்னும் சிறு தோணிதான் உள்ளது. அதை செலுத்த மதி என்னும் சுக்கான்தான் உண்டு. என்னிடம் உள்ள கோபமாகிய சரக்கை ஏற்றி மனத்தோணியை மதி என்னும் கோலால் ஊன்றி இந்தக் கடலை கடக்க நான் என்ன ஆவேனோ தெரியவில்லை. சிறிய காற்றுக்கோ அல்லது அலைகளுக்கோ இத்தோணி தாங்காது. மதமாகிய பாறையிலே மனமாகிய தோணி அடிபட்டு உடைந்துவிட்டால் உன் திருவடியை நான் அடையமுடியாது. என் உடல் உணர்வு கெட, மனம் சிதற, மதிமயங்க இந்த ஆழம் தெரியாத உலகமாகிய கடலில் என் நிலை பயங்கரமாக இருக்கிறது. எந்தநேரமும் உன் திருவடியையே நினைந்திருக்கும்படியான உணர்வை தருவாயாக.

மனமெனும் தோணி பற்றி மதியெனும்
கோலையூன்றிச்
சினமெனும் சரக்கை ஏற்றி செறிகடல்
ஓடும்போது
மதனெனும் பாறை தாக்கி மறியும்போது
அறியவொண்ணு
உனையுன்னும் உணர்வை நல்காய் ஒற்றியூர்
உடைய கோவே.

கப்பல் எந்தத் திசையில் சென்றாலும் அதில் உள்ள திசைகாட்டி வட துருவத்தையே நோக்கிநிற்கிறது. அதுபோல் மனிதன் எதைச் செய்தாலும் அவன் மனம் என்றும் கடவுள் இடத்தே நிலைத்திருக்க வேண்டும். அப்பொழுது அவன் கடவுளின் திருவடியை அடைவான். என்நேரமும் கடவுளையே நினைந்தவண்ணம் இருந்து எமது மனதை அவர் சிந்தனையில் ஈடுபடுத்தி, அறவழிநின்று செய்யும் செயல்கள் எல்லாம் இறைவனுக்கு செய்யும்

பூசையாக கணிக்கும்போது போர்க்கள மாக காட்சி கொடுத்த இதே உலகம் பூசை செய்யும் கோவிலாக மாறிவிடும். எல்லோருக்கும் பயன்பட வேண்டிய முறையில் இறைவன் என்னிடத்தில் செயல்திறமும், அறிவும், செல்வமும் தந் தார் என்று எண்ணி உலகம் முன்னேற அச்சக்திகளை பயன்படுத்த தீபோல் சுட்டு வேதனை தந்த இன்பதுன்ப இரட்டைகள் மறைந்து உலகம் ஓர் அன்பால் நிறைந்த பூஞ்சோலையாக காட்சிதரும்.

மனம் தான் சகல இன்பதுன்பங் களுக்கும் காரணம், அதைக் கொண்டு மாயா மலக்கடலை கடக்கலாம். நல்ல அறிவு பெறலாம். போர்க்களமான இந்த உலகில் சமயோசிதமாக தவறிக் கொள் ளலாம். ஆனால் அதைப்போன போக் கிலே விட்டால் இந்த உடலும் நாசம் உறும். உயிரும் துன்பப்படும். இதை அறிந்த தாயுமானவர் "சிந்தையை அடக் கியே சும்மா இருக்கின்ற திறன் அரிது" என்றார். சுத்தானந்த பாரதியார் மன தின் தன்மை அறிந்து அதனை உறுதி செய்தால் வேறு வெற்றி வேண்டாம் என்று அறிவுறுத்துகின்றார்.

மனமதே தோற்ற வாதி மனமதே பற்றும் வீடும்
மனமதே எண்ணமாகும் எண்ணமே-வலியபந்தம்
மனமதே மயா பாசமதிலென ஒலிமறைக்கும்
மனதினை உறுதி செய்தால் மற்றொரு வெற்றி ஏனோ!

கடவுளே! எந்நேரமும் நான் உன்னையே நினைந்திருக்க அருள்புரிவாயாக! இதனால் தீபோல் சுடும் இவ் உலகம் மாசில் வீணை யாக, மாலை மதியமாக வீசு தென்றலாக என் உயிரைத் தழுவட்டும். என் மனம் உன் திருநாமத்தையே உச்சரிக்கட்டும். அதனால் மாயா மலக்கடலாகிய இவ்வுல கில் நான் தாழாமல் காலம் என்னும் அலைகளால் கலங்காமல் சாந்தமாக வாழ வேண். சிவனே! நீ என்றும் என் உள் ளத்தில் நிலையாக இருந்து என்னை ஓர் இயந்திரமாகப் பாவித்து, போர்க்கள மான இந்த உலகத்தில் இருந்து சாந்த மான மோட்சத்திற்கு அழைத்துச்செல். அசத்தான் மலத்தில் இருந்து சுத்தமான உன் திருவடிகளுடன் என்னை கூட்டிவை. சாவின் நின்று சாகாமைக்கு அழைத் துச் செல்.

என் கடன் பணிசெய்து கிடப்பதே.
உன் கடன் அடியேனையும் தாங்குதல்.

✻

எல்லோரிடமும் அன்பாயிரு. எல்லோரையும் நேசி. எல்லோருக்கும் தொண்டு செய். எல்லோரிடமும் பெருந்தன்மையாகவும் பொறுமையாகவும் நடந்து கொள். ஏழைகளிடமும் தாழ்த்தப்பட்டவர்களிடமும் கடவுளைக்கண்டு அவர்களுக்குத் தொண்டு செய். கட வுள் உன்னிடம் அத்யந்தப் பிரியம் கொள்வார். நீ சாகா நிலையையும் அடைவாய்.

—சுவாமி சிவானந்தர்.

# இவ்வாறு இறைவனை இறைஞ்சுவாம்

ம. சி. சிதம்பரப்பிள்ளை

இறைவனைக் கூவி இறைஞ்சியவர்கள் பல்லோர். பசியால் வாடிப் பால் என்று பாலகுருவாயா பரிந்துவேண்ட, "பெண்ணாகிய பெருமான்" "தோடுடைய செவியனாக" "மாதிலங்கு திருமேனியுடன்" தோன்றி, ஞானப்பாலை, தம்மகவுக்கு வேண்டளவும் ஊட்டினார் என்பர்.

கடல் மடைதிறந்தாற் போன்று பாலகன் பாமாலை தொடுக்கின்றார். எவ்வாறு! அவனருள் துணைகொண்டு!

நறுமணம் வீசும் பாமாலையில் உள்ள நறுமலர்களிற் சிலவற்றை நாமும் எடுத்து இறைவனை இறைஞ்சுவாம்!

"கங்காளன் கயிலாய மலையாளர்—குன்றேயமர்வாய்—சிராப்பள்ளிகுன்றுடையானை—
அந்தமும் ஆதியுமாகிய வண்ணல்—வீடிலான்
ஞானத்திரளாய் நின்ற பெருமான்—
வேதத் தொலியான்—சுடர்மணி மாளிகைத்
தோணிபுரத்தவன்—பிறப்பாதியில்லான்—"

எனவும்,

"பெண்ணுமோர் பாலுடையான் - இளைத்த
விடையாள் உமையாள் பங்கர்—
உருவிற்றிகழுமுமையாள் பங்கர்—
மாதிலங்கு திருமேனியன்—மருவார்குழலி—
மாதோர் பாகர்—மங்கை பங்காளர்—"

எனவும்,

"வெண்ணீற்றான், பிறையும் புனலுஞ்
சடைமேலுடையார்—வரியார் புலியினுரி
தோலுடையான்—பிறை கொள்
சடையார்—கறை கொள் கண்டர்—
முளை வெண்பிறையார்—பிறைகலந்த
பிரமாபுரத்தன்—பிறையுடையான்—"

எனவும்,

"பொடி யுடைமார்பினர் வார் சடைமேல்
வளரும் பிறையுடையான்—குழையார்காதீர்—
தோடுடைய செவியன்—காதிலங்கு குழையன்—
நீரின் மல்குசடையன்—மின்னிலங்குசடையன்—
நாகம் வைத்த முடியான்—திரையார்
புனல் சூடிய செல்வன்—கலைமான் மறியுங்
கனலும் மழுவுந் நிலையாகிய கையினன்—
வெள்ளை யெருத்தின் மிசையார்—துள்ளு
மிளமான் மறியார்—"

எனவும்,

"பீடுடைய போர்விடையன்—சேடுடையான்
காடுடையான்—சுடலையினாடுவர்—தோலுடை
யான்—நூலுடையான்—மறையுடையான்—"

எனவும்,

"சூலப்படையான்—படையிலங்குகரமெட்டுடை
யான்—ஒன்னார்புரமூன்று மெரித்த ஒருவன்—
காமற் காய்ந்த பிரான்—"


எனவும்,

"ஆரியந் தமிழோடி சையான்"—என்று கூறி இறைவனை இலகுவில் காட்டலாமன்றோ! அலைகடல் மணலை அளவிடலாம். ஆண்டவன் அருட்டிறத்தை அவனருளாலன்றி அணுவளவும் அறிய இயலாது. "அவனருளால் அவன்தாள் வணங்கி" என மணிவாசகப் பெருமான் எடுத்தோதியதும் இதனையே!

ஆகவே
இன்று
ஈசனை
உறுதியான
ஊக்கத்துடன்
என்றும்
ஏத்தி
ஒருகணமும்
ஓதுவதை நீக்காது நினைவில்
நிறுத்துவோமாக!

திருச்சிற்றம்பலம்.

❋



எமது சங்க ஆதரவில் நடைபெற்ற சேக்கிழார் விழாவில் ஓதுவார் திரு. பி. எஸ். இராஜ சேகரன் அவர்கள் இன்னிசை விருந்தளிப்பதையும், திரு. பொன். ஸ்ரீஸ்கந்தராஜா அவர் களும் பாரியாரும் மேடையில் வீற்றிருப்பதையும் காண்க.



திருவெம்பா தினங்களில் அதிகாலையில் வீதி பஜனை செய்த எமது சங்க பஜனைக் குழுவினர்.

# திருவருளால் திக்குலா

கோவை — மணி

எமது சங்க உறுப்பினர்கள் எவ்வளவோ காலம் திட்டம் போட்டிருந்த கோணேஸ்வர கோயில் தரிசனம் இன்றுதான் கைகூடியது, என அகமகிழ்ந்தேன். நாயன்மார்கள் நால்வருள் இருவரால் தேவாரம் பாடப்பட்ட தலம் ஆதலால் அதை இப்பிறவியிலே தரிசிக்க வேண்டுமென்று அன்பர்கள் ஆவல்கொண்டது போற்றத்தக்கதே. முற்கூட்டியே கடிதமூலம் பல ஆதரவாளர்களுடன் தொடர்பு கொண்டோம். திருமலைக்குப் போகும் வழியிலும், திருமலையில் இருந்து வரும் வழியிலும் மற்ற இடங்களிலுள்ள பிரதான கோயில்களையும் சரித்திரப் புகழ் பெற்ற இடங்களையும் கண்டு களிக்கத் திட்டமிட்டிருந்தோம்.

7-5-67 ஞாயிற்றுக்கிழமை காலை 4-30 மணிக்கு இ. போ. ச. பஸ்ஸும் ஏனைய யாத்திரிகர்களும் கொம்பனி வீதி, சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலை வந்தடைந்தனர். கோவிலில் 5-00 மணிக்கு விசேஷ பூசை நடைபெற்றது. எல்லோரும் பூசையில் கலந்து கொண்டோம். கோப்பி அருந்தி பஸ்ஸில் உரிய ஆசனங்களில் யாத்திரிகர்கள் அமர்ந்தார்கள். சங்க அங்கத்தினர்களும் ஆதரவாளர்களும் வழி அனுப்பினார்கள். எமது பாடசாலை மாணவ மாணவிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், விசேட பிரமுகர்கள் உட்பட 67 யாத்திரிகர்கள் காலை 6-00 மணிக்கு கோயிலைவிட்டுப் புறப்பட்டோம். பஸ் சீரான வேகத்தில் செல்கிறது. ''அதோ பாருங்கள் மேகம் திரண்டு மழைக்கோலமாக இருக்கிறது! 6-30 ஆகியும் ஒரே இருளாக இருக்கிறது. மழை வந்து எமது பிரயாணத்தைக் குழப்புமா?'' என்று பயந்து கொண்டிருந்தார் எமது சங்கத் தலைவர் வ. சி. செல்லையா அவர்கள். எல்லோருக்கும் ஒரே பயமாக இருந்தது. பஸ் கொறகொல்ல பண்டாரநாயக்கா சமாதியை அடைந்தது. எல்லோரும் ஒரு நிமிடநேரம் மௌனம் அனுஷ்டித்தபின் பஸ் தொடர்ந்து வேகமாக ஓடியது. கிழக்கு வெளுத்தது. மழைக்கோலம் நீங்கி சூரியன் செங்கதிர்களை மலைச் சாரலில் உள்ள மரங்களுக்கூடாக வீசினான். எல்லோருக்கும் ஒரே மகிழ்ச்சி. பஸ்ஸில் வி. பி. சாமி அவர்களின் முருக பஜனையில் தொண்டர்கள் கலந்து தம்மை மறந்த நிலையில் பக்தி பரவசமானார்கள்.

காலை எட்டு மணியளவில் பஸ் கேகாலைப் பட்டணத்தை அடைந்தது. எல்லோரும் பஸ்ஸில் இருந்து இறங்கி கேகாலைக் கதிரேசன் கோயிலை அடைந்தோம். கோயில் பிரதம குருக்கள் ஆ. கு. தியாகராசக் குருக்கள் எங்களை வரவேற்று எமக்காக விசேஷ பூசை நடத்தினார். பூசையில் கலந்து பஜனை செய்தோம். காலை உணவு கோயில் மண்டபத்தில் நடந்தது.

8-30 மணிக்கு யாத்திரை தொடர்ந்தது. பஸ் பல பிரதான நகரங்களைத் தாண்டி மலைப் பிரதேசத்தை அடைந்தது. பாம்பு போல் நெளிந்து நெளிந்து செல்லும் தெருக்கள் வழியிலே பஸ் சீரான வேகத்துடன் செல்கிறது பஜனையில் மூழ்கியவர் பலர். ஒரு சிலரின் கண்கள் மட்டும் பஸ் கண்ணாடிகளுக்கூடாக மலைச் சாரல் அழகினையும், பள்ளத்தாக்குகளை மூடியிருக்கும் பசுமையான தேயிலைச் செடிகளையும், இடையிடையே நீர் அருவிகளையும், நீர் வீழ்ச்சிகளையும், மலைகளின் உச்சியை மூடியிருக்கும் பனிமுகில் கூட்டங்களையும் நோக்கின. பஸ்ஸும் பேராதனைத் ''தாவரத் தோட்டதை'' அடைந்தது. கால் உளைவு மாற்றுவதற்காக எல்லோரும் அவசரம் அவசரமாக பஸ்ஸைவிட்டு இறங்கு

கிருர்கள். இரு வரிசையாகச் சென்று பூந்தோட்ட வனப்பைக் கண்டு களித்தோம். செல்வர்கள் தி. செல்லத்துரை, ச. மு. விவேகானந்தன், செல்வி த. பாலரஞ்சனி மூவரும் குளிர்பானங்களை நீரில் கலந்து பிஸ்கற்றுகளுடன் எல்லோருக்கும் பரிமாறினுர்கள். நேரம் 11-00 மணியல்லவா? எல்லோரும் விருப்புடன் தாக சாந்தி செய்து பஸ்ஸில் அவரவர் ஆசனங்களில் அமர்ந்தார்கள்.

கண்டி பிள்ளையார் கோவிலை 11-30 மணியளவில் சேர்ந்தோம். கோயில் பிரதம குருக்கள் வரவேற்றுப் பூசை நடத்திஞர். கண்டிப் பிள்ளையாரைத் தரிசித்து பிரார்த்தனை செய்தபின் பேராதனை "பல்கலைக்கழகம்" "தலதா மாளிகை" "கண்டி நகரின் புதிய சந்தை" முதலியவற்றைச் சுற்றிப் பார்த்து பகல் 1-30 மணியளவில் மாத்தளை/பலாபொத்வலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையை அடைந்தோம். அங்கு பாடசாலைத் தலைமை ஆசிரியர், உதவி ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், இந்து மாணவ மன்ற உறுப்பினர்கள், எம்மை வரவேற்றனர். இந்து மாணவ மன்றச் செயலாளர் வரவேற்புரை வழங்கிஞர். அறுசுவை உண்டி பரிமாறப்பட்டது. திருவாளர் விசுவலிங்கம் அவர்களை, தலைமை ஆசிரியர் "அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்" என்னும் தேவாரம் பாடி உணவை அருந்துமாறு வேண்ட, அவரும் "அன்னம் பாலிக்கும்" என்னும் தேவாரத்தில் தொடங்கி பன்னிரு திருமுறைகளையும் பாடிஞர். உணவருந்தியதும் எல்லோருக்கும் ஒரே ஆனந்தம். வாய்க்கு உணவு, செவிக்குத் தெவிட்டாத தோத்திரப் பாடல்கள், கண்ணுக்கு அடியார்களின் திருத்தோற்றம், எவருக்கும் பரம ஆனந்தத்தைக் கொடுக்கும். ஒருவரையொருவர் அன்பால் தழுவினர். பிரிய மனமில்லாது பிரிந்தனர். தலைமை ஆசிரியர் எமது சுற்றுலா வெற்றி பெற நல்லாசி கூறிஞர்.

பஸ்ஸில் எல்லோரும் அமர்ந்ததும் பஸ் புறப்படுகிறது. சங்கத் தனாதிகாரி இ. இராமநாதன் ஒரே யோசனையில் ஆழ்ந்திருந்தார். குறிப்பறிந்தேன்; ஆசிரியர் திரு. வ. சி. சுப்பிரமணியம், எமது சங்கத் தலைவரின் சகோதரன், அவரின் முயற்சியால் பள்ளிக்கூட ஆசிரியர்கள், இந்து மாணவ உறுப்பினர்கள் எமக்குப் பகல் உணவை உபகாரமாகத் தந்துதவினர். அதற்கு நன்றி தெரிவித்தோம் என்று எடுத்துரைத்தேன். பஜனையில் எல்லோரும் மகிழ்ந்திருந்தார்கள். முன் ஆசனத்தில் இருந்து பஸ் கண்ணடிக்கூடாக இயற்கையைப் பார்த்தேன். கடும் வெய்யிலுமில்லை மழையுமில்லை. மேகம் ஒரே மப்பாக இருந்தது. மூன்று மணியளவில் டம்புலைக் குகைக் கோயிலை அடைந்தோம். அக்கோயிலில் உள்ள சிலைகளையும் ஓவியங்களையும்பற்றி அக்கோயில் அதிகாரி ஒருவர் விரிவுரை செய்தார். மலையில் குகை குடைந்து கோயில் அமைத்து புத்த சிலைகளை நிறுவி சுவர்களில் புத்த சமயச் சித்திரங்கள் வரைந்து புத்த சமயத்தைச் சிறப்பித்திருக்கிருர் "வலகம்பாக" மன்னன், என விரிவுரை செய்தார். கணபதி, கந்தசாமி முதலிய தெய்வங்களின் ஓவியங்களும் அச்சுவர்களில் இடம் பெற்றிருக்கின்றன. "நேரம் 4-00 மணியாகிவிட்டது. இவ்விடத்தில் இருந்து 25 மைல் தூரத்தில் உள்ள சிகிரியா மலை அடிவாரத்தை 4-30-க்கு முன் சேரவேண்டும். 5-00-க்கு மலை உச்சியை அடைந்தால் எப்படியாவது 6 மணிக்கு திருகோணமலைக் குப் புறப்படலாம்"என்று மு.வெற்றிவேல் அவர்கள் அவசரமாக எல்லோரையும் அழைத்தார்.

பஸ் சிகிரியாவை நோக்கிச் செல்கிறது, வேகமாகச் செல்லும் பஸ் வண்டியை, மாட்டு மந்தைக் கூட்டங்கள், நடுத் தெருவில் நின்று விலகாது இடையிடையே தடுக்கின்றன. பஸ் சாரதியின் சாதுரியத்தால் ஒருவாறு சிகிரியா மலை அடியை பி. ப. 5-00 மணியளவில் சேர்ந்தோம். மலையில் ஏறுவதற்காக காசியப்ப மன்னன் செங்கற்களால் படிகள் அமைத்திருந்தார். தனது சகோதரனை முகலனிடமிருந்து தப்பி வாழ்வதற்காக மலையை ஒரு கோட்டையாக அமைத்திருந்தார். காலத்திஞல் சிதைவுற்ற படிகள் நவீன முறையில் திருத்

தப்பட்டிருக்கிறது. செங்கற் படிகளையும் இரும்புப் பாலங்களையும் தாண்டி "சிகிரியா" மலையை ஏறினோம். மலைக்கற்களிலே கூடு அமைத்து வாழும் குருவிகள் வானத்தில் பறந்து சத்தமிட்டு அமைதியைக் கலைத்தன. மலையில் தக்கை தக்கையாக கூடு கட்டி வாழும் கருந்தேன் குளவிகள் மனிதர் சப்தத்தைக் கேட்டதும் பறந்து வந்து கொட்டும் என்பதற்காக யாத்திரிகர்கள் யாவரும் அமைதியாகப் படிகளிலே ஏறுகிறார்கள். இடையில் ஓர் சம தளம், அதில் இரும்பு வலையால் கட்டப்பட்ட ஒரு பெரிய கூடு. குளவிகள் கொட்டினால் அந்தக் கூட்டில்தான் மனிதர்கள் சரண்புக வேண்டும். மலை உச்சியையும் சம தளத்தையும் தொடுத்து ஓர் இரும்பு ஏணி. அதன் வழியே மேலே ஏறிச் செல்ல வேண்டும். சாய்வான மலைக் கல்மேல் இரும்புச் சலாகைகள் பூட்டப் பட்டிருந்தன. இரும்புச் சலாகைகளை இறுகப் பிடித்து ஒருவாறு மலை உச்சியை அடைந்தோம். விமலநாதனின் துணிவைக் கண்டதும் பெண்கள் குழந்தைகள் எல்லோரும் இரும்பு ஏணி வழியே ஏறி இரும்புச் சலாகைகளை இறுகப் பற்றி மலை உச்சியை அடைந்தார்கள். மலை உச்சியில் உள்ள தாமரை நீர்த்தடாகம், பற்றைகளால் மூடப்பட்ட சிதைவுற்று அழிந்த கோட்டை அனைத்தையும் கண்டு களித்து மலை உச்சியில் இருந்து இறங்க ஆரம்பித்தோம். கால்களும் கைகளும் நடுங்கியது. செங்குத்தான மலையில் இருந்து நிலத்தை நோக்கிப் பார்க்கும்போது தலை சுற்றியது. உயிர்மேல் ஆசை வைத்த யாவரும் நடுங்குவது இயல்புதானே. எல்லோரும் கால் கைகள் நடுங்க இரும்புச் சலாகையை இறுகப் பிடித்து அவதானமாக இறங்குகிறார்கள். தற்செயலாகக் குழந்தைகள் சறுக்கி விழுந்தால் என்ன நேருமோ என்று பயந்தேன். அந்நேரம் சைவ இளவல் திருநாவுக்கரசு அருகில் வந்து மணி! "நாம் மற்றவர்களின் உயிர்மேல் வைத்திருக்கும் ஆசையிலும் பார்க்க, அவரவர் தத்தம் உயிரில் ஆசை வைத்திருக்கிறார்கள். அவர்கள் எப்படியாவது கீழே இறங்குவார்கள். பயம் கூடாது. வீரர்களாக இறங்குவோம், எவ்வளவு செங்குத்தான மலையானாலும் ஏறுவதற்கும் இறங்குவதற்கும் இரும்புப் பலகைகளும் ஏணியும் படிகளும் உதவுவதுபோல், வாழ்க்கையான பள்ளத்தில் இருந்து இறைவன் திருவடிகளை அடைய சமயமாகிய படிகளை நமது முன்னோர்கள் அமைத்திருக்கிறார்கள். இந்த இரும்புச் சலாகையும் படிகளும் போல, பஞ்சாட்சர மந்திரம் அமைந்துள்ளது. இந்த இரும்புச் சலாகைகளை இறுகிப் பிடித்து நமது சொய முயற்சியால் எம்மைக் காப்பாற்றுவது போல, இறைவன் திருவடியை குறுகிப் பணிந்து பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரித்து எம்மை இந்த மாயா உலகத்தில் இருந்து காப்பாற்ற வேண்டும். 'கை தப்பினால் கறனம்' என்பது போல இறைவன் திருவவடியை மறந்தால் அதோகதிதான். இந்த மலையில் வாழும் குளவிகளைப் போலவே எமது உள்ளத்தில் ஆசையென்னும் கொடிய கரும் குளவி ஆனந்தமாக வாழ்கிறது. மனித சப்தம் கேட்டதும் குளவிகள் பறந்து வந்து மனிதரைத் தாக்குவதுபோல் சலப புத்தியுடன் இருக்கும் மனிதரை சந்தர்ப்பம் பார்த்து ஆசை தாக்குகிறது. கரும் குளவிகளில் இருந்து தப்ப இருப்பு வலையால் செய்த பெரிய கூடுபோல, ஆசையென்னும் நோயிலிருந்து தப்புவதற்கு ஆலயங்கள் உதவுகின்றன. எனவே ஆலயம், பஞ்சாட்சர மந்திரம், சமய அனுஸ்டானங்கள், எவ்வளவு அவசியம் என்பதை இந்த சிகிரியா மலையேற்றம் காட்டுகிறது." மணி! "இது உண்மையில் யாருக்கும் அதிர்ச்சி தரும் பிரயானமாக இருந்தாலும் ஒவ்வொருவர் மனதை விட்டு அகலாத அனுபவமாகவும் அமைந்துள்ளது," என்றார். ஏதோ இறைவன் திருவருளால் அன்று அந்த மலைமீது மழை பெய்யவில்லை. மழை பெய்திருந்தால் படிகள் உண்மையில் சறுக்கியிருக்கும். கவனமாக ஒவ்வொருவரும் இறங்கி சமதளத்தை அடைந்தார்கள். எல்லோரும் முருகன் திருவருளைப் பற்றியே பேசினார்கள். "தற்செயலாக ஒருவர் சறுக்கி விழுந்திருந்தால் நம்கெதி என்ன" வென்று

ந. பெ. சதாசிவம் அவர்கள் சொல்லி முடிக்கமுன்னரே திருமதி கந்தையா அவர்கள் "கடவுளை நம்பினோர் கைவிடப் படார்" என்னும் பழமொழியை ஞாபகப்படுத்தினார். ஒரு சிறிய இரும்புப் படி வழியே ஏறி குழந்தைகளும் பெண்களும் சிகிரியா ஓவியச்சித்திரங்களைக் கண்டு களித்தனர். மலைச்சாரலில் உள்ள அழிந்த கோட்டைகளையும் பார்வையிட்டு பஸ்ஸில் எல்லோரும் ஏறி அமர்ந்தார்கள். பஸ்ஸில் உள்ள மின்சார விளக்குகள் பிரகாசமாக எரிந்தன. பிஸ்கெற்றுகள், குளிர் பானங்கள் பரிமாறப்பட்டது. பஸ் சாரதியும் பஸ்ஸை வேகமாகச் செலுத்தினார். வெளியில் ஒரே இருட்டு. தம்பலகாமம் கோணேஸ்வரர் கோயிலை அடையுமட்டும் முருக பஜனை உச்ச நிலையில் நடந்தது. நேரம் இரவு 8-30. எல்லோரும் இறங்கி தம்பலகாமம் கோணேஸ்வர ஆலயத்தை சுற்றி வலம் வந்தோம். கோயில் குருக்கள் எம்மைக் கண்டதும் மிக அன்பாக வரவேற்று சுவாமிக்குக் கற்பூர ஆராதனை செய்தார். எம் கண்கள் குளிர்ந்தன. சுமார் 10.00 மணி அளவில் திருகோணமலை இந்துக் கல்லூரியை அடைந்தோம். பாடசாலை அதிபர் திரு. கே. சிவபாலன் அவர்கள் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நாம் தங்குவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்திருந்தார். பெண்களும் குழந்தைகளும் தங்குவதற்கு மேல் மாடியில் ஓர் பெரிய அறையும், ஆண்கள் தங்குவதற்கு கல்லூரி மண்டபத்தையும், உணவு அருந்துவதற்கு ஓர் விசேட அறையும் மற்றும் சகல வசதிகளையும் செய்திருந்ததால், நாம் எம் வீட்டில் சகல வசதிகளுடன் இருப்பதுபோல மகிழ்ச்சியாக இருந்தது.

கொழும்பில் இருக்கும்போது எமது சங்கத்துடன் இணை பிரியாது நின்று ஆதரவு தந்த திரு. க. தேவகாந்தன், திரு. எஸ். நவரத்தினம் ஆகியோர் திருமலையில் இப்பொழுது கடமை புரிவதால், அவர்கள் எம் வருகையை முன்கூட்டி அறிந்து இரவு உணவை ஏற்பாடு செய்து பரிமாறினார்கள். எல்லோரும் அமைதியாக உறங்கினார்கள்.

8—5—67 காலை 4-00 மணி. எல்லோரும் நித்திரைவிட்டு எழுந்து கிண்ணியா வெந்நீர் ஊற்றுக் கிணற்றை அடைந்தோம். ஏழு கிணறுகள். ஒவ்வொன்றும் வெவ்வேறு வெப்ப நிலை. பெண்கள் எல்லோரும் நீராடியபின் ஆண்களும் குழந்தைகளும் நீராடினோம். இராவணன் வணங்கிய பிள்ளையார் கோயில் இன்றும் புனிதமாக இருக்கிறது. திருநீறு அணிந்து அக்கோயிலை வலம் வந்தோம். "முழுநீறு பூசிய முனிவன்", "இராவணன் மேலது நீறு" என்ற தேவார அடிகள் நினைவுக்கு வந்தன. திருநீற்றின் மகிமைதான் என்னே! கைலை மலையை அசைத்த இராவணன் தோள் வலிமையும், அவன் அம்மலையில் நசுங்கிப் பாடிய சாமகீதமும் சிவபெருமானின் மாறுத பெருங்கருணையும், கோயிலை வலம் வரும் பொழுது எமது மனத்திரையில் தோன்றி மறைந்தன.

6-00 மணியளவில் கிண்ணியாவில் இருந்து பாடசாலை வந்தடைந்தோம். கோணேஸ்வர ஆலய பரிபாலன சபைத் தலைவர் டாக்டர் கே. சித்திரவேலு அவர்களை "வெருகலம்பதியில்" சந்தித்தோம். அவர் திருக்கோணேஸ்வரப் பெருமானுக்கு அபிஷேக ஏற்பாடுகள் முற்கூட்டியே எமது கடிதம் கண்டதும் ஏற்பாடு செய்திருப்பதாகவும், பூசை 10.00மணிக்கு ஆரம்பமாகும் என்றும் அறிவித்தார்.

நாம் முன் எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று எம்மைக் கவர்ந்தது. திருமலை இராஜகோபால் "தியாகி" என்று பாராட்டப் படுபவர் எம்மை இராமகிருஷ்ண மிஷன் துறவியான சுவாமி நடராஜானந்தஜீ அவர்களின் அஸ்தி கரைப்பு வைபவத்தில்கலந்து கொள்ளுமாறு வேண்டினார். நாம் மனமுவந்து வைபவத்தில் கலந்தோம். தொண்டர்களுடன் சிவபுராணம் பாடிய வண்ணம் திருகோணமலை இந்துக் கல்லூரியிலிருந்து கடற்கரையை அடைந்தோம். அங்குள்ள ஒரு பெரியவர் "நாம் எல்லோரும் இரண்டு மாத காலமாக இவ்வஸ்தி கரைப்பு வைபவம் செய்வதற்கு காலநிலை சீரடையவில்லை என்று கவலை கொண்டோம். அது இன்றுதான்

கைகூடியது. நீங்களோ இரண்டே இரண்டு நாட்களில் இப்புண்ணிய வைபவத்தில் பங்கு பற்ற கொடுத்துவைத்தீர்கள். கடவுளின் திருவருளும் நல்ல மோட்டார் வள்ளங்களும் இருப்பதால் குழந்தைகளும் பெண்களுடனும், செல்லும் பிரயாணத்தின் போது ஒரு கஷ்டமும் வராது, நீங்கள் பயப்படாது வள்ளங்களில் ஏறுங்கள்,'' என்ருர். சுமார் 25, 30 வள்ளங்கள் எல்லாம் கடலருகில் கூட்டமாக நின்றன. அவற்றில் ஒன்று மலரால் அலங்கரிக்கப்பட்டது. எல்லோரும் சிறிய படகுகள் மூலம் வள்ளங்களில் ஏறுகிருர்கள் எல்லோரும் சேர்ந்து சிவநாமம் ஓதியதால் வானெங்கும் கடலெங்கும் மலை எதிரொலியெங்கும் ஒரே சிவநாம மயம். ஒழுங்காக வள்ளங்கள் இரண்டு மைல் தூரம் கடலில் சென்று மலையின் அடிவாரத்தை அடைந்தன. பழங்கால மலைகள் கடலில் ஆழ்ந்து அலைகளின் உச்சி மட்டும் நீரின் மேல் தெரிகிறது. அவை ஓர் இயற்கை கோயில் போல் காட்சி தந்தன. நிமிர்ந்து பார்க்கும்பொழுது செங்குத்தான கோணேசர் மலை, அக்கோயிலில் பக்தர்கள் வலம் வருகிறது தெரிகிறது. ஆனல் அவர்களின் உருவம் மிகவும் சிறியதாகத் தெரிவதிலிருந்து மலையின் உயரத்தை ஒருவாறு கணிக்க முடிகிறது. யாரும் மலையில் இருந்து தவறி விழுந்தால் நேரே இந்தக் கடலில்தான் விழுவர். இக்காட்சிகளைக் காணும்போது எமது நாடி நரம்புகளெல்லாம் இறுகின. அஸ்தி கரைக்கப்பட்டது. வள்ளங்களும் கரையை அடைந்தன. நாமும் கடலில் தீர்த்தமாடினேம் தீர்த்தமாடும்பொழுது திருஞானசம்பந்தர் சுவாமிகள் திருக்கோணேஸ்வர ஆலயத்தைப் பற்றியும், திருகோணமலை கடற்கரையையும் பட்டினத்தையும் பற்றி பாடிய தேவார அடிகள் நினைவுக்கு வந்தன. ''சப்தம் செய்கின்ற கடலின் அலைகள், சந்தனக் கட்டைகளையும் கரிய அகில் கட்டைகளையும், பெருமை வாய்ந்த பொன்மணிகளையும், சிற்பிகளையும் சுமந்து வந்து கரையில் கொளிக்கின்றன,'' ''குடிகளைப் பெருக்கி நெருக்கமாய் தோன்று கோணமாமலை,'' ''கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை'' ''குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ் கோணமாமலை,'' ''குன்றுமென் கானல் வாசம் வந்துலவும் கோணமாமலை'' என்னும் தேவார அடிகளின் கருத்துகளை அம்மண்ணில் கால் வைத்ததும் உணர முடிந்தது.

காலை 9-30 மணியளவில் கடற்கரையில் இருந்து கோணேஸ்வர கோயிலை நோக்கி கால் நடையாக பஜனை செய்து சென்ருேம். கோட்டை வாசலில் அரச மர நிழலில் வீற்றிருக்கும் பிள்ளையாரைத் தரிசித்தோம். கோட்டை வாசலில் பொறிக்கப்பட்டிருந்த பாண்டிய காலத்து ''மீன இலச்சினையை'' பார்வையிட்டோம். கோட்டை வாசலில் இருந்து கோயில்வரை தெரு இருக்கிறது. இடையிடையே இராணுவ முகாம்கள், அரசாங்க உத்தியோகத்தர் வசிக்கும் வீடுகள். எவ்வளவு நவீன நாகரீகம் புகுந்தும் பழைமையான மலைப் பிரதேச சூழ்நிலைகள் மாறுபடாதிருப்பது பெரும் வியப்பாகவிருக்கிறது. மலையேறும் தெருவில் இரு மருங்கிலும் மரம் செடி கொடிகளாலும் பச்சைப் பசேலென்ற புல் தரைகளாலும் நிறைந்த பூங்கா! அங்கு மான் கூட்டங்கள் சுதந்திரமாகத் துள்ளி விளையாடுகின்றன. குரங்கினங்கள் ஆனந்தமாக அங்குமிங்கும் மரக் கிளைகளிலும் நிலப்பரப்பிலும் தாவி ஓடி யாத்திரிகர்களின் கைகளை நோக்குகின்றன. மலைச் சாரலில் உள்ள முல்லை மலர்கள் வெள்ளை வெளேரென்று எம்மை வரவேற்று நிற்க, காற்றில் மிதந்து வரும் முல்லை மலர் வாசம் மூக்கைப் பிடுங்குகிறது. பறவை இனங்கள் கீதம் இசைத்து கோணேஸ்வரப் பெருமானை மகிழ்விக்கின்றன. பாவநாச தீர்த்தக் கிணற்றையும்பார்வையிட்டு,திருக் கோணேஸ்வரக் கோயில் வாசலை அடைந்தோம். சிவபெருமான் திருவிளையாடல்களை நினைவுபடுத்த பல சிற்பங்கள் கோயில் கட்டிடத்தில் இடம்பெற்றிருக்கின்றன. பிள்ளையார், சுப்பிரமணியர், உமை, திருமால், பிரமா, நவக்கிரகங்கள் முதலிய தெய்வங்களுக்கு வெவ்வேறு ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளது. காலனைக் காலால் உதைத்ததும், மாறுபட்ட மனமுடைய மன்மதனை சாம்பலாக்கிய திருவிளையாடல்

களை வெளிப்படுத்த அமைந்த சிற்பங்களும், அடியார்கள் சிவபெருமான் திருவடியை வணங்கும் திருக்கோலமும் காணும்போது கல்நெஞ்சும் பக்தியில் உருகும்.

நாதசுர ஓசையுடன் "உருத்திர கும்பஸ்தபன அபிசேகம்" ஆரம்பமாகியது. எல்லோரும் கோயிலை அடைந்து அமைதியாக இருந்தோம். அபிசேக செலவை திருமதி அன்னம்மா இராஜலிங்கம், திருவாளர்கள்: மு. வெற்றிவேல், சி. கந்தையா, பி.சாமி, செ. சுப்பையா முதலியோர் கொடுப்பதற்கு முன்வந்து எம்மை ஆதரித்தனர். சங்கத் தலைவர் இ. இராமநாதன் அவர்கள், திரு. தி. பாலசுந்தரம் அவர்கள் அபிசேக செலவுக்காக நன்கொடை அளித்ததையும் எனக்கு ஞாபகப்படுத்தினர்,

அபிசேகம் வேத ஆகம முறைப்படி நடைபெறுகிறது. கோயிற் குருக்களும் சிவபெருமான சாயலையே ஒத்திருந்தார். மந்திரங்கள், கிரிகை முறைகள் அனைத்தும் இருந்தவர்களை மிகவும் கவர்ந்தது. இவைகளைக் கண்ட கண்கள் இரண்டும் குளிர்ந்தன. மனம் அமைதி பெற்றது. இந்த உலகில் நாம் இருப்பது போல் தெரியவில்லை. இக்கோயிலில் ஒரு அடியார் திருஞானசம்பந்தர் சாயலையே ஒத்திருந்தார். இளம் வயதிலேயே சிவபெருமான்மீது கொண்ட காதலால் உலகத்தைத் துறந்து தேவார, திருவாசகங்கள் பாடிய வண்ணம் அதிக காலம் இக்கோயிலில் வாழ்கிறார். நல்ல சாரீரம். திருஞானசம்பந்தர் திருக்கோணேஸ்வரப் பெருமான்மீது பாடிய 11 தேவாரங்களையும் பண்ணோடு பாடினார். நாமும் அவருடன் கலந்து பாடி பக்தி பரவசமானோம். டாக்டர் சித்திரவேல், திரு. சி. சிவானந்தன், பண்டிதர் திரு. கிருஷ்ணபிள்ளை ஆகியோர் அபிசேகத்தில் கலந்து எம்மை ஆதரித்தனர்.

அபிசேகம் முடிந்ததும் மலையைச் சுற்றிப் பார்த்தோம். இராவணன் வெட்டு எம்மைக் கவர்ந்தது. செங்குத்தான மலை உச்சியில் இருந்து பார்க்கும்போது ஆகாய விமானத்திற் பறப்பது போல் ஒரு உணர்ச்சி. கீழே பார்க்கும்பொது ஆழமான கடல். தப்பி விழாமல் இருப்பதற்கு இரும்புச் சலாகைகள் பூட்டியிருக்கிறார்கள். மேலே வானம், கீழே கடல், ஒரே பரந்த பெரிய வெளி. இதில் ஒரு தத்துவம் தெரிகிறதல்லவா மணி! என்று அருகில் வந்தார் சைவ இளவல் சி. திருநாவுக்கரசு. "இந்தியாவில் பஞ்ச பூதங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் ஷேத்திரங்கள் அமைத்திருக்கிறார்கள். ஆனால் திருக்கோணேஸ்வர ஆலயமோ பூதங்கள் ஐந்திற்கும் ஒரே ஷேத்திரமாக அமைந்திருக்கிறது. மண், நீர், தீ, காற்று, வானம் ஆகிய ஐந்து பூதங்களையும் நேரில் காண முடிகிறதே. இம்மலையில் இருந்து தவறி விழுந்தால் நேரே கடலில் மாய்வதுபோல, இறைவன் நினைவை மறந்தால் பிறவிப் பெருங்கடலில் விழவேண்டும். என்நேரம் காலன் வருவான்? என்ற பயம் இருப்பதுபோல், தவறி வீழுந்து விடுவோமோ என்ற மரண பயம் இந்த மலையில் கால் வைத்ததுமே எமக்கு வருகிறது. காலனைக் காலால் உதைத்து, இராவணன் ஆணவம் அடக்கிய சிவபெருமானை வணங்க எல்லோர் உள்ளமும் துடிக்கிறதே. எந்த நாத்தியம் பேசுபவர்களும் ஒருதரம் இக்கோயிலைத் தரிசித்தால் கடவுள் ஒருவர் இருக்கிறார், அவரை வணங்கி நாம் பிறவித் துன்பத்தில் இருந்து விடுபட வேண்டும் என்ற முடிவுக்கு வருவர். உண்மையில் சிவபெருமான் திருவருள் சுரக்கும் தலம் இது" என்று வியந்தார்.

சுமார் பி. ப. 1-15 மணியளவில் திருமலை இந்துக் கல்லூரியை அடைந்தோம். பகல் உணவு அருந்தி எம் ஆதரவாளர்களுக்கு நன்றி கூறி திருமலைக் கடற்படைத் தளத்தை பார்வையிடச் சென்றோம். டாக்டர் சித்திரவேலு அவர்கள் நாம் இத்தளத்தைப் பார்வையிட விசேட அனுமதிச் சீட்டு எடுக்க உதவி செய்தார். எம்மோடு கடற்படை அதிகாரி திரு ச. மகேசன் அனுப்பப்பட்டார். அங்கு கடற்படைக் கப்பல்கள் இயற்கைத் துறைமுகத்தை அழகுபடுத்தின. இயற்கைத் துறைமுகத்தின் வனப்பைக் கண்டு களித்து, வழியில் திருமலைத் துறைமுக, இறங்கு துறைமுகத்

தையும் பார்வையிட்டோம். கடல் அலைகளினால் கட்டுக்கடங்காது கரைகாணத் தவித்துக்கொண்டிருந்த படகுகளையும் தோணிகளையும் வள்ளங்களையும் கப்பல்களையும் கண்டோம்.

மாலை 2-30 மணியளவில் திருமலையை விட்டு மிகுந்தலையை நோக்கி பஸ் வேகமாக ஓடுகிறது. எல்லோரும் உற்சாகமாக பஜனை செய்கிறார்கள். மிகுந்தலையில் உள்ள புத்த விகாரையைத் தரிசித்து அனுராதபுர நகரத்தை 5-30 மணியளவில் அடைந்தோம். அனுராதபுரத்தில் சிதைவுற்ற ஆயிரங்கால் மண்டபத்தையும், றுவான்வலிசாய, பழைய, புதிய நகரம், புதிய கதிரேசன் கோயில் முதலிய இடங்களைத் தரிசித்து இரவு 9-15 மணிக்கு புத்தளம் முத்துமாரியம்மன் கோயிலை அடைந்தோம். அங்கு ஆலய பிரதம குருக்கள் அவர்களும், புத்தளம் சைவ முன்னேற்றச் சங்கத்தினரும் எம்மை வரவேற்றனர் குருக்கள், முத்துமாரி அம்மனுக்கு விசேட பூசை செய்தார். நாம் அப்பூசையில் கலந்து இராப்போசனம் உண்டோம். புத்தளம் சைவ முன்னேற்றச் சங்கச் செயலாளர் திரு எஸ். சிவசுதசர்மா எம்மை அன்பால் ஆதரித்து உணவளித்து வரவேற்றது மிகவும் பாராட்டத்தக்கது. அவரிடம் இருந்து விடை பெற்று முனீஸ்வரம் கோயிலை 10-30 மணிக்கு வந்தடைந்தோம். கோயிலை வலம் வந்து ஆனந்தமாகக் கொழும்பு நோக்கிப் புறப்பட்டோம். பஸ்ஸில் எல்லோருக்கும் ஒரே ஆனந்தம். இரண்டு நாள் தொடர்ந்து பிரயாணம் செய்த களைப்பு யாருக்குமில்லை. குழந்தைகள் கூட தூங்காது விளையாடி சந்தோஷம் கொள்கிறார்கள். "ஒருவர்க்காவது ஒரு சிறிய நோய் நொடியோ வரவில்லை. ஒரு தடங்கலும் இல்லாமல் பிரயாணம் சீராக நடந்திருக்கிறதே! நேரத்துக்கு நேரம் உணவு, ஓய்வு, தொடர்ந்து இரண்டு நாளும் இறைவன் பஜனை, மணி! நானும் எத்தனையோ தடவை கதிர்காம யாத்திரை ஒழுங்கு செய்திருக்கிறேன். இப்படி வாய்க்கவில்லை," என்று விசுவலிங்கம் அவர்கள் தன்பாட்டிலேயே பேசத் தொடங்கினார். பஸ் சாரதி, பஸ் ஓட்டியவண்ணமே "துரை! நானும் எத்தனையோ தடவை உல்லாசப் பிரயாணிகளுக்கும் யாத்திரிகர்களுக்கும் பஸ் ஓட்டி இருக்கிறேன். இப்படியானந்தமான ஓர் யாத்திரையை என் வாழ்வில் காணவில்லை" என்று சிங்களத்தில் வியந்தார்.

பஸ்ஸும் 11-00 மணியளவில் கொம்பனி வீதி சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலை அடைந்தது. பிள்ளைகளின் பெற்றோர் குழந்தைகளை அரவணைத்தார்கள். "கொழும்பில் பெரிய மழை, காற்று, களனியாவில் வெள்ளப் பெருக்கும் கூட. பிள்ளைகளை அனுப்பிய பெற்றோர்கள் இரண்டு நாளும் பயந்துகொண்டே இருந்து முருகனை வேண்டிக்கொண்டிருந்தார்கள்" என்று கோயில் கணக்காளர் சிவம் மிகவும் உருக்கமாகச் சொன்னார், நாம் போன இடமெல்லாம் வெய்யிலைத் தடுத்து மழை முகில் கூட்டங்கள் நின்றனவே அன்றி மழையோ காற்றோ, வெய்யிலோ எம்மைத் தாக்காது ஆனந்தமாகப் பிரயாணம் செய்தோம் என்றேன். "எல்லாம் முருகன் திருவருளப்பா! யாரோ எங்களுக்கு முன்னுக்குப் போய் எல்லாம் ஒழுங்கு செய்த மாதிரியல்லவா எல்லாம் நடந்திருக்கு. முருகனை நேரில் காண முடியாவிட்டாலும் அவன் திருவருளையாவது நாம் நேரில் உணர முடிந்தது" என்று சங்கத்தலைவர் ஆனந்தப்பட்டார். ஆம், முருகன் "திருவருளால் திக்குலா" நன்றாக அமைந்தது என்றேன், எல்லோரும் விடைபெற்று தத்தம் வீடுகளுக்குச் சென்றனர். செயலாளன் என்ற முறையில் அனைவருக்கும் நன்றி கூறி நானும் இல்லம் ஏகினேன்.

உ

# கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்க

# "நால்வர் சமயப் பாடசாலை"

## ஆசிரியர் குழு

தலைமை ஆசிரியர் :- திரு. வ. சி. செல்லையா


துணை ஆசிரியர்கள்:- திரு. வ. செல்வரத்தினம்
திரு. வே. பெ. சாமி
திரு. வ. இ. இராமநாதன்
திரு. பொ. பாலகிருஷ்ணன்
திரு. சி. பரமசாமி
திரு. சி. விமலநாதன்
திரு. க. பாலசுப்பிரமணியம்
திரு. கோ. கார்த்திகேசு
திரு. சொ. தட்சிணுமூர்த்தி

பாடசாலை நிர்வாகச் செயலாளர்:-
திரு. சு. லிங்கேஸ்வரன்

## நால்வர் நூலகம்

சமய குரவர்களின் போதனைகளை, சாதனையில் கடைப்பிடித்து ஒழுகிவரும் எமது சங்கத்தினர், தம் நூலகத்திற்கு "நால்வர் நூலகம்" எனப் பெயரிட்டமை சிறப்புடமைக்கழகன்றே. 25-5-66 நடைபெற்ற சேக்கிழார் விழாவின்போது, அளவையூர் சஞ்சீவி—அருட்கவி சி. விநாசித்தம்பி அவர்களால் ஆரம்பித்துவைக்கப் பட்ட இந்நூலகத்தில் 250-க்கு மேற்பட்ட சமய-இலக்கிய நூல்கள் உள்ளன. இட வசதி இல்லா சூழ்நிலை காரணமாக, இப்போது எமது பாடசாலை மாணவர்களுக்கு மாத்திரம் இந்நூலகம் பயன்பட்டு வருகின்றது. கூடிய விரைவில் பொதுமக்கள் பலரும் பயன் பெறத்தக்க பொது நூலகமொன்றை கொம்பனித்தெருவில் ஆரம் பித்துவைக்க எண்ணியுள்ளோம்.

பொ. பாலகிருஷ்ணன்
(கௌரவ நூலகப் பொறுப்பாளர்)



கொம்பனித் தெரு, சைவ முன்னேற்றச் சங்க அன்பர்களும், ''நால்வர் சமயப் பாடசாலை'' ஆசிரியர்களும், மாணவர்களும்.



# முருகன் என் இறைவன்

கங்கைவார் சடையா னெற்றிக் கண்ணினிற் பிறந்து யாணர்ப்
பொங்குநீர்க் கங்கை யாற்றிற் புந்குதுடன் வளர்ந்து வான
நங்கைமார் மூலைப்பா லுண்டு நவின்றிடு சரவ ணத்தின்
செங்கையாற் றவழ்ந்து லாவும் செம்மல்தன் திருத்தாள் போற்றி!

கருணைகூர் முகங்க ளாறும் கரங்கள்பன் னிரண்டும் கொண்டே
அருள்புரி யண்ணல் என்றென் றமரர்கள் போற்ற நின்று
புரிபவம் அறுக்குஞ் செங்கைப் புனிதன்பூங் கொடியாள் காந்தன்
முருகன் என்றுலகம் போற்றும் முருகனென் னிறைவன் றானே.

திங்கனி விரும்பித் தந்தை செப்பிய மொழிமேற் கொண்டே
யாங்கிருந் தகன்று மஞ்ஞை யமர்ந்துல கதனைச் சுற்றிப்
பாங்கினில் வருதன் முன்னை பற்றினன் முன்னோன் என்னுத்
தேம்பிய பழனி யாண்டி திருவடி புனைவோம் யாமே.

கூர்நுனி வேலை யேந்திக் குன்றினை யெறிந்து வாரிச்
சூர்முதல் தடிந்து தேவர் தொழுதிடத் தேவ யானை
வார்முலை யணைந்து குன்றில் வளர்தினைப் புனத்து நின்ற
பூண் இளர் வள்ளியாகம் பொருந்திய முதல்வா போற்றி!

அடியவர்க் கெளியாய் போற்றி! அன்பருக் கன்பா போற்றி!
கடிபவம் அறுப்பாய் போற்றி! கண்ணுதற் கொழுந்தே போற்றி!
இடருறும் அடியார்க் கின்பம் ஈந்தருள் ஏந்தால் போற்றி!
துடியிடை வள்ளி யேத்தும் துணைவனே! போற்றி போற்றி!

செல்வி. சிவசாந்தி சிவலிங்கம்.

# ''அறிவுடையார் எல்லாம் உடையார்''

வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து, தம் வாழ்விற் கண்ட உயரிய கருத்துக்களை வையத்தார்க்கு வாரி வழங்கி, வான் புகழ் ஈட்டிச் சென்ற இன்னிசைப் புலவர் பலர், அன்னவருள் தலைசிறந்தவர் வள்ளுவர். அவர் நுண்ணிய அறிவு படைத்தவர். திட்பமும் நுட்பமும் வாய்ந்த தமது சிந்தனைகளைக் குறள்வடிவிற் கூறியுள்ளார். அதன்மூலம் தமிழ்மொழிக்கே அற்புதமான குரலைக் கொடுத்தார். தமிழ்மொழி தெளிவும் ஒளியும் பெற்றது. அறிவுடையார் எல்லாம் உடையார் என்பது வள்ளுவர் எடுத்தாண்ட பொன்னுரைகளுள் ஒன்று. மக்கள் சீரிய உயர்ந்த உள்ளமும் விழுமிய ஒழுக்கமும் உள்ளவர்களாய் வாழவேண்டுமென்பது வள்ளுவரது பேரவா. அத்தகைய சீரிய வாழ்வு வாழ உறுதுணையாயிருப்பது அறிவு. ஒருவரது உயர்வுக்கும் தாழ்வுக்கும், திறமைக்கும், பெருமைக்கும் காரணமாயிருப்பது அறிவு.

எல்லோரிடத்தும் இயல்பாகவே அறிவு உண்டு. இயற்கை அறிவைப் பெருக்க உதவியாயிருப்பது கல்வி. கல்வி அழியாத செல்வம், கல்வியே கண், கல்வியே அழகு, கல்வியே இன்பம். எல்லா நலன்களுக்கும் கல்வியே காரணமாகும். அத்தகைய கல்வியை ஒவ்வொருவரும் எப்பாடுபட்டேனும் கற்றல் வேண்டும். இதை உணர்த்தவே,

''உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே''

என்றும்,

''கற்கை நன்றே கற்கை நன்றே;
பிச்சை புகினும் கற்கை நன்றே''

என்று கூறிப் போந்தனர் நம் மூதாதையர். கல்வி நம்மை நாடி வராது. அறிவைப் பெருக்க விரும்புபவன் அது கிடைக்குமிடமெல்லாம் சென்று கற்கவேண்டும்.

அறிவைப் பெற இரு வழிகளுள: ஒன்று நூல்கள் வாயிலாகப் பெறுவது; மற்றொன்று அனுபவ வாயிலாகப் பெறுவது. நூல்கள் வாயிலாகப் பெறப்படும் அறிவு கற்றல், கேட்டல் சிந்தித்தல் ஆகிய முறைகளால் விசாலமடைகிறது, 'கல்வி கரையில; கற்பவை நாட்சில' ஆதலால் வாழ்க்கையை வளம்படுத்தக் கூடிய அறிவு நூல்களைத் தெரிந்து கற்றல் வேண்டும். 'கற்றனைத் தூறுமறிவு' என்றதற்கிணங்க கற்கக் கற்க கருத்துக்கள் பதியும். புதிய கருத்துகள் தோன்றும். பல நூல்களிலிருந்து சிறிது சிறிதாகப் பெறப்படும் அறிவு நிரம்பிய அறிவாகிறது. கற்றலின் ஒரு பகுதியாகவே கேள்வி அமைந்திருக்கின்றது. வானொலிப் பேச்சுக்கள், பெரியார்களின் சொற்பொழிவுகள் முதலியன கேள்வி அறிவை விருத்தி செய்வன. கற்றல், கேட்டலுடன் மாத்திரம் நின்றால் அறிவு வளராது. கற்றும், கேட்டும் அறிந்தவற்றை நன்கு சிந்திக்க வேண்டும். சிந்தனையின் விளைவே சிறந்த அறிவாகும்:

''கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக''

என்றபடி நூல்கள் வாயிலாகப் பெற்ற அறிவை வாழ்க்கையிற் பயன் படுத்த வேண்டும். அல்லாவிடில் பெற்ற அறிவினாற் பயனொன்றுமில்லை. பெருமைக்கும், சிறுமைக்கும் உரைகல்லாயிருப்பது அவரவர் செய்யும் செயல்களே. அறிவுடையார் செய்தற்கரிய காரியங்களைச் செய்து அழியாப் புகழை நாட்டுவர். தாம் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெறவேண்டும் என்னும் நன்னோக்கங்கொண்டு தமக்கும் பிறர்க்கும் பயனுள்ளவராக வாழ வேண்டும். அதிகம் கற்றுவிட்டோம் என்ற செருக்கை அறிவுடையாரிடத்திற் காண்பதரிது. ''யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என்ற பரந்த மனப்பான்மையே அறிவுடையாரிடத்தில் அமைந்திருக்கும். அறிவுடையார் இம்மைப் பயன்களெல்லாவற்றையும் அடைதலுடன் இறைவனைத்தினமும் வணங்கியும் வருதலால் மறுமைப் பேரின்பத்தையும் அடைவர்.

மனிதன் விலங்குகளிலும் மேலானவனாகக் கருதப்படுவது அவன் பெற்ற அறிவு ஒன்றாலேயாகும். அவ்வறிவைக் கொடுக்க வல்ல கல்வியைக் கற்காமல் இருப்பது பெருங்குற்றமாகும்.

இதுவரை கூறியதிலிருந்து அறிவுடையாரது உயர்ந்த பண்பு, செயல் ஆகியவற்றை அறிந்தோம்; அன்னாரது சிறப்புக்களைக் கண்டு உலகமே அவர்களை விரும்பி வரவேற்கிறது! பண்டைத் தமிழரசர்கள் அறிவிற் சிறந்த புலவர்களின் அன்பையும், நன்மதிப்பையும் பெற வேண்டி அரும்பாடுபட்டனர். அப்புலவர்களின் உறவு தமக்குக் கிடைப்பதே பெரும்பேறு எனக்கருதினர். அறிவுடையோர் நீண்ட காலம் வாழ்ந்து சமுதாயத்திற்கு நலன்கள் பல செய்ய வேண்டுமென்பதை உலகம் விரும்புகிறது. அதிகமான், ஔவையாருக்கு நெடுங்காலம் வாழ்ந்து, தமிழைப் பேணவேண்டுமென்று தனக்குக் கிடைத்த நீண்ட ஆயுளைக் கொடுக்கக்கூடிய நெல்லிக்கனியை அவருக்குக் கொடுத்து மகிழ்ந்தான். அறிவுடையோரது சிறப்பு நோக்கியே,

''கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாஞ் சிறப்பு
அறிவுடையோனாறு அரசுஞ் செல்லும்''

என்னும் அருமைத் திருவாக்குகள் எழுந்தன போலும்! அறிவினாலுயர்ந்து உன்னத குறிக்கோள்களைக் கொண்டு உயரிய வாழ்வு வாழ்ந்த உத்தமர் எத்தனை பேர். அவர்களது பூதவுடம்புகள் அழிந்துவிட்டன, எனினும் புகழுடம்புகள் இன்னும் அழியாதிருக்கின்றனவே!

வள்ளுவர் அறிவுடையாரது உயர்ந்த பண்புகளையும், அவர்தம் சீரிய வாழ்வினையும் கண்டார், அறிவற்றார் இழிவுகளையும் பார்த்தார். அறிவுடைமைக்கும், அறியாமைக்கும் உள்ள இயல்புகளை அவரால் தெளிவாக வரையறுக்க முடிந்தது. தான் உணர்ந்த உண்மையைச் சீர்ப்படுத்திச் சுருங்கிய சொல்லில் கூற விழைந்தார். எனவே, ''அறிவுடையார் எல்லாம் உடையார்'' என அறிவுடைமையின் இயல்பை வரையறுத்துக் கூறியுள்ளார்.

செல்வன். பாலேந்திரன் கண்ணலிங்கம்.

★

SCOOTER SPARES!
MOTOR SPARES!!

Available at all times

ROY MOTOR STORES
No. 36, Church Street,
COLOMBO-2.

# அறநெறி

நூற் பயன்களில் முதலிடம் பெற்று நிற்பது அறம். தரும தேவதையின் தவப் பேறுக்கிடைக்கப் பெற்ற அரிய செல்வம் அறமாகும். எனவே நாம் தேடி சேர்த்து வைக்கும் எந்தச் செல்வமும், தர்மத்துக்கு ஈடாகாது. அறநெறி தவறாது வாழ்க்கை நடத்தினுல் நாம் அதனுல் பல பெரு பேறுகளை அடையலாம். தருமமே செல்வத்திற்கும் மேலான செல்வமாகும். தருமத்தை ஒருவன் மறந்து விட்டால் அதனுல் அவனுக்கு உண்டாகும் தீமையைப்போல் வேறு எந்தத் துர்ரதிஷ்டமும் இல்லை.

''அறத்தினூ உங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு''.

அறத்தினை நாம் மறந்து விடுவதனுல் அநீதியெல்லாம் செய்கிறேம். கொஞ்சம் நினைப்பில் வைத்தோமானுல் அநீதிக்குள் செல்ல மாட்டோம் என்று முனிவர் எண்ணுகின்றூர்.

அறவாழ்கை என்பது நான்கு குற்றங்களை விலக்குவதாகும். பொறாமை அவா, கோபம், கடுஞ்சொல் முதலியனவே அக்குற்றங்களாகும். பிறர் சுகமாக இருப்பதைக் கண்டால் தமக்குள்ளும் மகிழ்ச்சி உண்டாகவேண்டும். உடல் வழி உண்டாகும் சரீரசுகங்களை எண்ணி ஆசைப்படலாகாது. யாரேனும் தீமை செய்தால் கோபித்துக் கொள்ளலாகாது. மனம் நோகும் சொற்கள் பேசலாகாது.

''அழுக்காறு அவாவெகுளி இன்னுச் சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.''

தருமம் ஒன்றே நமக்குத் துணையாக நிற்கும் மற்றதெல்லாம் ஏமாற்றத்தில் முடியும். எமக்கு துணையாக நிற்கும் என்று எதை எதையெல்லாம் நம்புகின்றேமோ அவையெல்லாம் ஒன்றுமில்லாமல் மறைந்து போகும். தருமம் ஒன்றே அழியாமல் துணை நிற்பதை அந்திக் காலத்தில் காண்போம்.

''அன்றறிவாம் என்னுது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றுத்துணை.''

''இப்போது முடியவில்லை பின்புபார்த்துக்கொள்ளலாம் என்று பின்போட வேண்டாம். இன்றே இப்பொழுதே தருமமார்க்கத்தில் நடக்க முயலவேண்டும்'' என்கிறூர் திருவள்ளுவர்.

தருமமார்க்கத்தில் நின்று அதனுல் அடையும் மகிழ்ச்சியே உண்மையான இன்பமாகும். மற்ற வகையான மகிழ்ச்சி துன்பமே யாகும் என்பதை,

''அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல''

என்னும் ஈரடியின் வாயிலாக நாம் அறிந்து கொள்ளலாம். எந்த இன்பத்தைத் தேடினும் அதை அறவழியில் அடைய முயற்சி செய்யவேண்டும்.

செல்வி. சுலோச்சனு சுப்பிரமணியம்.

# கடவுள்

"அவனின்றி ஓர் அணுவும் அசையாது" எனும் பழமொழிக்கிணங்கப் புத்துலகைப் புதுப்பிக்க ஆசை கொள்ளும் புதுமைச்சிற்பிகளே விழிப்படையுங்கள்! அமைதிகாணுங்கள்!! கடவுளை சிந்தியுங்கள்!!! கடவுள் ஒருவரே, ஆனால் அவர் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல் மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களையுஞ் செய்யும்பொழுது முறையே பிரமா, விஷ்ணு உருத்திரன் மகேசுரன், சதாசிவம் ஆகிய பெயரையும் அவர் ஆன்மாக்களுக்கு பிறவித்துன்பத்தைக் கொடுக்கும் ஆணவமாகிய மலத்தை அழிக்க தன்னுடைய திருவருளை அருளி பிறவி நோயைத் தீர்க்கும் போது "வைத்தியநாதன்" என்னும் பெயரையும் பெறுகிறார். ஒருவர் பல பெயர்களை பெற்றிருப்பதால் அவர் பலராகி விடுவாரா? உதாரணமாகத் தண்ணீரை எடுத்துப் பார்த்தால் தமிழில் அதனை 'நீர்' என்றும் ஆங்கிலத்தில் 'வாட்டர்' என்றும் மலையாளத்தில் 'வெள்ளம்' என்றும் தெலுங்கில் 'நீளு' என்றும் சொல்லுகின்றோம். அதனால் 'நீர்' வேறு 'வாட்டர்' வேறு, "வெள்ளம்" வேறு 'நீளு' வேறு என்று சொல்லுதல் முடியுமா? இல்லை! ஆனால் தண்ணீர் காலநிலைக்கேற்ப பனிக்கட்டியாகவும் ஆவியாகவும் மாறுகிறது. இத்தண்ணீரைப் போலவே கடவுளும் மக்களின் தன்மைக்கேற்ப பல தோற்றங்களாகக் காட்சி கொடுக்கிறார். மேலும் இக்கடவுளுக்கு பல மொழிகளும் பல சமயங்களும் பற்பல பெயர்களை வழங்கினாலும் கடவுள் ஒருவரேயன்றிப் பலரல்லர்.

ஆனால் ஒரு சிலர் கடவுள் இல்லை என்றும் அவருடைய வடிவம் எத்தன்மையதென்றும் வினவலாம். இதை உணர்த்துவதற்கு உதாரணமாகப் பாலை எடுத்துப் பார்ப்போம். பாலை எடுத்து அதில் வெண்ணெய் இல்லை என்று யாராலும் கூறமுடியுமா? இல்லை பாலைக்காய்ச்சி உறை போட்டுத் தயிராக்கி மத்துக் கொண்டு கடைந்தால் வெண்ணை உண்டாகும். என்பது உங்களுக்குச் சொல்லாமலே விளங்கும். அது போலவே கடவுளைக் காணும் ஆசை உடையவர் தனது ஐம்புலன்களையும் ஒடுக்கித் தனது மனத்தை மத்தாக நட்டு, தான்படித்த கல்வியின் அறிவை அம்மத்தின் நாணாகக் கொண்டு, இயற்கையை நம் வாழ்வில் கடைந்தால் கடவுளாகிய வெண்ணெய் கிடைக்கும் என்பது வெள்ளிடை மலை. இதனால் தான் திருவள்ளுவ நாயனாரும் "கற்றதனால் ஆய பயனென் கொல் வாலறிவன் நற்றாள் தொழா அரெனின்" என்றார். கற்றதன் பயன் கடவுளை வணங்குதல். அப்படி வணங்காவிட்டால் கற்றதில் பயன் இல்லை. ஆகவே இந்த உலகிலே வாழும் செந்தமிழ் செல்வர்களே! செல்விகளே!! பெரியோர்களே!!!

"தெய்வம் பல பல சொல்லிப் பகைத் தீயை வளர்ப்பவர் மூடர்; உய்வதனைத் திசம் ஒன்றாய் ஓர் பொருளானது தெய்வம் யாரும் வணங்கிடும் தெய்வம்.

பொருள் யாவினும் நின்றிடும் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வம் என்று
இதில் பற்பல சண்டைகள் வேண்டாம்.

செல்வன். இரா. மனோரஞ்சன்.

★

# தட்சிணாமூர்த்தியின் சின் முத்திரை

சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய நான்கு இளங்குமாரர்களும் கற்கவேண்டிய அறுபத்துநான்கு கலைகளையும் கசடறக் கற்றும், தமது மனதிலே தோன்றிய மயக்கத்தை நீக்க வழியின்றி, உலகக் கர்த்தாவான எம்பெருமானை நாடியபோது நடராஜன் நால்வருக்கும் தட்சிணாமூர்த்தியாக காட்சியளித்து, சின் முத்திரையுடன் கல்லால் விருட்சத்தின் கீழ் தெற்கு நோக்கி இருந்து மௌன உபதேசம் செய்தார்.

அடி, முடி காணமுடியாத சோதிப் பிழம்பின், தட்சிணாமூர்த்தி வடிவத்தில், சின் முத்திரையிலே, ஐந்து விரல்களிலும் பெருவிரலிலிருந்து முறையே முதலாவது இறைவனாகவும், அடுத்து உயிராகவும், மற்றைய மூன்றும் ஆணவம், கன்மம், மாயை எனப்படும் மும்மலங்களாகவும் அமைத்து, மும் மலங்களிலிருந்தும் ஆன்மாவை விடுதிப் பெறச் செய்து, ஆன்மாவாகிய ஆள்காட்டிவிரலை, இறைவனாகிய பெருவிரலுடன் ஒன்றாக சேர்க்க வேண்டும். என்று பக்தர்க்கு, மௌன உபதேசத்தின் நிலையிலே, தட்சிணாமூர்த்தி வடிவத்திலே சின் முத்திரை மூலமாக உணர்த்துகின்றார். இதுவே பல யோகிகளும் யோகத்தின் போது ஆள்காட்டி விரலை பெருவிரலுடன் ஒன்றாக சேர்ப்பதன் காரணமாகும். சின் முத்திரை மூலமாக எம் பெருமான் அடியவர்க்குச் சைவ சமயத்தின் அடிப்படைக் கோட்பாடாகிய பதி, பசு, பாசத்தை தெளிவுபட உணர்த்துகின்றார்.

மும் மலமும் முக்கியமாக ஆணவ மலமானது ஆன்மாவை தன்னகத்தே எப்போதும் இழுத்து வைத்திருக்கும். அது இறைவனை அடைவதற்கு முக்கிய தடையாக இருக்கும். கன்மமும், மாயையும் ஆன்மாவை விட்டு நீங்கினாலும், ஆணவம் அகலுவது கஷ்டமான காரியமாகும் இதையே திருவருட்பயனிலே

''திரிமலத்தார் றொன்றதனிற் சென்றார்க ளன்றி
ஒரு மலத்தா ராயு முளர்''

என்று உமாபதிச் சிவாச்சாரியர் சொல்லியுள்ளார். இந்த ஆணவம் ஆனது இருளை விடக் கொடியது. ஏனெனில் இருள் தன்னைக் காட்டும்' பிற பொருள்களைக் காட்டாது. ஆனால் ஆணவமானது தன்னையும் காட்டாது. அதாவது, ஆன்மாவுக்கு தன்னைப் பற்றிய நிலையை உணர்த்திக் கொள்ளாமல், நல்ல அறிவையும் நல்ல வழியில் போவதையும் தடுக்கும். அதனால்தான் உமாபதிச் சிவாச்சாரியார் பின்வருமாறு கூறினார்.

''ஒரு பொருளுங் காட்டாது திருளுருவங் காட்டும்
மிரு பொருளுங் காட்டா திது''

அநாதி தொடங்கியே ஆன்மாவுடன் நெருப்பில் சூடு போல, ஆணவம் ஒன்றியிருப்பதால், அதை விட்டுப்பிரிந்து உண்மை நிலையை, பேரானந்தத்தை, எம்பெருமான் மலர்ப்பாதத்தை அடையும் பொருட்டு, எல்லாம் வல்ல எம்பெருமானின், தட்சிணாமூர்த்தியின் சின் முத்திரை எமக்கு ஓர் நல்ல உபதேசமாகும், ஆகவே எமது பக்குவப்படாத ஜீவனை பக்குவப் படுத்தி, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து எமது பெறுதற்கரிய மானிட ஜென்மத்தை பயன் படுத்தி ''பெருமைக்கும், நுண்மைக்கும், பேரருட்கும் பேற்றினருமைக்கும் ஒப்பின்மையில்லா'' எம் பெருமானின் திருத்தாள் பணிவுடன பணிவோமாக.

செல்வன். சதாசிவம் ஆனந்ததியாகர்.

# ஆன்மா பாசத்தை நீக்கும் வழிகள்

மாயையின் சேட்டையால் உலக இன்பத்தைப் பெரிதாக எண்ணி, ஆணவத்தின் சேட்டையால் நான் எனது என்ற பற்றுக்களை வளர்த்து, கர்மத்தின் சேட்டையால் ஆன்மா நல்வினை தீவினைகளைப் புரிவதாற்றான் பாசம் ஆன்மாவைக் கட்டி இருக்கிறது. எனவே ஆன்மாவுக்குப் பாசக்கட்டு ஒழிய வேண்டுமானால் இம் மூன்று சேட்டைகளையும் ஒழிக்கவேண்டும்.

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கு அந்தகரணங்களும் ஒய்வெடுத்துக் கொண்டு சும்மாயிருக்க முடியாது. ஆகையால் இவைகளுக்கு வேறு வேலை கொடுக்க வேண்டும். அதுதான் கடவுள் பற்றிய வேலை.

மனம் குரங்குபோல ஏதாவது ஒரு கிளையைப் பிடித்துக் கொண்டே இருக்கும். இதைப்பற்றுக்கோடு என்பார்கள். இதை விட்டால் மனதுக்கு வேறொரு பற்றுக்கோடு தேவை. அது தான் கடவுள் என்ற பற்றுக்கோடு. இவ்வாறே மற்ற மூன்று அந்தக் கரணங்களின் தொழிலுமிருக்கும். ஆகையால் உலகத்துக்குப் பதிலாகக் கடவுளைவைத்து ஆன்மா தனது வேலைகளையெல்லாம் செய்வதுதான் பாசக் கட்டை ஒழிப்பதற்கு உபாயமாகிறது. இந்த உபாயம் நான்கு படிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. இவை ஒவ்வொன்றிலும் சரியை, கிரியை யோகம், ஞானம் என்ற நான்கு உட்பிரிவுகள் உள்ளன. இந்தச் சாதனமுறையிற் செல்வதற்கு தீட்சை பெறல் வேண்டும். அது ஞானக்கண் அல்லது சமயக் கண்ணைத் திறக்க வைத்தலாகும். ஆகையால் சமயப்பிரவேசஞ் செய்வது அவசிமாகிறது.

சரியைத் தொண்டு என்பது கடவுளை ஒரு எஜமானாக ஒரு உருவத்தில் கொண்டு, எஜமானுக்கு ஒரு வேலைக்காரன் எந்தெந்த உபசாரங்களை எல்லாம் செய்யக் கூடுமோ, அவைகளையெல்லாம் அவ்வுருவத்திற்குச் செய்தல், அலகிடுதல், மெழுகல், பூக்கொய்தல், பூத்தொடுத்தல் இவை போன்ற மற்றக் காரியங்களை யெல்லாம் செய்தல்.

தனக்கென ஒன்றுஞ்செய்யாமல் கடவுளுக்கென்றே செய்ய நிகழ்வதால் ஆணவ மலம் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்துவரும் இத் தொண்டைத்தாசமார்க்கமென்றுங் கூறுவர். கிரியைத் தொண்டாவது உருவத்திலே கடவுளை எழுந்தருளச் செய்து அபிஷேகம் போன்ற பதினாறு உபசாரங்களைச் செய்து, தீயைவளர்த்து, அதையுங் கடவுள் உருவாக எண்ணி உயிர்வதை இல்லாத வேள்வியைச் செய்தல் இங்கே நான் என்ற பற்றும் எனது என்ற பற்றும் மிகுதியாக நீங்கும். இம் மாதிரியான வேலை கடவுளைத் தகப்பனாகப் பாவித்துப் பிள்ளை செய்யும் உபசாரத்துக்கு ஒப்பிடப்படும். இது சற்புத்திர மார்க்கம் என்று கூறுவர்.

யோகம் என்பது, உடம்பின் கூறுகளை நன்றாய் அறிந்து பிராணவாயுவைத் தன் வசப்படுத்தித் தொழிற்படுத்தி உடம்பினுள் இருக்கும் ஒளிவடிவான கடவுளைக்கண்டு வழிபட்டு இன்பமடைதல். இதைக் கடவுளும்தானும் சிநேகிதர்கள் போல அளவளாவுந் தன்மைக்கு ஒப்பிடுவர். இந்தவழிக்குச் சகமார்க்கம் என்று பெயர்.

ஞானமார்க்கம் என்பது ஞானசாஸ்திரங்கள் எல்லாவற்றையும் கசடறக் கற்று, அவைகளின் முடிவுகளைத் தனது வாழ்க்கையில் பதித்து ஒழுகுதல். இவ்வழியைப்புருஷன் மனைவி இருவருங்களங்கமின்றிப் பரிசுத்தமாக நடத்தும் வாழ்க்கைக்கு ஒப்பிட்டு இதற்குச் சன்மார்க்கமென்று பெரியோர் கூறுவர்.

இந் நான்கு சாதனமுறைகளால் ஆன்மாவுக்குக்கிடைக்கும் இலாபங்கள் மூன்று. இவை இருவினையொப்பு, மலபரி பாகம் சத்திநிபாதம் என்பனவே. இருவினையொப்பு என்பது இன்பத்தையும், துன்பத்தையும் விருப்பு வெறுப்பின்றிக் காணல். மலபரிபாகம் என்பது ஆணவமலத்தினது சக்தி குறைந்தொழில் சக்திநிபாதம் என்பது கடவுளுடைய திருவருளானது. ஆன்மாவில் வந்து பதிதல், இவ்வாறு திருவருள் கைகூடினால், ஆன்மாவானது எடுத்த அப்பிறவி உள்ள வரையிலே பிராரத்துவ கன்மத்தை அநுபவித்துவிட்டுப் பின்பு சிவசாயுச்சிய பதவி யென்ற பரமுத்தியைப் பெறும்.

— செல்வி. பாலரஞ்சனி தம்பித்துரை.

# "இறை வழிபாடு"

இறைவனுடைய பெறுதற்கரிய திருவருளைப் பெற நமது சமயத்திலே தோன்றிய பெரியார்கள் எத்தனையோ வழிகளைக் காட்டிச் சென்றுள்ளனர். சிலர் காட்டியவழி கடைப்பிடிப்பதற்கு எளிது. சிலர் காட்டிய வழி வாழ்க்கையில் கடைப்பிடிப்பதற்குச் சிறிது கஷ்டம். இவ்வாறு பற்பலராலும் காட்டப்பட்ட வழிகளில் இறைவனை மனத்தாலும், வாக்காலும், காயத்தாலும், வழிபடும் நிலை கடைப்பிடித்தற்கு மிக மிகச் சுலபமானது.

நாம் பெற்றுள்ள இந்த பெறுதற்கரிய மானிடப் பிறவியை பயனுள்ளதாக்கிக் கொள்ள வேண்டும். இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ யாமறியோம். எனவே காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள நாம்முயற்சிக்க வேண்டும். இப்பிறவியில் இறைவனையடைய எம்மாலான முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும். அவனருளையடைய அவன் உதவிவேண்டும். அவன் நமக்கு உதவி செய்ய, நாம அவனைப் பணிய வேண்டும். அவனருளால் அவன் தாள் வணங்கலாமே யொழிய அவனருளின்றி நம்மால் ஒன்றும் ஆகாது.

மாணிக்கவாசகர் தமது சிவபுராணத்திலே "இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" என்கிறார். இதுதான் நமக்கும் அவருக்கும் இடையேயுள்ள வித்தியாசம். அவர் இமைப் பொழுதும் இறைவனை மறவாது மனத்தினால் நினைத்தார். அவர் புகழ் பாடினார். நாம் இமைப் பொழுதும் இறைவனை மனத்தினால் நினைக்கின்றோமில்லை. நமக்கு இறைவனை மனத்தால் நினைப்பதற்கு ஒரு தூண்டு கோல் வேண்டும். அதாவது ஏதாயினும் ஒரு பொருளை கண்ணால் பார்க்கும் போது அந்தப்பொருட்களிலே இறைவனைக் காண நாம் முயற்சிக்க வேண்டும். இதைத்தான் ஒருவர்,

"காக்கைச் சிறகினிலே நந்தலாலா
உன் கரிய நிறம் தோன்றுதையாநந்தலாலா"

என்ற பாட்டிலே மிக்க அழகாகப் பாடுகிறார். நாம் சாதாரணமாகப் பார்க்கும் காக்கையிலே, மரத்திலே, தீயிலே, அவர் கண்ணனுடைய உருவத்தைக் காண்பதாகப் பாடுகிறார். இவ்வாறு நாம் பார்க்கும் எப்பொருளிலும் இறைவனைக் காண்பதாகப்பாவித்து அவனை எம் மனத்தால் தொழவேண்டும். நாம் இறைவனை "கண் இமைக்கு நேரமேனும்" முறைப்படி தியானம் பண்ணத் தெரியாது. இதை அருணகிரிநாதர்,

"சரணகமலாலயத்தை அரைநிமிஷ
நேரமட்டில் தவமுறை
தியானம் வைக்க அறியாத"

என்று பாடுகிறார்.

நாம் இறைவனை தியானிப்பதும் மனத்தின் ஒரு தொழிலே. தியானம் சுலபமாக யாராலும் செய்யமுடியாது. ஆனால் இறைவனை எந்த நேரமும் பார்க்கும் பொருட்கள் மூலம் நினைவு கூருதல் சுலபம். ஆனால் இறைவனை மனத்தாலே வழிபடுதற்கு, நாம் காணும் பொருளிலே இறைவனைக் காணும் முறையைக் கைக்கொள்வது மிகச் சுலபம்.

இறைவனை வாக்கினால் வழிபடுவது அடுத்தது. இது முன்னையதிலும் மிக மிகச் சுலபம். இறைவனுடைய நாமத்தை நாம் சொல்லுவோமானால் அதனால் வரும் பலன் அளப்பரியது. "இறைவனுடைய நாமத்தை அறிந்தோ அறியாமலோ சொல்லும் ஒருவன் அதற்கானமுழுப் பலனை அடைவான்" என்கிறார் நாரதர்.

எவ்வாறு நெருப்பை நாம் அது நெருப்பு என அறிந்தோ அறியாமலோ தொடின் அது அதன் பண்பைக் காட்டுகிறதோ, அதைப்போன்று இறைவன் நாமத்தை அறிந்தோ அறியாமலோ சொல்லும் ஒருவன், அதற்கான பயனையடைகிறான். நாம் எந்தக் காரியத்தை செய்ய முன்னும், செய்யும் போதும் நமது இஷ்ட தெய்வத்தின் நாமத்தை பஜித்துக் கொண்டு செய்வோமானால் காரியமும் சிறப்பாக முடியும். அதே சமயத்தில் நாமத்தை பஜித்ததன் பலனும் கிடைக்கும். நாம் செய்வது எத் தொழிலாய் இருப்பினும் அதைச் செய்யும் போதும், வீட்டில சும்மாய் இருக்கும் போதும், பூஜைவேளையின் போதும், அவன் நாமத்தை பஜிக்க வேண்டும்.

அடுத்தது காயம். அதாவது உடம்பு. இந்த உடம்பிலே ஐம்பொறிகள் இருக்கின்றன. இந்த ஐம்பொறிகளையும் கட்டி வைக்காதவன் வீட்டுப்பேற்றையடைய முடியாது. எம்மால் இந்த ஐந்து பொறிகளையும் கட்டிவைக்கமுடியாது. ஆனல் இந்த ஐந்து பொறிகளையும் இறைவனுடன் சம்பந்தப்படுத்த நாம் முயற்சிப் போமானல் அது மிகச் சுலபமாய்த்தோன்றும். இவ ஐம் பொறிகளாகிய மெய், வாய், கண், மூக்கு, செவியாகியவற்றை இறைவனை வழிபட உபயோகிக்க வேண்டும். வாயினல் அவன் புகழையும், கண்ணினல் அவன் திரு உருவத்தையும், மூக்கினல் இறைவனுடைய சந்நிதானத்தில் சமர்ப்பிக்கப்படும் ஊதுவத்தி, சாம்பிராணி ஆகியவற்றின் மணத்தையும், செவியினல் அவன் புகழ்பாடும் பாட்டுகள் பிரசங்கங்கள் முதலானவற்றையும், மெய்யினல் இறைவனுக்குத் திருத் தொண்டுகள் செய்வதையும் நாம் மேற்கொண்டால், இந்த ஐந்து புலன்களும் தத்தம் வழியிலே செல்லாது. அவை ஒரு நல்லநெறியிலே, இறைவனையடைய முயற்சிக்கும் நெறியிலே செலுத்தப்படுவதன் மூலம் நாம் நல்ல பலனையடைகிறோம். உடம்பினல் இறைவனுக்குத் தொண்டு செய்யாது விட்டாலும் கைகளைக் கொண்டு அவனைக் கும்பிட்டும் காலால் அவன் கோயில் வலம் வந்தும் வழிபடலாம்.

மேற் கூறப்பட்டகருத்தை திருநாவுக்கரசு நாயனர்.

தலையே நீ வணங்காய்.............................

என்று தொடங்கும் தேவாரத்திலே மிக்க அழகாகப்பாடுகிறர்.

இவ்வாறு மனம், வாக்கு, காயம் எனும் மூன்றினலும் இறைவனை வழிபட்டு முக்தியடைய முயற்சிப்போமாக.

செல்வன். ச. மு. விவேகானந்தன்.

★

# முருகன் பெருமை

நாம் பிறவி என்னும் பெருங்கடலை நீந்திக் கடந்தேற இறைவழி ஓர் ஒப்பற்ற துணையாக உள்ளது. நனவிலே நாள்தோறும் கண்ட பொருட்களை கனவிலே மாறிக் காண்கின்ற வலியற்ற ஆன்மாக்களின் மனபரிபக்குவ நிலைக்கேற்ப, அவர்களுக்கு அருள் புரிய இறைவன் பலவாறு திரு அவதாரம் செய்தருளுகின்றர். இத்தகைய அவதாரங்களில் முருக அவதாரம் ஒன்றாகும்.

முருகனைக், கந்தன், கலியுகவரதன், குமரன், சரவணன் ஆகிய பல பெயர்களில் அடியார்கள் அழைப்பார்கள். ஒவ்வொரு பெயரிற்கும் ஒவ்வொரு காரணங்களை அடியார் கூறுவர். கந்தன் என்ற பெயர் பகைவருடைய பராக்கிரமத்தை வற்றச் செய்கிறவன் என்ற பொருள் தரும். குமரன் என்ற பெயர் பூமியின் மன்மதன் போன்ற பேரழகு பொருந்தியவன் என்ற பொருள் தரும். இப்படியாக பல காரணங்களைக் கூறுவர்.

சூரபத்மன் என்னும் அசுரன், தனக்கு வரம் தந்து வாழ்வு தந்த சிவபெருமானை மதியாது தேவர்களைத் துன்புறுத்தினன். ஆகவே தேவர்களின் வேண்டுகோளுக் கிணங்கச் சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய ஆறு அருட் சுடர்கள் கங்கையின் அருகிலுள்ள சரவணப் பொய்கையில் உள்ள தாமரை இலையில் விழுந்தன ஆறு குழந்தைகளாக மாறின. ஆறு கார்த்திகைப் பெண்கள் எடுத்து இக் குழந்தைகளை வளர்த்தனர். சரவணப் பொய்கைக்கு குழந்தைகளைக் காணும் ஆவலுடன் வந்த உமாதேவியார் ஆறு குழந்தைகளையும் அணைக்க, ஆறு திருமேனியும் பொருந்தி ஒரு திருமேனியாக, ஆறு முகங்களுடன், பன்னிரண்டு புயங்களுடன், பதினெட்டு திருக்கண்களாகவும் தோன்றினர். உமாதேவியார் முருகப் பெருமானுக்கு ஞானத்தீம்பாலைத் தந்தார்.

சிவபெருமான் முருகனை நோக்கி "உலகங்களை அழித்து பல உயிர்களுக்குத் துன்பம் செய்யும் அழியாத வலிமை கொண்டுள்ள சூரபத்மனையும், அசுரர்களையும் வதைத்து, வேத நெறியை நிறுவி, இந்திரனுக்கு அரசை அளித்து அமரரது அல்லலை அகற்றுவாயாக" என்று பணித்தார். செந்தில் மேவிய குமரன் அரச தருமத்தின்படி தேவர்களை விடுதலை செய்யும்படி தூதுவராக வீரவாகு தேவரை அனுப்பினர்.

வீரபாகு தேவர் தான் செல்லும் வழியில் தடைசெய்த அசுரர்களை அழித்து சூரபத்மனின் நாட்டை அடைந்தான். வீரவாகுதேவர், அசுரர்கள் தங்கியுள்ள சிறைச்சாலைக்கு சென்று ஆறுதல் கூறி விட்டுச் மிகச் சிறப்புடன் அரசுபுரியும் சூரபத்மனுடைய சபைக்கு சென்றார். அங்கு முருகனின் பெருமையை எடுத்துக்கூறி தேவர்களை விடுதலை செய்யும்படி கூறினர். ஆனால் அகங்காரம் பிடித்த சூரபத்மன் கேட்கவில்லை. ஆகவே அவர் முருகனிடம் திரும்பிச் சென்றார்.

ஆகவே முருகவேள் போருக்கு புறப்பட்டுச் சென்று இலங்கையில் தென்பால் எமகூடம் என்று அழைக்கப்படும் கதிர்காம மலையில் பாசறை புரிவித்து தங்கினர். பத்துநாட்கள் போர் நடந்தது. முருகன் சூரபத்மன் மீது சிறிது இரக்கம் கொண்டு விசுவரூப தரிசனம் காட்டிச் சிறிது நல்லுணர்வை நல்கினர். சூரன் தனது செருக்கை நினைத்து கழிவிரக்கம் கொண்டானுயினும் திரும்பவும் போர் செய்து முடிவில், வேல் அவனுடைய வச்சிர யாக்கையை பிளந்து சேவலும், மயிலுமாக மாறி, கொடியாகவும் வாகனமாகவும் பெறும் பேறு பெற்றன்.

ஓம் என்ற சொல்லின் கருத்து யாது என்று விளங்காது இருந்த பரமனுக்கு ஓம் என்ற எழுத்தில் அகரம், உகரம், மகரம், நாதம், விந்து, கலை ஆகியன உள்ளன என்று ஓதினர். இதனல் தான் அருணகிரிநாதர்.

"ஏறுமயிலேறி விளையாடு முகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசு முகமொன்றே"

என்று பாடியுள்ளார்.

முருகன் இளமை, ஒளி, அருள், குறைவில்லாது நிரம்பப் பெற்றவர். அவரை முருகா! என்று ஒரு தரம் அழைத்தால் முன் இருகாலும் தோன்ற வந்தருள புரிவார். ஆகவே அடியார்களாகிய நாங்கள் முருகனின் பெருமையை பாடித் துதித்து வணங்குவோமாக.

ப. சகுந்தலா பரஞ்சோதிநாதன்.

# தாளம் சப்ததானம்

அரிது, அரிது, மானிடராதல் அரிது, என்கிறார் ஔவைப் பிராட்டியார். பெறுதற்கரிய பிறவியைப் பெற்ற நாம் சமய குரவர்களாக நால்வரைப் பெற்றுள்ளோம். அவர்களில் மாணவர்களாகிய நமக்கு ஞானசம்பந்தக் குழந்தை வாய்த்தது சாலச் சிறந்தது. தந்தையாரோடு கோயிலுக்குச் சென்ற குழந்தை, கோயில் குளத்தில் மூழ்கி ஸ்நானம் செய்த தந்தையாரைக் காணது அழுதது. புலமையிற் சிறந்த சேக்கிழார் சுவாமிகள் குழந்தை எதற்காக அழுதது என்று பாடுகிருர்.

''வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்க

பூத பரம்பரை பொலிய புனித வாய் மலர்ந்து அழுத

சீத வளவயற் புகலி திருஞான சம்பந்தர்

பாத மலர் தலை கொண்டு தொண்டர் சீர் பரவுவாம்.''

''வேதத்தின் கோட்பாடுகள் சிறந்து விளங்கவும், பெருமை பொருந்திய சைவம் சிறந்து விளங்கவும், சிவனடியார்கள் பரம்பரை சிறந்து விளங்கவும், புனித வாய் மலர அழுத, குளிர்ச்சி பொருந்திய செழிப்பு நிறைந்த வயல்களை உடைய புகலி என்று கூறப்பட்ட சீர் காழியின் கண்ணே அவதரித்த திருஞான சம்பந்தர், பாதமாகிய கமலத்தை சிரசிலே சூடி தொண்டர் பெருமையை கூற முற்படுகிருர்''.

சம்பந்தர் சிவபெருமானின் அருளைப் பெற்றதை அறிந்து, சிவபாத இருதயர் மகனை தோள் மேல் சுமந்து ஆனந்தக் கூத்தாடி தம்மனைக்கு சென்றபொழுது இதையறிந்த அந்தணர்கள் சம்பந்தக் குழந்தையை,

''காழியர்தவமே! கவுணியர் தனமே! கலை ஞானக்கடலே! ஏழிசை மொழியாள் திருவருள் பெற்ற இளஞ் சிங்கேறே! மறைவளர் திருவே! வைதிக நிலையே! ஞான முகிலே! காவிரி யீன்ற முத்தே! வேத வொளியே! புண்ணிய முதலே கண்ணிரைக் கதிரே! கலைவளர் மதியே! என்றிப்படி பலவாறு துதி செய்தார்கள்''

சம்பந்தர் திருக் கோலக்கா எனும் திருத்தலத்திற்குப் போய் தக்க ராகத்தில் பதிகம் பாடித்துதித்தார். அவர் முதலாவது பாடலில்,

''மடையில் வாளைபாய மாதரார்

குடையும் பொய்கைக் கோலக்—காவுளான்

சடையும் பிறையும் சாம்பர் பூச்சும் கீழ்

உடையுங் கொண்ட உருவம் என் கொலோ.''

பொய்கையிலே வாளை மீன்கள் பாய்ந்து அங்குள்ள எருமைகளின் மடியில் மோதுகின்றன. கன்றுதான் பால்குடிக்கிறது என நினைத்து எருமை பாலை பொய்கையில் சுரக்கின்றது. நீர் வேறு பால்வேருகப் பிரித்துக் குடிக்கக்கூடிய அன்னங்கள் அதை உண்டு மகிழ்கின்றன. பெண்கள் நீராடி மகிழ்கின்ற குளத்தையுடைய திருக் கோலக்காவில் நீண்ட சடையையும், கீற்றுப்பிறையையும் உடையவரும், சாம்பலாகிய திரு நீறைப்பூசியவரும், கீழ் உடையாகிய, கோவணத்தை அணிந்த சிவபெருமானது உருவம் பார்க்க வாய்ப்பு கிடைத்ததே என்று பாடுகிருர்.

சிவத்தோடு ஞானத்தை குழைத்து கொடுத்த சிவசம்பந்தத்தை உடையபடியால் திருஞானசம்பந்தர் எனப்பெயர் பெற்றுர். திருக் கோலக்கா திருப்பதிகத்தில் முதல் பதிகத்தை பாடியவுடன் இறைவன் திருவருளால் பொற்றாளம் கிடைத்தது. இறைவன் ஆன்மாக்களில் எவ்வளவு அன்பாக இருக்கிருர் என்பதை இதிலிருந்து அறியலாம். சம்பந்தக் குழந்தை தனது மென்மையான பூக் கரங்களால் தாளம் போட்டுத் திருப்பதிகம் பாடினுர். இதைக் கண்ட இறைவன் குழந்தையின் பூக்கரம் வருந்துவதைக் கண்டு ஒரு பொற்றாளத்தை நமசிவாய என்ற எழுத்தைப் பதித்து அருளினுர். இறைவி ஓசையை அருளினுர். தாளம் என்ற சொல்லுக்கு அருளல் என்று பொருள். ஆகவே இறைவன் தாளத்தை அருள, அதாவது தானம் செய்ய இறைவி ஓசையை தானம் செய்தார். ஆகவே நாமும் இறைவனை வணங்கி இறைவனின் அருளைப் பெறுவோமாக.

செல்வன். திருக்காமணி, செல்லத்துரை.

உ

# கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்க

# "நால்வர் பாடசாலை"

## 1967-ம் ஆண்டு

## திருமுறை - நாவன்மை - கட்டுரைப் போட்டி முடிவுகள்

### திருமுறைப் போட்டி

| | | | |
|---|---|---|---|
| 1-ம் வகுப்பு | முதலாம் பரிசு: | செல்வன். | க. பாலசுப்பிரமணியம் |
| | இரண்டாம் பரிசு: | செல்வி. | ந. பாலசிவனேஸ்வரி |
| | மூன்றும் பரிசு: | செல்வி. | சோ. வசந்தராணி |
| 2-ம் வகுப்பு | முதலாம் பரிசு: | செல்வி. | சி. பராசக்தி |
| | இரண்டாம் பரிசு: | செல்வன். | இ. இரத்தினராசா |
| | மூன்றும் பரிசு: | செல்வி. | சா. நந்தகுமாரி |
| 3-ம் வகுப்பு | முதலாம் பரிசு: | செல்வன். | ந. விஜயகுமார் |
| | இரண்டாம் பரிசு: | செல்வன். | ந. சிவபாலன் |
| | மூன்றும் பரிசு: | செல்வன். | க. சத்தியநாதன் |
| 4-ம் வகுப்பு | முதலாம் பரிசு: | செல்வன். | ஆ. இராஜராம் |
| | இரண்டாம் பரிசு: | செல்வி. | இ. பரமேஸ்வரி |
| | மூன்றும் பரிசு: | செல்வன். | சு. மகேசன் |
| 5-ம் வகுப்பு | முதலாம் பரிசு: | செல்வி. | இரா. முத்துலட்சுமி |
| | இரண்டாம் பரிசு: | செல்வி. | சு. மாலதி |
| | மூன்றும் பரிசு: | செல்வி. | சி. இராஜேஸ்வரி |
| 6-ம் வகுப்பு | முதலாம் பரிசு: | செல்வி. | த. தயாளரஞ்சனி |
| | இரண்டாம் பரிசு: | செல்வி. | சு. சுலோச்சனு |
| | மூன்றும் பரிசு: | செல்வி. | வே. தவமணிதேவி |
| 7-ம் வகுப்பு | முதலாம் பரிசு: | செல்வி. | சி. சிவசாந்தி |
| | இரண்டாம் பரிசு: | செல்வன். | ஆ. சிவராம் |
| | மூன்றும் பரிசு: | செல்வி. | கோ. ஞானம்பிகை |
| 8-ம் வகுப்பு | முதலாம் பரிசு: | செல்வன். | மு. கந்தவனம் |
| | இரண்டாம் பரிசு: | செல்வன். | சி. செல்வநாதன் |
| | மூன்றும் பரிசு: | செல்வன். | கா. காளிதாசன் |
| க.பொ.த. வகுப்பு | முதலாம் பரிசு: | செல்வன். | ச. ஆனந்ததியாகர் |
| | இரண்டாம் பரிசு: | செல்வன். | ச. மு. விவேகானந்தன் |
| | மூன்றும் பரிசு: | செல்வன். | தி. செல்லத்துரை |

## நாவன்மைப் போட்டி

| | | |
|---|---|---|
| பாலர் பிரிவு | முதலாம் பரிசு: | செல்வன். பா. இளங்கோவன் |
| | இரண்டாம் பரிசு: | செல்வி. சி. பாக்கியலட்சுமி |
| | மூன்றும் பரிசு: | செல்வி. கா. காளிமலர் |
| கீழ்ப் பிரிவு | முதலாம் பரிசு: | செல்வி. த. தூயமணி |
| | இரண்டாம் பரிசு: | செல்வன். ந. சிவபாலன் |
| | மூன்றும் பரிசு: | செல்வன். சு. கனகசபை |
| மத்திய பிரிவு | முதலாம் பரிசு: | செல்வி. சு. ஜெயலட்சுமி |
| | இரண்டாம் பரிசு. | செல்வி. இ. பரமேஸ்வரி |
| | மூன்றும் பரிசு: | செல்வி. த. தயாளரஞ்சனி |
| மேற் பிரிவு | முதலாம் பரிசு: | செல்வி. சி. சிவசாந்தி |
| | இரண்டாம் பரிசு: | செல்வன். இ. மனோரஞ்சன் |
| | மூன்றும் பரிசு: | செல்வன். கா. காளிதாசன் |

## கட்டுரைப் போட்டி

| | | |
|---|---|---|
| 1-ம் வகுப்பு | முதலாம் பரிசு: | செல்வி. சோ. வசந்தராணி |
| | இரண்டாம் பரிசு: | செல்வன். க. பாலசுப்பிரமணியம் |
| | மூன்றும் பரிசு: | செல்வி. பொ. கிரிசாம்பாள் |
| 2-ம் வகுப்பு | முதலாம் பரிசு: | செல்வன். க. செல்வராஜா |
| | இரண்டாம் பரிசு: | செல்வி. க. நிர்மலா |
| | மூன்றும் பரிசு: | செல்வன். இ. இரத்தினராசா |
| 3-ம் வகுப்பு | முதலாம் பரிசு: | செல்வன். க. சத்தியநாதன் |
| | இரண்டாம் பரிசு: | செல்வன். ந. சிவபாலன் |
| | மூன்றும் பரிசு: | செல்வி. த. அற்புதரஞ்சனி |
| 4-ம் வகுப்பு | முதலாம் பரிசு: | செல்வன். மு. கணேசன் |
| | இரண்டாம் பரிசு: | செல்வன். ஆ. இராஜராம் |
| | மூன்றும் பரிசு: | செல்வன். சு. மகேசன் |
| 5-ம் வகுப்பு | முதலாம் பரிசு: | செல்வி. சு. மாலதி |
| | இரண்டாம் பரிசு: | செல்வி. சி. யோகீஸ்வரி |
| | மூன்றும் பரிசு: | செல்வன். இ. செல்வம் |
| 6-ம் வகுப்பு | முதலாம் பரிசு: | செல்வி. த. தயாளரஞ்சனி |
| | இரண்டாம் பரிசு: | செல்வி. க. இராஜேஸ்வரி |
| | மூன்றும் பரிசு: | செல்வன். க. பாலேந்திரன் |
| 7-ம் வகுப்பு | முதலாம் பரிசு: | செல்வன். ஆ. சிவராம் |
| | இரண்டாம் பரிசு: | செல்வன். அ. குகனேஸ்வரன் |
| | மூன்றும் பரிசு: | செல்வி. சி. சிவசாந்தி |
| 8-ம் வகுப்பு | முதலாம் பரிசு: | செல்வன். கா. காளிதாசன் |
| | இரண்டாம் பரிசு: | செல்வன். மு. கந்தவனம் |
| | மூன்றும் பரிசு: | செல்வன். ஸ்ரீவர்ணராசா. |
| க.பொ.த. வகுப்பு | முதலாம் பரிசு: | செல்வி. த. பாலரஞ்சனி |
| | இரண்டாம் பரிசு: | செல்வன். தி. செல்லத்துரை |
| | மூன்றும் பரிசு: | செல்வன். ச. ஆனந்ததியாகர் |

# கொழும்பு விவேகானந்த சபை

## அகில இலங்கைச் சைவ சமயப் போட்டிப்

### பரீட்சை பெறுபேறுகள்

### 1966-ம் ஆண்டு

#### பாலர் பிரிவு I

| பெயர் | பெறுபேறு |
|---|---|
| செல்வன். மு. கணேசன் | சித்தி |
| செல்வன். சே சுப்பிரமணியம் | ,, |
| செல்வி. த. அற்புதரஞ்சனி | ,, |
| செல்வி. சா. கிருஷ்ணகுமாரி | ,, |
| செல்வி. த. தூயமணி | ,, |
| செல்வி. செ. ஸ்ரீரங்கநாயகி | ,, |
| செல்வி. சோ. பாக்கியவதி | ,, |
| செல்வன். ந. சிவபாலன் | ,, |

#### பாலர் பிரிவு II

| | |
|---|---|
| செல்வன். ந. நந்தகுமாரன் | விசேட சித்தி |
| செல்வி. க. அமிர்தராணி | சித்தி |
| செல்வி. சே. மல்லிகா | ,, |
| செல்வன். பெ. கணேசராசா | ,, |
| செல்வன். சி. பரமசிவம் | ,, |
| செல்வன். த. தயாளச்சந்திரன் | ,, |

#### ஆரம்ப பிரிவு I

| | |
|---|---|
| செல்வி. இ. ஜெயலட்சுமி | சித்தி |
| செல்வி. சி. யோகீஸ்வரி | ,, |
| செல்வி. இ. முத்துலட்சுமி | ,, |
| செல்வி. சி. இராஜேஸ்வரி | ,, |
| செல்வி. ச. கிருஷ்ணவேணி | ,, |
| செல்வி. கு. குலதேவி | ,, |
| செல்வி. சு. மாலதி | ,, |
| செல்வன். ச. தில்லைநாதன் | ,, |
| செல்வன். ந. சிவராசா | ,, |
| செல்வன். செ. சண்முகநாதன் | ,, |

## ஆரம்ப பிரிவு II

| பெயர் | பெறுபேறு |
|---|---|
| செல்வி. ந. தவமணி | சித்தி |
| செல்வி. சு. ஜெயலட்சுமி | ,, |
| செல்வி. வே. புஸ்பராணி | ,, |
| செல்வி. த. தயாளரஞ்சனி | ,, |
| செல்வி. சு. சுலோச்சனு | ,, |
| செல்வன். க. பாலேந்திரன் | ,, |
| செல்வன். ச. பாலகுமார் | ,, |

## கீழ்ப் பிரிவு I

| | |
|---|---|
| செல்வி. வே. வள்ளியம்மை | சித்தி |
| செல்வி. சி. சிவசாந்தி | ,, |
| செல்வி. கோ. ஞானம்பிகை | ,, |
| செல்வி. ப. சகுந்தலா | ,, |
| செல்வன். இ. தேசபந்து | ,, |
| செல்வன். ஆ. சிவராம் | ,, |
| செல்வன். ச. சாந்தகுமார் | ,, |
| செல்வன். சொ. சத்தியகீர்த்தி | ,, |

## கீழ்ப் பிரிவு II

| | |
|---|---|
| செல்வன். சி. செல்வநாதன் | சித்தி |

## மத்திய பிரிவு

| | |
|---|---|
| செல்வன். தி. செல்வத்துரை | சித்தி |
| செல்வி. த. பாலரஞ்சனி | ,, |
| செல்வி. க. இந்திராணி | ,, |

## மேற் பிரிவு I

| | |
|---|---|
| செல்வன். ச ஆனந்ததியாகர் | சித்தி |
| செல்வன். ச. விவேகானந்தன் | , |



# சம்பந்தர் இல்லம்

சின்னம் "பொற்றாளம்"

இல்லப் பொறுப்பாளர்கள்:

திரு. சி. பரமசாமி

திரு. க. பாலசுப்பிரமணியம்

தலைவர் : செல்வன். பெ. பூமிநாதன்

காரியதரிசி: செல்வன். ந. ஜெயராஜா

தனாதிகாரி : செல்வி. த. பாலரஞ்சனி

# அப்பர் இல்லம்

சின்னம் "உழவாரம்"



இல்லப் பொறுப்பாளர்கள்:

திரு. சு. லிங்கேஸ்வரன்

திரு. சொ. தட்சிணாமூர்த்தி

தலைவர் : செல்வன். ச. ஆனந்ததியாகர்

காரியதரிசி: செல்வன். ஆ. சிவராம்

தனாதிகாரி : செல்வி. சு. சுலோச்சனா

# சுந்தரர் இல்லம்



இல்லச் சின்னம் "செங்கோல்"

இல்லப் பொறுப்பாளர்கள்:

திரு. வே. பெ. சாமி

திரு. கோ. கார்த்திகேசன்

தலைவர் : செல்வன். தி. செல்லத்துரை

காரியதரிசி: செல்வன். இ. ஸ்ரீவர்ணராசா

தனாதிகாரி : செல்வி. கோ. ஞானம்பிகை

# மாணிக்கவாசகர் இல்லம்

இல்லச் சின்னம் "ஏடு"



இல்லப் பொறுப்பாளர்கள்:

திரு. சி. விமலநாதன்

திரு. பொ. பாலகிருஷ்ணன்

தலைவர் : செல்வன். ச. மு. விவேகானந்தன்

காரியதரிசி: செல்வன். இரா. சுப்பிரமணியம்

தனாதிகாரி : செல்வி. சு. ஜெயலட்சுமி

## கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்க

# "நால்வர் சமயப் பாடசாலை"

# மாணவர் மன்றம்

| | | |
|---|---|---|
| மன்றப் பொறுப்பாளர் | : | திரு. சு. லிங்கேஸ்வரன் |
| மன்றப் பெரும் பொருளாளர் | : | திரு. வே. பெ. சாமி |
| மாணவர் தலைவன் | : | செல்வன். தி. செல்லத்துரை |
| துணைத் தலைவர் | : | செல்வன். பெ. பூமிநாதன் |
| காரியதரிசி | : | செல்வன். ச. மு. விவேகானந்தன் |
| உப காரியதரிசி | : | செல்வன். இ. மனோரஞ்சன் |
| தனாதிகாரி | : | செல்வி. த. பாலரஞ்சனி |
| உப தனாதிகாரி | : | செல்வி. க. அமிர்தராணி |
| பத்திராதிபர் | : | செல்வன். ச. ஆனந்ததியாகர் |

## செயற் குழு

| | |
|---|---|
| செல்வன். இரா. சுப்பிரமணியம் | செல்வி. சிவசாந்தி |
| செல்வன். ஸ்ரீவர்ணராசா | செல்வி. ப. சகுந்தலா |
| செல்வன். பெ. நாகநாதன் | செல்வி. வே. தவமணிதேவி |

எமது பாடசாலை மாணவர் மன்றம் வழமைபோல் இவ்வாண்டும் அங்கத்தவர்களின் ஒத்துழைப்பினாலும், ஆசிரியர்களின் ஆதரவினாலும் சிறந்த முறையில் செயலாற்ற முடிந்தது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

மாதம் ஒருமுறை கூடும் இம்மன்றத்திலே மாணவ—மாணவிகளின் தனிப்பட்ட ஆற்றல்கள் வெளிப்படுவதால் ஏனைய மாணவ, மாணவிகளும் அதனால் பெரும் பயன்பெற ஏதுவாகிறது. இல்லங்கட்கிடையே விவாதம், சொற்பொழிவு, கருத்தரங்கம் முதலியனவற்றை இம்மன்றம் நடாத்துகிறது. எதிர்காலச் சிறார்களின் உள்ளத்தில் சமய உண்மைகளை உரிய முறையில் ஊட்டவேண்டுமென்பதே இம்மன்றத்தின் விருப்பாகும்.

எமது மன்றப் பொறுப்பாளருக்கும், பாடசாலை ஆசிரியர்கட்கும் மற்றும் எமது சைவ முன்னேற்றச் சங்க செயலாளருக்கும் இம்மன்றம் தன் மனம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றது.

வணக்கம்.


செல்வன். தி. செல்லத்துரை
(தலைவர்)

செல்வன். ச. மு. விவேகானந்தன்
(காரியதரிசி)

கொம்பனித்தெரு

## சைவ முன்னேற்றச் சங்க

### பஜனைக் குழுவினரும் வில்லிசைக் குழுவினரும்



உ

கொம்பனித்தெரு

# சைவ முன்னேற்றச் சங்கம்

# பதின்நான்காவது ஆண்டு அறிக்கை

## (1966—1967)

### சமர்ப்பணம்

கொழும்பு கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தின் பதின் நான்காம் ஆண்டறிக்கையையும் 1—7—66 தொடக்கம் 30—6—67 வரையுள்ள வரவு செலவுக் கணக்குகளையும் சங்க அங்கத்தவர்களுக்கு பணிவுடன் சமர்ப்பிக்கின்றோம்.

### ஆதரவு நல்குக!

கடந்த பதின்மூன்று ஆண்டு காலமாக உயிரோட்டத்துடன் வளர்ந்து வரும் எமது சங்கம் இவ்வாண்டும் பல்லாற்றாலும் சிறப்புற்று சேவையாற்றியுள்ளதென்பதை அளவிலா ஆனந்தத்துடன் அறியத்தருகின்றோம். இவ்விதம் சிறப்புற்று விளங்குவதற்கு ஆர்வமும் அயரா உழைப்பும் நல்கிய செயற்குழு உறுப்பினற்கும், இந்நகரில் வதிகின்ற சமயப்பற்றுள்ள தங்களைப் போன்ற பெருமக்களின் மனமுவந்த ஒத்துழைப்பிற்கும், நிதி உதவிக்கும் சிரம் தாழ்த்தி கரம் கூப்பி எங்கள் மனம் நிறைந்த நன்றியறிதலை முதற் கண் தெரிவித்துக்கொள்கின்றோம். வருங்காலத்தில் எமது சங்கம் மென்மேலும் சிறப்புற்று சிவநெறிக்கும், செந்தமிழுக்கும் பணியாற்ற அங்கத்தவர்களும், ஆதரவாளர்களாகிய உங்களது அயரா உழைப்பும் ஊக்கமும் எங்களுக்கு என்றென்றும் கிடைக்க வேண்டுமென்று பணிவுடன் வேண்டுகின்றோம்.

### உறுப்புரிமை

எமது சங்கத்தில் 104 மாதச் சந்தா உறுப்பினர்களும், 22 வருடச் சந்தா உறுப்பினர்களும் உள்ளனர். மேற்கொண்டும் சைவ அன்பர்களை எமது சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம்.

### கூட்டங்கள்

இவ்வாண்டு 13 செயற்குழுக் கூட்டங்களும் 4 உபகுழுக் கூட்டங்களும், 21 சிறப்புப் பொதுக் கூட்டங்களும் நடைபெற்றிருக்கின்றன. இக்கூட்டங்களில் ஆராயப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய விடயங்கள், கூறப்பட்ட கருத்துக்கள் அவ்வப்போது புதினப் பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளன.

### "நால்வர் சமயப் பாடசாலை"

எமது சங்க இலட்சியங்களில் மிக முக்கியமான சமயப் பாடசாலை கடந்த 13 ஆண்டுகளாக சிறப்புற்று நடைபெற்று வருகின்றது. இதுவரை காலமும் (போயா தினங்களில்) காலை 9 மணி தொடக்கம்

நண்பகல் 12 மணிவரை நடைபெற்று வந்த பாடசாலை 5—8—67 தொடக்கம், பெற்றோர் ஆசிரிய சங்கத்தின் வேண்டு கோட்கிணங்க காலை 8-30 மணியிலிருந்து பகல் 11-30 மணி வரை நடைபெற்று வருகின்றது. இப் பாடசாலையில் பாலர் கீழ்ப்பிரிவிலிருந்து க. பொ. த. (சாதாரண) வகுப்புவரை இருநூற்றுக்கு மேற்பட்ட மாணவ, மாணவிகள் சமயக் கல்வி பயின்று வருகின்றார்கள். அத்துடன் ''அருள் ஒளி'' நிலையத்தாரால் நடாத்தப்படும் யோகாசன வகுப்புகளிலும் எமது பாடசாலை மாணவர்கள் கலந்து வருகின்றார்கள்.

இதன் பயனாக மாணவர்கள் சிரேஷ்ட வகுப்பில் சித்தியடைவதற்குரிய முக்கிய பாடங்களில் ஒன்றான, சமய பாடத்தில் விஷேட சித்தி அடைவதோடு, ஒழுக்கசீலர்களாகவும், உயரிய பண்புள்ளவர்களாகவும், திடகாத்திரமுள்ளவர்களாகவும் திகழ்வதற்கு பயிற்றப்படுகின்றார்கள்.

எமது சங்கப்பாடசாலையில் வேதனம் எதுவுமின்றி திருவாளர்கள். வ. சி. செல்லையா, வ. செல்வரத்தினம், வே. பெ. சாமி, வ. இ. இராமநாதன், பொ. பாலகிருஷ்ணன், சி. பரமசாமி, சி. விமலநாதன், க. பாலசுப்பிரமணியம், சு. லிங்கேஸ்வரன், கோ. கார்த்திகேசன், சொ. தட்சிணாமூர்த்தி ஆகிய அன்பர்கள் ஆசிரியப்பணி புரிகின்றார்கள். இப்பாடசாலையின் பிரதம மேற்பார்வையாளராக, திரு. வ. சி. செல்லையா அவர்களும், பாடசாலை நிர்வாகச் செயலாளராக திரு. சு. லிங்கேஸ்வரன் அவர்களும் கடமையாற்றி வருகின்றார்கள்.

## ''நால்வர் இல்லம்''

எமது சமயப் பாடசாலையில் கல்வி பயின்று வரும் மாணவர்களை சமய குரவர்கள் நால்வரின் திருநாமங்களைக்கொண்டு, நான்கு இல்லங்களாக முறையே ''சம்பந்தர் இல்லம்,'' ''அப்பர் இல்லம்,'' ''சுந்தரர் இல்லம்,'' ''மாணிக்கவாசகர் இல்லம்'' என வகுத்துள்ளோம்.

எமது சங்கத்தால் கொண்டாடப்படும் நாயன்மார்களது குருபூசைத் தினங்களில், அவ் அவ், இல்லங்களைச் சேர்ந்த மாணவர்கள் சொற்பொழிவு, பக்திப் பாடல்கள் தமிழோடிசை பாடல் முதலிய நிகழ்ச்சிகளில் பங்கு கொள்கின்றார்கள். அத்தோடு குரு பூசைத்தினங்களில் விழா மண்டபத்தை துப்பரவு செய்து மாவிலை, தோரணம் முதலியவற்றினால் அலங்கரிக்கும் பொறுப்பையும் அவ் இல்ல மாணவர்களே செய்து வருகின்றார்கள்.

இவற்றிற்கெல்லாம் வேண்டிய உதவியையும் உற்சாகத்தையும் அவ் அவ் இல்ல ஆசிரியர்கள் அளித்து வருகின்றார்கள்.

## ''நால்வர் நூலகம்''

சமய குரவர்களின் போதனைகளை சாதனையில் கடைப்பிடித்து ஒழுகிவரும் எமது சங்கத்தினர், தம் நூலகத்திற்கு ''நால்வர் நூலகம்'' என பெயரிட்டுள்ளனர். 25-5-66 நடைபெற்ற சேக்கிழார் விழாவின்போது அளவையூர் சஞ்சீவி அருட்கவி சி. விநாசித்தம்பி அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்நூலகத்தில் 250–க்கு மேற்பட்ட சமய இலக்கிய நூல்கள் உள்ளன. இடவசதி இல்லா சூழ்நிலையால் தற்போதைக்கு, எமது பாடசாலை மாணவர்களுக்கு மாத்திரம் இந்த நூலகம் பயன்படுத்தப்படுகின்றது. கூடிய விரைவில் பொதுமக்கள் அனைவருக்கும் பயன்படக்கூடிய பொது நூலகமொன்றை கொம்பனித் தெருவில் ஆரம்பித்துவைக்க எண்ணியுள்ளோம். இந்நூலகப் பொறுப்பாளராக திரு. பொ. பாலகிருஷ்ணன் அவர்கள் கடமையாற்றுகின்றார்.

## சமய அறிவுப் போட்டிகளும் பரீட்சைப் பேறுகளும்

விவேகானந்த சபையோரால் நடாத்தப்படும் அகில இலங்கை இந்து சமய பரீட்சையில் வழமைபோல் இவ்வாண்டும் 112 மாணவர்கள் பங்கு பற்றுகிறார்கள். சென்ற ஆண்டு நடைபெற்ற பரீட்சையில் மாணவர்கள் கலந்து அதில் 45 மாணவர்கள் இரண்டாம் பிரிவிலும், செல்வன். ச. நந்தகுமாரன் முதலாம் பிரிவிலும் சித்தியடைந்துள்ளார்கள். அத்தோடு எமது சங்கத்தால் இவ்வாண்டு நடாத்தப்பட்ட திருமுறைப் போட்டியில் 27 மாணவர்களும், நாவன்மைப் போட்டியில் 9 மாணவர்களும், கட்டுரைப் போட்டியில் 27 மாணவர்களும் இம்முறை பரிசில் பெற்றுள்ளார்கள். இத்தோடு கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபையாரால் நடாத்தப்பட்ட சுந்தரர் தேவாரப் போட்டியில் எமது மாணவர்கள் பங்குபற்றி பரிசில்களைப் பெற்றுள்ளார்கள்.

எம்மால் நடாத்தப்பட்ட போட்டிகளில், சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் அமைந்து நடுநிலமை ஆற்றிய திருவாளர்கள்: சைவ இளவல் சி. திருநாவுக்கரசு, இ. கணேசன், மா. குமாரசாமி, வே. பரமலிங்கம் ஆகியோர்கட்கு நாம் என்றும் கடமைப் பாடுடையோம்.

## இறை வழிபாடும் இல்ல பஜனையும்

கொம்பனித் தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும், மற்றைய உற்சவகாலங்களிலும் நடைபெற்றுவரும் கூட்டுப் பிரார்த்தனையும், பஜனையும் எமது சங்கத்தினராலே நடாத்தப்பட்டு வருகின்றன. இந்து வாலிபர் சங்க "அப்பர் அருள் நெறி" குழுவின் அன்பு அழைப்பை ஏற்று, செட்டித் தெரு பிள்ளையார் கோவில் புதுவருடத்தன்று நடைபெற்ற தேர்த்திருவிழாவின்போது எமது சங்க பஜனைக் கோஷ்டியினர் காலையிலிருந்து மாலை வரை பஜனை செய்து, சித்தி விநாயகப் பெருமானது திருஅருட் பேறையும், சைவப் பெருமக்களின் நன் மதிப்பையும் பாராட்டுதலையும் பெற்றனர். இப் பஜனையை முன்னின்று நடத்திய பெருமை திரு. வே. பெ. சாமி அவர்களையே சாரும்.

அத்துடன் அன்பர்கள் பலரின் அன்பு வேண்டுகோட்கிணங்கி இல்லங்கள் தோறும் சென்று "இல்ல பஜனை" செய்து வருகின்றோம். தற்போதைக்கு மாதம் ஒரு முறை இல்ல பஜனை செய்வதென்று முடிவு செய்துள்ளோம். இம் முயற்சிக்கு எமக்கு முன்னின்று அன்பும் ஆதரவும் நல்கி எம்மை தம் இல்லங்கட்கு அழைத்த பெருமை திருவாளர்கள். சி. சங்கரப்பிள்ளை, இ. இரத்தினம், த. சிவலிங்கம், ஆ. கந்தையா ஆகியோருக்கே சாரும். மற்றும் அன்பர்களின் ஆவலையும் பூர்த்தி செய்வோம் என உறுதி கூறுகின்றோம்.

காஞ்சிபுர மெய்கண்டான் ஆதீனம் திரு. பி. எஸ். இராஜசேகரன் ஓதுவார் அவர்களும், வட கொழும்பு இந்து பரிபாலன சபை பஜனைக் குழுவினரும் எமது அழைப்பை ஏற்று எம்மால் கொண்டாடப்பட்ட சேக்கிழார் விழாவில் தமிழோடு இசை பெருக பண்ணோடு அருட் பாடல்களை பாடினார்கள். ஓதுவார் அவர்கட்கும், சபையினருக்கும் நாம் நன்றிகூற கடமைப் பாடுடையோம்.

## அடிகளார் அருளுரையும் அம்மையார் அறிவுரையும்

தாய்நாட்டிலிருந்து சேய் நாட்டிற்கு வரும், சமயப் பெரியார்களை சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் அழைத்து சமயச் சொற்பொழிவு ஆற்றுவித்த பெருமையும் எமது சங்கத்திற்கு உண்டு. கடந்த காலங்களில் திருஅண்ணாமலை ஆதினம் குன்றக்குடி அடிகள்; வரகவி யோகி சித்தானந்த பாரதியார்; அன்புப் பழனி ஸ்ரீமத் சுவாமி பிரணவானந்த சரஸ்வதி ஆகியோர்களின் அருள்மொழிகளை மக்கள் மனதிற் பதியச் செய்த எமது சங்கம், இவ்வாண்டும் தவத்திரு யோகி சித்திரமுத்தடிகள்; திருமுருக கிருபானந்த வாரி அவர்களின் பிரதம சிஷ்யை மதுரை ஆதினம் செஞ்சொற் செம்மணி மா. சண்பகவல்லி அம்மையார் ஆகியோர்களை அழைத்து மக்களின் ஆன்ம நேயத்துக்கு ஏதுவாகிய அரிய சொற்பொழிவுகளைச் செய்துள்ளோம்.

## சேர். பொன். இராமநாதன் நினைவு தினம்

கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தாரால், பாராளுமன்ற சதுக்கத்தில் கொண்டாடப்பட்ட இராமநாதன் நினைவு தினத்தன்று, அவர்கள் அழைப்பை ஏற்று எமது சங்கமும் கலந்து அன்னாரது உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து எம் நன்றிக் கடனை தெரிவித்தோம்.

## திருவெம்பாவும் திருவாதவூரடிகள் விழாவும்

வழமைபோல் இவ்வாண்டும் எமது பஜனைக் குழுவினர் திருவெம்பாவைத் தினங்களில் அதிகாலை 3 மணிக்கு கொம்பனித் தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலிலிருந்து புறப்பட்டு கொம்பனித் தெருவிலுள்ள பிரதான தெருக்கள்தோறும் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி முதலிய பாடல்களை பாடி அதிகாலை ஐந்து மணிக்கு கோவில் வந்தடைந்து, ஆங்கு நடைபெற்ற பூஜையிலும் கலந்துகொண்டோம். சைவப் பெருமக்கள் பஜனைக் கோஷ்டியினரை மங்கள நிறை குடம் வைத்து வரவேற்று தாகசாந்தி செய்து சங்கத்தின் நன்றிக்கு இலக்கானார்கள். அத்தோடு திருவெம்பாவைத்தினங்களில் இரவு நேரத்தில் எமது சங்கத்தாரால் கோவிலில் திருவாதவூரடிகள் புராணம் படிக்கப்பெற்று பயன் சொல்லப்பட்டது. இறுதி

நாளான 10-ம் நாள் சிறந்த முறையில் திருவாதவூரடிகள் விழா கொண்டாடப் பட்டது.

## சங்கத்தால் கொண்டாடப்பட்ட குருபூசைத் தினங்களும் விழாக்களும்

சமய குரவர் நால்வரதும், ஆறுமுக நாவலர் — திருவள்ளுவர் ஆகியோரது குரு பூசைகளையும், நவராத்திரி விழா, கலை மகள் விழா, விநாயகர் பெருங் கதைப் படிப்பு, விநாயகர் சதுர்த்தி விழா, திரு வாதவூரடிகள் புராணப் படிப்பு, திருவாத வூரடிகள் விழா, சேக்கிழார் விழா முத லிய குருபூசைகளையும் விழாக்களையும் வெகு சிறப்புடன் கொண்டாடினோம்.

## திருவிளையாடற் புராணப் படிப்பு

17-7-66 வெள்ளிக்கிழமை மாலை 7-15 மணிக்கு அமைந்த சுப முகூர்த்தத் தில் ஆரம்பிக்கப்பட்ட திருவிளையாடற் புராணப் படிப்பு பிரதி வெள்ளிக்கிழமை தோறும் கொம்பனித் தெரு ஸ்ரீ சிவசுப் பிரமணிய சுவாமி கோவிலில் தொடர் விரிவுரையாக நடைபெற்று வருகின்றது. இக்கைங்கரியம் சிறப்புடன் நடைபெற்று வருவதற்கு திரு. ஆ. கந்தையா அவர்கள் தொடர்விரிவுரையாற்றி வருகின்றார்.

## நால்வர் ஆலயம்

எமது சங்கத்தின் ஆதரவில் கொம் பனித் தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் சமய குரவர்களுக்கென்று தனி ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டு திருப்பணி நடைபெற்று வருகிறது.

## நாடு போற்றும் நால்வர் நெறி

சங்கத்தின் வருட வெளியீடான ''நால்வர் நெறி'' சென்ற ஆண்டுபோல் இவ்வாண்டும் தொடர்ந்து வெளிவருகின் றது. இம்மலரை இலங்கையின் திகழ் வட-கிழக்குடன் சேர் மலைநாட்டு அறிஞப் பெருமக்களின் அரும் பெரும் அறிவுக் கட்டுரைகளும் எமது மாணவ மாணவி களின் கட்டுரைகளும் கவிதைகளும் மற் றும் தாய் நாட்டின் தன்னிகரற்ற எழுத் தாளர் கி. வா. அவர்களின் கட்டுரையும் அணி செய்கின்றன.

## தெய்வத் திருவருளால் திக்குலா

எமது பாடசாலை மாணவ மாணவி கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், விசேட பிரமுகர்கள் உட் பட 67 யாத்திரிகர்கள் 7-5-67 காலை பிரத்தியேக பஸ்மூலம் பாடல்பெற்ற ஸ்த லமான திருக்கோணேஸ்வரக் கோவிலுக்கு சென்று விசேட அபிஷேக ஆராதனையில் கலந்துகொண்டோம். போகும் வழியிலும் வரும் வழியிலும் சரித்திர பிரசித்திபெற்ற பல இடங்களையும் கோவில்களையும் பார் வையிட்டு 8-5-67 இரவு 1-30 மணிக்கு கொழும்பு வந்தடைந்தோம்.

## டீ மெல் வீதியும் ஸ்ரீ முருகன் வீதியும்

கொம்பனித் தெரு உணுப்பிட்டி வட் டாரத்தில் உள்ளதும், கொம்பனித் தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு முன்னுள்ளதுமான ''டீ மெல்'' வீதியின் ஒரு பகுதியை ''ஸ்ரீ முருகன் வீதி'' என்று மாற்றி அமைக்குமாறு கொழும்பு மாநகர சபை முதல்வரையும், ஆணையாளரையும் எமது சங்கம் வேண்டியுள்ளது. எமது நியாயமான வேண்டுகோளை கூடிய விரை வில்நிறைவேற்றித்தருவதாக திருமதி மீரு இரத்தினம் அவர்கள் உறுதி கூறியுள்ளார்.

இம்முயற்சி வெற்றிபெற, எமது சங்க உப தலைவர் திரு. வை. நா. சோமசுந்தரம் அவர்கள் அரும்பணி ஆற்றி வருகின்றார்.

## இலங்கை வானொலியும் செய்தி இதழ்களும்

எமது சங்கத்தால் கொண்டாடப் படும் சகல, விழா நிகழ்ச்சிகளையெல்லாம் தவறாது ''தினக் குறிப்பில்'' அறிவித்து வரும், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத் தாப னத்தாருக்கும், எமது சங்க நிகழ்ச்சிகளைக் காலத்துக்குக் காலம் வெளியிட்டுவரும் செய்தி இதழ்களுக்கும் எமது நன்றி.

## இந்துசமய ஆலோசனைச் சபையும் இந்து மாமன்றமும்

எமது சங்கத்தால் நடாத்தப்பட்டு வரும் நால்வர் சமயப் பாடசாலைக்கு வருடா வருடம் இந்து சமய ஆலோசனை சபையார் பண உதவி அளித்து வருகின்ற னர். இவ்வாண்டும் எமது சங்கத்திற்கு ரூபா 350/- தந்து உதவியுள்ளனர்.

அத்தோடு ஈழத்திலுள்ள நூற்றுக் கணக்கான சற்சங்கங்களை தன்னகத்தே ஒன்று சேர்த்து சைவப் பெருமக்களின் தலை சிறந்த ஸ்தாபனமாக மிளிரும் இந்துமா மன்றத்திலும் எமது சங்கம் உறுப்பினராக உள்ளதென்பதையும் அள விலா ஆனந்தத்துடன் அறியத் தருகின் றோம்.

# எமது சங்க நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட

# சமயப் பெரியார்கள் வழங்கிய

## வாழ்த்துரைகள் பின்வருமாறு

*14-10-64* வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பமாகிய நவராத்திரி விழாவுக்குச் சமுகமளித்தேன். கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் கூட்டுப் பிரார்த்தனை சிறப்பாக நடைபெற்றது. சங்கம் பல தொண்டுகளைச் செய்து வருவதை அறிந்து மிக மிக மகிழ்ச்சி அடைந்தேன். அச்சங்கத்தாருடைய தொண்டு மென்மேலும் வளர்ந்து சைவ உலகிற்குப் பயன் உதவுமாறு சிவசுப்பிரமணியப் பெருமானை வேண்டுகின்றேன்.

*14-10-66* செ. க. சண்முகம்பிள்ளை.

கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தின் அழைப்பின் பேரில் ''சக்தி வழிபாடு'' என்னும் பொருள்பற்றி ஆலய முன்றலில் பேசும் வாய்ப்பு சக்தியின் திருவருளால் இன்று எனக்கு கைகூடியது. சபையோர் எனது உரையின்போது மட்டுமல்ல, கூட்ட நிகழ்ச்சியின் போது காட்டிய அமைதி என்னை, மிகவும் கவர்ந்தது. மேற்படி சங்கத்தின் பணி கொழும்பு வாழ் சைவப் பெருமக்களுக்கு ஒரு அரிய வாய்ப்பு என்றே கருதுகிறேன்.

இ. அன்னலட்சுமி.
(வீரகேசரி)

*15-10-66*

கொம்பனித்தெரு ஸ்ரீ சைவ முன்னேற்றச் சங்கத்தினர் போன்ற ஓர் இயக்கம் நாவலர் காலத்தில் இருந்திருந்தால், மேன்மை கொள் சைவநீதி இன்று உலகமெல்லாம் பரவும் வகை தெரிந்திருக்கும். இந்த சிவசுப்பிரமணிய கோவில் மண்டபத்துக்கு நான் வந்து இந்த இளைஞர்களைப் பார்க்கும் போதுள்ளம், நாவலர் காலத்து வண்ணை வைத்தீஸ்வராலயத்தின் பிரசார மண்டப நினைவு வருகிறது. இத்தச் சங்கத்தின் இயக்குநர்களைப் பார்க்கும்போது நாவலரின் சிஷ்யரின் நினைவு வருகின்றது. இச்சங்கத்தினர் என்னை சமயத்துறையில்—மிகு சைவத்துறையில் மேன்மேலும் தூண்டுவதற்காக நான் அவர்களுக்கு பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

ச. மகேசன்.
(தினகரன்)

*17-10-66*

இன்று கொம்பனித்தெரு சைவமுன்னேற்றச் சங்க ஆதரவில் இம்மன்றத்தில் சொற்பொழிவு ஆற்றினேன். இதன் முன்னேற்றம் மிகவும் போற்றத்தக்கது. 1959ம் ஆண்டில் இருந்து இன்று வரை இக்கோவில் அடைந்த முன்னேற்றம் கற்சிலைபோல் என்றும் அழியாது.

*20-10-66* ''சைவ இளவல்''

ஒரு சில வாலிபர்களின் பெரு முயற்சியாலே ஒரு பெரும் விழாவே, வெகு அற்புதமாக நடக்கும் பெரும் புதுமை கலாதேவியின் அருளாகத்தான் இருக்கும்! ஆர்வமிக்க அனைவருக்கும் அன்னை அருள் பாலிப்பாளாக!

யோகா பாலச்சந்திரன்.
(தினபதி)

*21-10-66*

கொம்பனித்தெரு சைவமுன்னேற்றச் சங்கம் செய்து வரும் பணி போற்றத் தக்கது. சைவத்தையும், தமிழையும், தனது இரு கண்களாகக் கொண்டு அவர்கள் ஆற்றும் தன்னலமற்ற தொண்டு வானூர் மதியம் போல் நாளும் வளர செந்தமிழ்ச் சொக்கன் சேவடிகளைப் போற்றுகின்றேன்.

22-10-66 வசந்தா வைத்தியநாதன்.

கலியுக வரதராகிய முருகப் பெருமான் திருக்கோயிலில், கொம்பனித்தெரு சைவமுன்னேற்றச் சங்கத்தினர் உள்ளன்புடன் ஆற்றி வரும் சமயத் தொண்டு எல்லோராலும் போற்றப்படக்கூடியதொன்று. அவர்கள் நவராத்திரி, முதலிய விழாக்களைத் திறமையுடன் கொண்டாடியும், வருங்கால சைவப் பெரு மக்களாய் விளங்க வேண்டிய சிறுவர் சிறுமிகட்குச் சமய பாடங்கள் திருப்பாடல் கள் பயிற்றி வருவதால், அளப்பற்ற சிவபுண்ணியம் செய்து வருகின்றனர். அவர் கள் இயற்றும் தொண்டு செழித்தோங்க எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பாலிப்பதாக.

22-10-66 மு. வைரவப்பிள்ளை

சமயம் வளர, சாத்திரம் வளர, அன்பு வளர, அறப்பண்பு வளர தொண் டாற்றுவது சைவ முன்னேற்ற சங்கம். இப்படியான உயர்ந்த தொண்டாற்றும் சங் கத்தில் முருகன் என்னையும் ஈர்த்து பேசும் பணியை அளித்து அருள் புரிந்தது போல், இந்த சிறந்த சைவமுன்னேற்றச் சங்கத்தையும், இச்சங்கத்தில் பய பக்தி யுடன் பணியாற்றும் பக்த தொண்டர்களையும் முருகன் நீடூழி வளர்ச்சியடைய அருள் புரிய வேண்டும் என்று என் உள்ளங்கலந்த அன்போடும் பக்தியோடும் பிரார்த் தித்துக் கொள்கிறேன். வளர்க சைவ முன்னேற்ற சங்கம்! வாழ்க சைவ முன்னேற்ற சங்கத்தின் அன்பர்கள்!!

வணக்கம்

110, சிங்கன்ன செட்டி தெரு, மா. சண்பகவல்லி

சிந்தாதரி பேட்டை,

மதராஸ்-2. 1-11-66.

சைவ முன்னேற்றச் சங்கத்தார் பலவித இடையூறுகளுக்கிடையே குறுகிய இடம், வசதியில்லா சூழ்நிலை தமது சைவ ஆர்வம் ஒன்றின் துணை கொண்டே சாதித்து வரும் சாதனைகள் மிகவும் போற்றத்தக்கவை; பின்பற்றத்தக்கவை என்று பெருமைப்படுகிறேன். அவர்தம் பணி வாழ வேண்டும் வளர வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கிறோம்.

27-11-66 பாலம் லக்ஷ்மணன்.

கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தார் கடந்த பதின்மூன்று வரு டங்களாகக் கொழும்பில் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்காகச் செய்து வரும் பணிகள் பாராட்டத் தக்கவை. ஈழத்தின் பல பாகங்களிலுள்ள இளைஞர்கள் இவர்களின் பாதையைப் பின்பற்றி சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டு செய்ய வேண்டுமென்று விழைகின்றேன். ஆறுமுக நாவலர் பெருமளவில் செய்த தொண்டை இச்சங்கம் சிறு அளவிலாவது செய்து வருவது மகிழ்ச்சிக்குரிய செயலாகும்.

4-12-66 ஆ. ச. நடராசா.

தலை நகரில் பல ஆண்டுகளாக தமிழ்ப் பணியும் சைவப் பணியும் ஆற்றி வரும் கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தினர் பாராட்டுக்குரியவர்கள். அவர்கள் பணி தொடர்ந்து நடக்கவும், சங்கம் மேன்மேலும் வளரவும் அன்னை பராசக்தி அருள்வாளாக.

4-12-66 இ. மகேஸ்வரன்.

''இன்னல் பலவிடையூறு இழைத்திடவும் தயங்காது
அன்பினுடன் பணிபுரியு மன்பர்கடம் செயல் வியந்தோம்
கன்னல் மொழிக் குறமங்கை கணவனெனம் தருள் வள்ளல்
இன்னமும் நற்பணி பெருக இன்னருள்கள் புரிவானே.''

*28-12-66* கு. சி. கதிரவேலு.

*முருகா! உன் அன்புடைச் செல்வர்கள் வளர்க்கும் சங்கம் என்றும் தமிழும் சைவமும் ஓங்க உனது பூரண அருளைத் தந்தருள வேண்டு மென வேண்டியும், இச்சங்க வளர்ப்பாளர்கட்கு என் அன்பு ஆசியையும் உரிமையாக்குகிறேன்.*

*28-12-66* நா. குமாரசாமி.

*எமதருமை, சைவ முன்னேற்ற சங்கம், தழைத்தோங்கி முருகனுடைய கிருபை பிரகாசிக்கும்படியாக அடியேன், ஆசிவழங்கி வாழ்த்துகின்றேன்.*

*உங்கள் நலன் காண விழையும், அடியேன்*
*18-2-67* சித்திரமுத்தன்

*மேலைத்தேச மோக வலையில் மயங்கி வாழும் மக்கள் குழுவில், கைவிரல் விட்டெண்ணக்கூடிய, இன்முகமும் இன்சொல்லும் நன் செயலும் ஒருங்கே சேர்ந்த ஓர் கூட்டம் சிவதொண்டு செய்தல் வேண்டும், என கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்கம் ஒன்றை சமைத்து, அது வாயிலாக அளப்பரும் பணியை ஆற்றி வருவதை அறியாதாரே!*

''மொழிக்கும் சமயத்துக்கும் முதலிடம் கொடு!
தாய் மொழி உன் விழிக்கு நேர்!
சமயம் உன் உயிருக்கு நேர்!''

*என்று நாமனைவரும் மேடை ஏறி பலரும் அறிய சொல்லம்பு தொடுப்பதுடன் ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற பெரும் பண்பாட்டுக்கு முற்றுப்புள்ளி போட்டு விடுகின்றோம்.*

*உண்மையான ஆர்வத்துடனும், விடா முயற்சியுடனும் பள்ளிச் சிறார் பலரையும் கூவி அழைத்து சமய போதனையையும், சமயச் சொற் பொழிவுகளையும் கற்பித்தும், சமய சார்புள்ள சகல விழாக்களைக் கொண்டாடியும் வருவதை சைவ சமயத்தில் விசுவாசமுள்ளவர்கள் ஒவ்வொருவரும் பாராட்டுவார்கள்.*

*மேலும் மேலும் மேன்மை கொள் சைவ நீதியை ஒளிபடரச் செய்ய, சைவ முன்னேற்றச் சங்கத்துக்கு, எல்லாம் வல்ல இறைவன் உடன் நின்று உதவுவாராக!*

*கல்வி அமைச்சு,* ம. சி. சிதம்பரம்பிள்ளை
*கொழும்பு. 5-5-67.*

*சைவ முன்னேற்றச் சங்கம் சைவ சமயத்திற்கு செய்து வரும் தொண்டு மென்மேலும் ஓங்கி வருவதற்கு முருகன் அருள்புரிவாராக. இச்சங்கத்திற்கு வேண்டிய தொண்டைச் செய்ய என்றும் நான் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*25-5-67* க. முருகானந்தன்

*சமயப் பணியும் தமிழ்ப் பணியும் ஆற்றிவரும் சைவ முன்னேற்றச் சங்கம் மேலும் தன் தொண்டுகளை புரிவதற்கு இறை அருளை வேண்டுகிறேன்.*

ம. பார்வதிநாதசிவம்
*25-5-67* *(சுதந்திரன்)*

கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்கம் சைவப்பணி மிகச் சிறப்பாக நடாத்தி வருகின்றது. இன்று திருஞான சம்பந்த சுவாமிகளின் குரு பூசை விழா வில் தலைமை தாங்கும் பேறு எனக்குக் கிடைத்தது. மென் மேலும் சைவ சேவை இவ்விடத்தில் ஓங்கவேண்டுமென்று முருகப் பெருமானை வேண்டுகின்றேன்.

*26-5-67*

பொன். ஸ்ரீஸ்கந்தராஜா
(சைவ சிகாமணி-முன்னாள் நீதியரசர்)

கொம்பனித் தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலை முதல் இடமாகக் கொண்ட உங்கள் சைவ முன்னேற்றச் சங்கம், சைவத்தையும்—தமிழையும் தழைத் தோங்கச் செய்து வரும் அரும்பணி கண்டு யானும் எமது சங்கமும் மென் மேலும் ஓங்கி வளர வாயார வாழ்த்துகின்றோம் மேலும் சமயத் துறைகளில் நீங்களும் கலந்து, எம்மையும் கலந்து பணியாற்ற ஊக்குவிக்கும் மனப்பான்மை கொண்டுள் ளதையிட்டு மிக மகிழ்ச்சி கொள்கிறோம். ஓங்குக! சைவப் பணி! ஓங்குக!! தமிழ் வளர்ச்சி!!!

சு. பாலசிங்கம்
கௌரவ பொதுச் செயலாளர்
வட கொழும்பு இந்து பரிபாலன சங்கம்.

*12-6-67*

கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தினர் நடாத்தும் சைவப்பணி யும், தமிழ்ப் பணியும் செவ்வனே நடைபெற்று வருவது சாலச் சிறப்புடையதாம். இனியும் இச்சங்கம் இன்று சேக்கிழார் விழாவை சிறப்புற நடத்தியது போல் மற்றும் அடியார்கள் பெருமக்களுடைய விழாவையும், குருபூசைகளையும் சிறப்புற நடாத்தி சங்கமும் மென் மேலும் வளர்வதாகுக! ஓங்குக பணி!

*12-6-67*

பி. ஏ. எஸ். ராஜசேகரன்
(காஞ்சிபுர மெய்கண்டான் ஆதீனம்)

கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தார் கொழும்பின் இப்பகுதி யிலே, சைவமும் தமிழும் தழைத்தோங்கச் செய்துவரும், அரும் பெரும் தொண் டினைக் கண்ணாரக் கண்டு களிபேருவகை கொண்டோம். செந்தமிழும் சைவமும் அத்துவிதமானவை. செந்தமிழின் தெளிவே சைவம். ஆதலால் எம்முடைய இளம் குழந்தைகளின் உள்ளத்திலே சைவ வித்தை விதைப்பதற்கு அரும்பணிபுரியும் இச்சங் கத்தார் செந்தமிழுக்கும் ஒருங்கே பணிசெய்து வருகின்றனர். இச் சங்கத்தாரின் தொண்டு பல்லாண்டு வாழ்கவென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

பதிப்பாசிரியர்
கல்வி நூல் வெளியீட்டுத் திணைக்களம்
கொழும்பு-3. 11-7-67.

செ. வேலாயுதபிள்ளை

கொம்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்க அழைப்பிலே சுந்தரர் குருபூசைப் புண்ணிய தினத்திலே சுந்தரர் காட்டும் நெறி என்னும் தலைப்பிலே பேசும் வாய்ப்புத் திருமுருகன் திருஅருளினாலே எளியேனுக்குக் கிடைத்தது. இச்சங்கம் ஆற்றிவருகின்ற பெருந் தொண்டு பாராட்டுக்குரியதே! இந்தக் காலத்திலே பகுத்தறிவாளர்கள் கட வுள் எங்கே இருக்கின்றார்? என்று கேட்கின்றபோது, இங்கே இருக்கின்றார் என்று காட்டுகின்ற திருவருட்பேறு இந்தச் சைவ முன்னேற்றச் சங்கத்தைச் சேர்ந்த சீர் அடியார்கள் இடத்திலே பொலிந்திருக்கின்றதைப் பார்க்கின்றோம். உலகத்து உண் டென்பதில் வென்பான் வையத்துள்;- அலகையான் வைக்கப்படும்" என்பது தெய் வத் திருக்குறள். விளக்கமாகச் சொன்னால் பதி, பசு, பாசம் என்ற மூன்றையும் இல்லை என்று சொல்பவர்கள் பூமியிலே பேயாகக் கணிக்கப்படுவார்கள்; ஆகவே பகுத்தறிவாளர்கள் விதண்டவாதம்பேசினால் அவர்களைப் பேய்கள்என்று கழித்துவிடு வதைவிட வேறு என்ன செய்யமுடியும்? ஆனால் ஒன்று சொல்ல ஆசைப்படுகின்றேன். சைவத்தை அலசிப் படித்து அங்கே காரண காரிய தொடர்பாக பொருள்கள் செறிந் திருப்பதை மற்றவர்களுக்குக்காட்ட ஒவ்வொருவரும் அயராதுழைக்கவேண்டும்!

வாழ்க சைவம்! வாழ்க செந்தமிழ்!

*12-8-67*

செ. தனபாலசிங்கம்

# எமது உளங்கனிந்த நன்றிக்கு உரியவர்கள்!

- அன்பு அழைப்பை ஏற்று எமது விழாக்களில் தலைமை தாங்கிய - சொற்பொழிவு ஆற்றிய பெருமக்கள்.
- ஆதரவு நல்கிய அறக்காவலர் சபையினர்.
- இன்முகத்துடன் குருபூசைகளையும்-விழாக்களையும் சிறப்புடன் கொண்டாடிய உபயகாரர்கள்.
- ஈழத்து செய்தி இதழ்கள்.
- உற்ற துணை புரிந்து விளம்பரம் சேகரித்துத் தந்தவர்கள்.
- ஊக்கமும் உழைப்பும் நல்கி எமது சங்க வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர்கள்.
- எழில்மிகு ''நால்வர் நெறி'' மலருக்கு மனமுவந்து கட்டுரை, கவிதைகள் அளித்தவர்கள்.
- ஏகமாய் நின்ற இறைவன் நெறி புகழும் ''நால்வர் நெறி'' மலருக்கு விளம்பரம்தந்துதவிய வணிகப் பெருமக்கள்.
- ஐயம் திரிபுற சமயக் கல்வி புகட்டும் ''நால்வர் சமயப் பாடசாலை'' ஆசிரியர்கள்.
- ஒலிபரப்பு கூட்டுத் தாபன தமிழ் நிகழ்ச்சிப் பிரிவினர்.
- ஓதுவார் பி. எஸ். இராஜசேகரன் அவர்கள்.
- ஔவை காட்டிய வழியில் ஒழுகி - ஒழுக்க சீலர்களாக திகழும் எமது பாடசாலை மாணவர்கள்.

வணக்கம்.

க. பாலசுப்பிரமணியம்
(கௌரவ செயலாளர்)
26—8—67.

சங்கப் பணிமனை,
131, கியூ வீதி,
கொழும்பு-2.



அப்பர்



சுந்தரர்



சம்பந்தர்



மாணிக்கவாசகர்

''பூழியர் கோன் வெப்பொழித்த புகலியேர்கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்த பிரானடி போற்றி
வாழி திருநாவலூர் வன்தொண்டர் பதம் போற்றி
ஊர்மலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி! போற்றி!''

உ



*From*

*A Devotee*

With
best Compliments
from

**STERLING PRODUCTS LTD.**

99, MAIN STREET,
COLOMBO.

எல்லா கார்களுக்கும்
ட்ரக்குகளுக்கும்
தேவையான

டெலமைட் பிரேக்குகள்
கிளச் லைனிங்கள்
டெலமைட் சைலென்சர்கள்
முதலியனவற்றிற்கு

**பொன்கர்ஸ் லிமிட்டெட்,**

2C, கே. சிறில், சி. பெரேரு மாவத்தை,
கொழும்பு-13.

தொலைபேசி: 3477

ஈழத்தில் திரைப்பட விநியோகத்தில் முதன்மை ஸ்தானத்தைப்
பெற்றுள்ள "சினிமாஸ் லிமிடெற்"
அளிக்கவிருக்கும் வெற்றிச்சித்திரங்கள் சில.........!

**சரஸ்வதி சபதம்** (கலர்)
சிவாஜி, ஜெமினி, விஜயா,

**பறக்கும் பாவை** (கலர்)
எம். ஜி. ஆர், சரோஜாதேவி,

**படகோட்டி** (கலர்)
எம். ஜி. ஆர். சரோஜாதேவி,

**வல்லவன் ஒருவன்**
ஜெய்சங்கர், விஜயலட்சுமி,

**நாம் மூவர்**
ரவிச்சந்திரன், ஜெய்சங்கர்

**சந்திரோதயம்**
எம். ஜி. ஆர். ஜெயலலிதா

**நீலவானம்**
சிவாஜி, தேவிகா

**ராமு**
ஜெமினி, கே. ஆர். விஜயா.

**மணிமகுடம்**
எஸ். எஸ். ஆர். விஜயகுமாரி.

**குழந்தையும் தெய்வமும்**
ஜெய்சங்கர், ஜமுனா

**மேஜர் சந்திரகாந்**
முத்துராமன், ஜெயலலிதா

**தட்டுங்கள் திறக்கப்படும்**
சந்திரபாபு, சாவித்திரி

**முகராசி**
எம். ஜி. ஆர், ஜெயலலிதா

# CEYLON THEATRES LTD.

ANNOUNCE WITH PRIDE THE SCREENING SHORTLY IN THEIR ISLAND-WIDE CIRCUIT THE FINEST TAMIL FILMS EVER PRODUCED.

## SOME OF WHICH ARE

| | | |
|---|---|---|
| **ARASA KATTALAI** | With | M. G. Ramachandran, Saroja Devi, Jayalalitha. |
| **YAAR NEE** | With | Jayashanker, Jayalalitha, P. S. Veerappa. |
| **ITHAYATHIL NEE** | With | Gemini Ganeshan, Devika. |
| **RAAJA VEETU PILLAI** | With | Jayashanker, Jayalalitha, Nambiar |
| **GOWRI KALYANAM** | With | Jayashanker, Jayalalitha, Ravichander, Nagesh |
| **PARASAKTHIYIN KARUNAI** | With | Sivaji Ganeshan, Sunderambal |
| **THANE MALLAI** | With | Gemini Ganeshan, K. R. Vijaya, Sunderarajan, Nagesh |
| **THAALI PAKKIAM** | With | M. G. Ramachandran, Saroja Devi |
| **THAAYE UNNAKAHA** | With | Sivaji Ganeshan, Padmini, Mutturaman, Devika, S. S. Rajendran, Vijayakumari, Nagesh, Manorama |
| **PAYSUM DEIVAM** | With | Sivaji Ganeshan, Devika |
| **CHINNAN CHIRU ULAGAM** | With | Gemini Ganeshan, K. R. Vijaya Radhika, Nagesh |

Remember

FOR

ANY CATERING SERVICE

&

PARTIES

PLEASE CONTACT

**HOTEL METROPOLE**

30, QUEEN STREET, COLOMBO-1.

*Telephone*: 2066

**"AMBASSADOR"**

**ESSENCE OF COCONUT**

(IN BOTTLES)

DRINK

FOR

HEALTH & HAPPINESS

**K. K. MADHAVAN & CO. LTD.**

**No. 30, QUEEN STREET, — COLOMBO-1.**

*Telephone*: 6036

தமிழகத்தின்
தலைசிறந்த இலக்கிய
மாத இதழ்

# தீபம்

ஒவ்வோர்
இதழும் ஓர்
கலைக்கருவூலம்

ஆசிரியர்:
நா. பார்த்தசாரதி (மணிவண்ணன்)

ஒவ்வோர் இதழிலும் ஓர் இலக்கியச் சந்திப்பு
ஒவ்வோர் இதழிலும் ஒரு குறுநாவல்
ஒவ்வோர் இதழிலும் உயர்தரமான புத்தக விமர்சனப்பகுதி
ஒவ்வோர் இதழிலும் இலக்கியத் திறனாய்வுக் கட்டுரை
எல்லா இதழிலும் இலக்கியத்தரம்

இலங்கையில் இனிமேல் தொடர்ந்து கிடைக்கும்

இலங்கையில் எமது மொத்த விற்பனையாளர்:

# M. LAKSHMANAN

75, BARBER STREET, — COLOMBO-11.

Telephone: 78549

# CANE CRAFTSMEN

FOR

ALL YOUR FUNCTIONS

WE HIRE

**CANE CHAIRS, PLAIN CHAIRS**
**TABLES, TEAPOYS CUTLERY,**
**AND CROCKERY**

69, VELLONS PASSAGE,
COLOMBO-2.

T'PHONE: 79026

# GOPAL TOOTH POWDER & LUXOL

*M. A. K. S.*

# *Manuel Nadar & Co.,*

**34, SEA STREET, COLOMBO-11.**

*Space Donated By*

*Maharaja Organisation Ltd.,*

*Maharaja Building*

*Colombo-11.*

உங்கள் வீட்டுப் பாவனைக்கு நீங்கள்

# டொலர்

இலச்சினை பொறித்த

அலுமினியம், எவர்சில்வர், பித்தளை

பாத்திரங்களைத் தெரிவுசெய்தால்

## நீடித்த உழைப்பிற்கும் உறுதிக்கும்

உத்தரவாதமுள்ளவற்றை வாங்குகின்றீர்களென்று பொருள்

ஈடு இணையற்ற எம்நாட்டுத் தொழிலுக்கு துணை செய்து

அதை வளம்படுத்த முன்வாரீர்!!

# டொலர் கார்ப்பொரேஷன்

14, டாம் வீதி, — கொழும்பு - 12.

தொலைபேசி: 6910

தொழில் நிலையம்: மாவிட்டபுரம்.

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
கொழும்பு 6

A HOUSEWIFE'S CHOICE

**BARNETT & FOSTER'S**

FLAVOURING ESSENCES & FOOD COLOURS

**KNOWN THE WORLD OVER**
**AND USED IN EVERY HOME**

**"RED CLUB"**

**BRAND**

**CULINARY FLAVOURS & COLOURS**

and **"NUCOL"** Essences in
**1 oz. BOTTLES**

*DISTRIBUTORS:-*

**THE**

**COLOMBO ESSENCES & GAS SUPPLIERS**

143, Justice Akbar Mawatha - Colombo-

(Formerly 39, RIFLE STREET - COLOMBO-2.)

Grams:- **FRUIT** Phone:- **5667**

Printed at Rajeswari Press, 18, Prince Street, Colombo-11.